பக்கங்கள்: 22

விலை: 30.00

# தீம்புனல்

THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:37 08.01.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052



புட்டும் தேங்காய்ப் பூவும் என்னவாயிற்று?

அவதானி

பக்கம் 05



மின்சாரமும் நாமும்

வேதநாயகம் தபேந்திரன்

பக்கம் 15

வர்மா




# கடனில் மூழ்கிறது இலங்கை மீட்க யார் வருவார்?



இந்துசமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கைக்கு உலகளாவிய ரீதியில் நற்பெயர் உள்ளது. உல்லாசப் பயணிகளின் சொர்க்க பூமியாக இருந்த இலங்கை, உள்நாட்டு யுத்தத்தால் மரணங்கள் மலிந்த பூமியானது. யுத்த காலத்தில் இலங்கையை உற்றுப் பார்த்த உலகம் இன்றைய பொருளாதார நெருக்கடியை உன்னிப்பாக அவதானிக்கிறது.

பொருளாதார அபிவிருத்தி, நவீன உள் கட்டமைப்பு வசதி, அபிவிருத்தி என்பனவற்றில் அதிக அக்கறை காட்டிய இலங்கை எங்கெங்கு கடன் வாங்க முடியுமோ அங்கெல்லாம் அளவு கணக்கின்றி கடன் வாங்கியது. வாங்கிய கடனைத்திருப்பிச் செலுத்த முடியாத நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றால் பல்வேறு உலக நாடுகளும் நிதி நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. மருத்துவத்துக்கும், தடுப்பூசிகளுக்கும் பெருந்தொகையை ஒதுக்கியுள்ளன. கொரோனவால் ஏற்பட்ட வேலை வாய்ப்பின்மை, வருவாய் இழப்பு உள்ளிட்டவற்றால் பொருளாதாரச் சிக்கல்கள் உலகம்

▶20

# உலக வல்லரசுகளின் போட்டி அரசியலுக்குள் எத்தியோப்பிய உள்ளக மோதல் மாறுகிறதா?

ஐ.வி.மகாசேனன்

சர்வதேச அரசியலானது, யதார்த்தவாதம் சார்ந்த கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. அதன் நவீன வடிவத்தை அரசறிவியலாளர் கெனத் வொய்ஸ் வழங்கியுள்ளார். அவர் அரசியலை எழுமாத்திரமாகவும் வெறும் மனித உணர்வுகளுக்குள் பார்க்காமல் இராணுவ மற்றும் சமூக கட்டமைப்பு யதார்த்தத்தினூடாகப் பார்க்க வேண்டுமென குறிப்பிட்டார். இன்று பெரும்பாலான தேசிய அரசுகளிலும் அதன் இணைப்பாக சர்வதேச அரசியலையும் கட்டமைப்பு யதார்த்தவாத சிந்தனைகள் நிறைந்துள்ளது. குறிப்பாக கொரோனா அரசியல் நகர்த்தும் உலக ஒழுங்குக்கான மாற்றத்துக்கான நிலைமாறு காலப் பகுதியில் உலக அரசியல் தேசிய அரசுகளை நிரப்பியுள்ள போர்களையே அதிகமாக உரையாடுகிறது. இக்கட்டுரையும் எத்தியோப்பியாவில் 2021 ஆம் ஆண்டு முழுமையாகத் தொடர்ந்த உள்நாட்டுப் போரின் 2022 ஆம் ஆண்டுக்கான போக்கினைத் தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.



நவம்பர்-04, 2020 அன்று, எத்தியோப்பிய இராணுவத்தின் வடக்குக் கட்டளையின் இராணுவத் தளங்களை டிக்ரே மக்கள் விடுதலை முன்னணி (TPLF) கிளர்ச்சிப்படை தாக்கிய பின்னர், அதற்கு எதிராக இராணுவப் பதிலடிக்கு எத்தியோப்பியப் பிரதமர் அபி அஹ்மட் உத்தரவிட்டதைத் தொடர்ந்து உள்ளக மோதல் தொடங்கியது. தற்போதைய அபி அஹ்மட் தலைமையிலான அரசாங்கத்திற்கும் டிக்ரே மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே பல மாதங்களாக அதிகரித்த பதற்றத்தைத் தொடர்ந்தே போர் வெடித்திருந்தது. டிக்ரே மக்கள் விடுதலை முன்னணி எத்தியோப்பியாவை முன்னர் ஆட்சி செய்த, மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணியில் ஆதிக்கம் செலுத்திய கட்சியாகும். இது 1991 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை அடக்குமுறை சர்வாதிகார அரசாங்கத்தை வழிநடத்தியது. 2018 ஆம் ஆண்டு அபி அஹ்மட்டின் தலைமையில் மக்களின் பரவலான அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தே டிக்ரே மக்கள் விடுதலை முன்னணியின் ஆட்சி வீழ்த்தப்பட்டது.

அபி அஹ்மட் 2018 இல் எத்தியோப்பியப் பிரதமராகப் பதவியேற்றதும் எரித்திரியாவுடனான தனது நாட்டின் 20 ஆண்டு கால மோதலை முடிவுக்குக் கொண்டு வந்ததற்காக 2019 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார். இதனைத் தொடர்ந்து எத்தியோப்பிய இராணுவத்தில் ஆதிக்கம் செலுத்தும் எரித்தியாவுடன் எல்லையை பகிரும் எத்தியோப்பியாவின் டிக்ரே பிரதேசத்தின் டிக்ரேயன் இனக்குழுமத்தின் செறிவைக் குறைக்கும் வகையில் இராணுவத்தின் உயர் பதவிகளுக்கு இன வேறுபாட்டைக் கொண்டு வருவதற்கான நகர்வுகளை மேற்கொண்டார். இது டிக்ரே மக்கள் விடுதலை முன்னணியை ஆத்திரமூட்டும் செயல்களாக அமைந்தது.

எத்தியோப்பாவின் டிக்ரே பிரதேசத்தில் ஆரம்பத்தில் எத்தியோப்பிய இராணுவம் ஒரு விரைவான தாக்குதலை நடாத்தியது. இது 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கிளர்ச்சியை முறியடித்ததாகத் தோன்றியது. ஆனால் டிக்ரேயன் படைகள் கோடையில் தங்கள் பிராந்திய தலைநகரான மெக்கெலை மீண்டும் கைப்பற்றி மேலும் முன்னேற்றங்களைச் செய்தன. இது எத்தியோப்பியாவின் முன்னாள் எதிரியான எரித்திரியாவில் இருந்து துருப்புக்கள் பிரசன்னத்தை உள்ளடக்கிய ஒரு நீடித்த மோதலாக மாற்றியது. போரில் அனைத்துத் தரப்பினரும் அட்டூழியங்களைச் செய்ததாக ஐக்கியநாடுகள் சபை குற்றம் சாட்டியுள்ளது. மோதல் தொடங்கியதில் இருந்து 1மில்லியனுக்கும் அதிகமான மக்கள் டிக்ரேயில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர். மேலும் டிக்ரேயில் 6 மில்லியன் மக்கள் தொகையில் 5.2 மில்லியன் பேர் பசியை எதிர்கொள்கின்றனர் என்று சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க ஏஜென்சி தெரிவித்துள்ளது.

நவம்பர் 2020 இல் தொடங்கிய எத்தியோப்பியாவின் உள்நாட்டுப் போர், 2021 முழுவதும் தீவிரமடைந்து பல திருப்பங்களை எடுத்தது. 2021-நவம்பர் காலப்பகுதியில் எத்தியோப்பியாவின் அரசாங்கம் தோல்வியின் விளிம்பில் இருப்பதான தோற்றப்பாடு காணப்பட்டது. டிக்ரே மக்கள் விடுதலை முன்னணியினர் எத்தியோப்பியாவின் தலைநகரான அடிஸ் அபாபாவை நோக்கி முன்னேறியதுடன், மற்ற பிரிவினைவாதக் குழுக்களான ஒரோமோ லிபரேஷன் படையுடன் கூட்டணியை அறிவித்து அரசாங்கத்தை அச்சுறுத்தியது. மேலும், அரசாங்கம் அறிவித்த தீர்க்கமான போர்க்கள வெற்றிகள் மீதான எத்தியோப்பியாவின் பெரும் பின்னடைவுக்கு மத்தியில் பிரதமர் அபி அஹ்மட் தனிப்பட்ட முறையில் இராணுவத்தை வழிநடத்த முன்னோக்கிச் சென்றார். டிசம்பரில் அரசாங்கப் படைகள் பல முக்கிய நகரங்களை மீண்டும் கைப்பற்றின. அதைத்தொடர்ந்து டிக்ரே மக்கள் விடுதலை முன்னணி தன் படைகள் பின்வாங்கி தங்கள் சொந்தப் பகுதிக்குத் திரும்பியுள்ளதாக டிசம்பர்-19 அன்று அறிவித்தார். அந்த அறிக்கையில் பேச்சுவார்த்தைகளுக்கான அழைப்பையும் உள்ளடக்கியிருந்தது. டிக்ரேயன் கிளர்ச்சியாளர்கள் பின்வாங்குவதாக அறிவித்த சில நாட்களுக்குப் பிறகு, தலைநகர் அடிஸ் அபாபாவிற்கு வடக்கே உள்ள மூலோபாய நகரங்களை அரசாங்கம் மீட்டெடுத்ததைத் தொடர்ந்து, எத்தியோப்பியாவின் மத்திய அரசு அதன் படைகள் வடக்கு டிக்ரே பகுதிக்குள் முன்னேறாது என்று கூறியது.

ஒரு வருடத்துக்கு மேலாக இடம்பெற்று ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிவாங்கிய தேவையற்ற உள்நாட்டுப் போரின் போக்கில் டிசம்பர் இறுதியில் ஒரு மாறுதல் ஏற்பட்டுள்ளது. அமைதியான தீர்வுக்கான வாய்ப்பு அரசியல் வெளியில் அவதானிக்கப்படுகிறது. உத்தியோகபூர்வ சமாதானப் பேச்சுக்கள் எதுவும் தொடங்கவில்லை என்றாலும், சமீபத்திய இருதரப்பு அறிவிப்புக்கள் சாத்தியமான போர் நிறுத்தத்திற்கு வழிவகுக்கும் என்று மனிதாபிமான அமைப்புகள் நம்புகின்றன. எனினும் சர்வதேச ஏகாதிபத்திய அரசுகளின் நலன்கள் எத்தியோப்பியாவின் சமாதானத்தை உறுதிப்படுத்தக் கூடியனவா? என நுணுக்கமாக அவதானித்தல் வேண்டும்.

> **அபி அஹ்மட் 2018 இல் எத்தியோப்பியா பிரதமராகப் பதவியேற்றதும் எரித்திரியாவுடனான தனது நாட்டின் 20 ஆண்டு கால மோதலை முடிவுக்குக் கொண்டு வந்ததற்காக 2019 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.**

ஒன்று, சீனா எத்தியோப்பிய அரசாங்கத்துக்கான ஆதரவுத் தளத்தை உறுதிப்படுத்தியுள்ளது. சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ டிசம்பர்-1 அன்று எத்தியோப்பியாவுக்குச் சென்று எத்தியோப்பிய வெளியுறவு அமைச்சர் டெமேக் மெகோனனுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஒரு செய்தியாளர் கூட்டத்தில், எத்தியோப்பியாவின் உள் விவகாரங்களில் எந்தவொரு வெளிநாட்டு தலையீட்டையும் சீனா நிராகரிப்பதாக வாங் வலியுறுத்தினார். எதியோப்பிய உள்நாட்டு விவகாரங்களில் வெளிப்புற அரசியல் நலன்களைத் திணிக்கும் எந்தவொரு முயற்சிக்கும் சீனா தனது எதிர்ப்பை வெளிப்படுத்துவதுடன், எத்தியோப்பிய அரசாங்கம் மற்றும் பிரதமர் அபி அஹ்மட் ஆகியோருக்கு அதன் தீவிர ஆதரவையும் அவர் மேலும் உறுதிப்படுத்தினார்.

இரண்டு, டிசம்பர்-05 அன்று எத்தியோப்பியாவின் தலைநகரில் வடக்கு டைக்ரே பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தலைநகரில் நடைபெற்ற அரசாங்க சார்பு பேரணியில் டிக்ரே மக்கள் விடுதலை முன்னணி குழுவைக் கண்டித்தனர். உள்ளூர் ஒளிபரப்பாளரான FANA, ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாக குரல் கொடுத்தனர் என செய்தி வெளியிட்டுள்ளது. அரசாங்கத்துக்கு ஆதரவான குறித்த பேரணியில் எதியோப்பியாவின் உள்விவகாரங்களில் மேற்கத்தியத் தலையிடுதலை கண்டிக்கும் பலகைகளையும், கோஷங்களையும் அவர்கள் ஏந்தியிருந்தனர். மற்றும் டிக்ரேயன்களும் டிக்ரே மக்கள் வடுதலை முன்னணியும் ஒன்றல்ல” “எத்தியோப்பியாவின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையில் சமரசம் இல்லை” ஆகிய இரண்டு முழக்கங்களும் எழுப்பப்பட்டன. இது அரசாங்கத்தின் மேற்கத்தேய எதிர்ப்பு நிலையையே உறுதி செய்கிறது.

மூன்று, தற்போதைய எத்தியோப்பியாவின் கிளர்ச்சிப்படையின் முன்னைய ஆட்சிக்காலப்பகுதியில் டிக்ரே மக்கள் விடுதலை முன்னணி அமெரிக்காவின் தீவிர விசுவாசியாகவும், ஆபிரிக்கக் கொம்பு நாடுகளில் அமெரிக்காவின் நலன்களைப் பாதுகாக்கும் சக்தியாகவுமே இருந்து வந்தது. இதன் தொடர்ச்சியாகவே தற்போதைய எத்தியோப்பிய உள்நாட்டு போரிலும் அமெரிக்க தலைமையிலான மேற்கு சக்திகள் எத்தியோப்பிய அரசாங்கத்திலேயே போருக்கான குற்றச்சாட்டுக்களை அதிகம் முன்வைக்கின்றது. குறிப்பாக, எத்தியோப்பியாவில் உள்நாட்டுப் போர் தொடங்கியதில் இருந்தே, ஐரோப்பிய பிரஸ்ஸல்ஸ் கூட்டமைப்பு, அம்னஸ்டி இண்டர்நேஷனலின் அறிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை அதனை ஏற்றுக் கொண்ட அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஆண்டனி பிளிங்கன் என அனைவரும் எத்தியோப்பிய உள்நாட்டு போரை 'இன அழிப்புப் போர்' என்றே கூறினார்கள். மேலும், “டிக்ரே மக்கள் பசியில் வாடுகின்றனர், அவர்களுக்கு இப்போது உதவி தேவைப்படுகிறது, பெரிய பஞ்சம் வரப்போகிறது, எத்தியோப்பியாவின் அருகில் உள்ள எரித்திரிய படைகளால் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்படுகின்றனர்” என அடுக்கடுக்கான அறிக்கைகளின் மூலம் எரித்திரியாவையும் எத்தியோப்பியாவையும் கண்டித்தனர். எத்தியோப்பியாவிற்குப் பொருளாதார மற்றும் பாதுகாப்பு உதவிகள் வழங்குவதில் அமெரிக்கா கட்டுப்பாடு விதித்துள்ளது. இதன் மூலம், பொது வெளியில் அபி அஹ் மட்டின் அரசாங்கம் மற்றும் எரித்திரிய அரசாங்கத்தைக் குற்றவாளிகளாகச் சித்தரிக்க முயற்சிப்பதன் மூலம் டிக்ரே மக்கள் விடுதலை முன்னணியை நியாயப்படுத்துகின்றனர்.

நான்கு, எதியோப்பிய உள்ளக மோதலின் இரு தரப்பும் போர் நிறுத்தத்துக்கான சமிக்ஞையை 2020 இன் டிசம்பரில் வெளிப்படுத்தியுள்ள நிலையில், அமெரிக்க அரசாங்கம் 2022-ஜனவரியில் எத்தியோப்பிய அரசாங்கம் மீது பொருளாதாரத் தடையை அதிகரித்துள்ளது. டிக்ராயன் கிளர்ச்சியாளர்களுடனான ஆண்டுகாலப்போரில் மொத்த மீறல்களைச் சுட்டிக்காட்டி எத்தியோப்பியாவை ஆபிரிக்க வளர்ச்சி மற்றும் வாய்ப்புச் சட்டத்தில் (AGOA) இருந்து புத்தாண்டு (2022, ஜனவரி-01) அகற்றுவதாக நவம்பர்-2அன்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்தார். ஆபிரிக்காவில் உள்ள செனட் மற்றும் ஹவுஸ் துணைக்குழுக்களின் தலைவர்கள் இருவரும் பைடனை திடீர் நடவடிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு ஒரு கடிதத்தில் வலியுறுத்தினர், சமீபத்திய கிளர்ச்சி பின்வாங்கல் இராஜதந்திரத்திற்கு ஒரு திறப்பை வழங்கியது என்று கூறினார். பைடனின் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்களான செனட்டர் கிறிஸ் வான் ஹோலன் மற்றும் பிரதிநிதி கரேன் பாஸ் ஆகியோரும், “ஆபிரிக்க வளர்ச்சி மற்றும் வாய்ப்புச் சட்டத்தின் நன்மைகளை இடை நிறுத்துவதன் எதிர் விளைவு மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய எத்தியோப்பியர்களுக்கு விகிதாசாரமாக தீங்கு விளைவிக்கும் என்று நாங்கள் கவலைப்படுகிறோம்” என்று எழுதினார்கள். எனினும் அமெரிக்க அரசாங்கம் தடையை ஜனவரியில் உறுதி செய்துள்ளது. ஜனவரி-01 (2022)அன்று ஒரு அறிக்கையில், அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி ஆபிரிக்க வளர்ச்சி மற்றும் வாய்ப்புச் சட்டத்தில் இருந்து எத்தியோப்பியா, மாலி மற்றும் கினியா ஆகிய நாடுகளை நிறுத்தியதாகக் கூறினார்.

எனவே, எத்தியோப்பியாவின் உள்ளக மோதலில் சர்வதேச அரசுகளின் ஈடுபாடு மாறிவரும் உலக ஒழுங்கின் நடத்தையையே வெளிப்படுத்துகின்றது. அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் மேற்கொள்ளப்பட்ட கருத்தரங்கொன்றில் அரசறிவியல் துறை பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம் அவர்கள் குறிப்பிடும் போது கோவிட் - 19 இற்கு பின்னான உலக ஒழுங்கில் சீனா அரச இறைமையுடன் இணைந்து பயணிக்கக் கூடிய சூழல் அவதானிக்கப்படுவதுடன், அமெரிக்கத் தலைமையிலான மேற்கு சக்திகள் அரசுக்கு எதிராகச் செயற்படும் தேசிய இனங்களை கையாளும் பொறிமுறையில் நகருவதற்கான வாய்ப்பு அதிகம் உண்டெனக் குறிப்பிட்டார். அவ்விடயத்தை மெய்ப்பிக்கும் போக்குகளே நடைமுறையில் எத்தியோப்பியாவிலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எத்தியோப்பியாவின் உள்ளூர் மோதல் சர்வதேச பரிமாணத்தை பெற்றுள்ள நிலையில் எத்திபோப்பியாவின் உள்ளக மோதலானது, மோதலின் இரு தரப்புக்களின் இணக்கங்களை தாண்டி சர்வதேச அதிகாரப் போட்டி அரசுகளின் எண்ணங்களிலேயே பயணிக்கிறது. எத்தியோப்பியாவின் அமைதி 2022 இலாவது உறுதி செய்யப்படுவது வல்லாதிக்க போட்டி அரசுகளின் எண்ணங்களை சார்ந்ததாக அமைகிறது. ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com
THEEMPUNAL தீம்புனல்

# அரசியல் சதுரங்கத்துக்குள் இலங்கை

"இலங்கை என்பது நம் தாய் திருநாடு
எழில் மிகுந்த இயற்கை வளம்
நிறைந்த நம் நாடு
மாணிக்க முத்துகளும் மாண்புறு காட்சிகளும்
மனதைக் கவர்ந்திடும் நாடு"

ஒரு காலத்தில் இலங்கையையும் தாண்டி தமிழக மக்களின் வாயில் முணுமுணுத்த "பொப்" பாடல். சகல வளமும் கொண்ட இலங்கை இன்று கடனுக்காகக் கையேந்தும் நிலையில் உள்ளது. மூன்று இன மக்களும் வாழும் நாடு எனும் தொலை நோக்கப் பார்வை இல்லாத அரசியல்வாதிகளினால் செல்வாக்கு மிக்க இலங்கையின் செல்வவளம் கொஞ்சம் கொஞ்சமாக கரைந்து போய்விட்டது.

இனம், மதம், மொழி என்ற வாக்கு வங்கி அரசியலால் ஒற்றுமையாக வாழ வேண்டிய மக்கள் சந்தேகப் பார்வையுடனும், குரோதத்துடனும் நோக்குகிறார்கள். தேர்தல் மேடைகளில் இனம், மதம், மொழி என வாய் கிழியக் கத்திவிட்டு வெற்றி பெற்ற பின்னர் அமைச்சுப் பதவிக்காக அணி மாறுவது தொடர்கதையாக இருக்கிறது. கட்சித் தலைமையின் முடிவுக்கு மாறாக பாராளுமன்றத்தில் கை உயர்த்துபவர்களை கண்டிக்க திராணியற்றுக் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறது தலைமை.

கடன் வலையில் இருந்து வெளியேறுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்கிறது. அதேவேளை அமைச்சரவைக்குள் குழப்பநிலை தோன்றியுள்ளது. அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சனம் செய்வதை ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது உலக நடை முறை. உள்ளிருந்து விமர்சனம் செய்பவர்கள் வெளியேறலாம் என ஜனாதிபதி பகிரங்கமாக அறிவித்துவிட்டார். அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைச்சர்கள் அனைவரும் கூட்டுப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

மக்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் அமைச்சுப்பதவி பறிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் மூத்த அரசியல் வாதியான சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கம் ஏனையவர்களுக்கு எச்சரிக்கை மணி அடிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. மையல் எரிவாயுத் தட்டுப்பாடு, சிலிண்டர் வெடிப்புகள் மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிப் பொருட்களின் விலை அதிகரிப்புக் குறித்து மக்கள் வீதியில் வைத்து எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த சுசில் பிரேமஜயந்த அரசாங்கத்தையும் கண்டித்து விமர்சித்திருந்தார்.

இதன் பின்னணியில் ஏற்கெனவே முரண்பட்டுக் கொண்டிருக்கும் விமல் வீரவன்ச, உதயம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் உள்ளிட்ட அமைச்சர்கள் சிலரும் பதவி நீக்கப்படுவார்களா அல்லது சுசில் பிரேமஜயந்தவின் திடீர் பதவி நீக்கம் முரண்படும் அமைச்சர்களுக்கான எச்சரிக்கையா என்பது குறித்த சந்தேகங்கள் சிங்கள சமூகவலைத்தளங்களில் பேசு பொருளாகியுள்ளன. சுசில் பிரேமஜயந்த இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து விலக்கப்பட்டமை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச எடுத்த சரியான முடிவென அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த பதவி நீக்கப்பட்ட பின்னர், அமைச்சரவையில் உள்ள ஏனைய மூத்த அமைச்சர்கள் சிலருக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது. கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அந்த அதிருப்தியை வெளிப்படையாகத்தெரிவித்தார்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அங்கத்துவம் கேள்விக்குறியாகியுள்ளது. சுசில் பிரேமஜயந்தவிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கட்சிக்குள் இருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பிரேமஜயந்தவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்பதை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மத்திய குழு கூடித் தீர்மானிக்கும் என காரியவசம் தெரிவித்துள்ளார். "பல பெரமுன உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமஜயந்த மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். நான் சொந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை கட்சியின் மத்திய குழு முடிவு செய்யும்," என்றார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மத்திய குழு எப்போது கூடும் என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, இன்னும் குறிப்பிட்ட நாள் எதுவும் இல்லை என்று காரியவசம் கூறினார்.

சுசில் பிரேம ஜயந்தவை அரசியலில் இருந்து வெளியேற்றுவதற்கு ஒருதரப்பு திட்டமிடுகிறது. அப்படி ஒரு நிலை மூத்த அரசியல்வாதிக்கு ஏற்படக்கூடாது. அனுபவம் மிக்க ஆளுமைகளின் ஆலோசனைகளையும் உள் வாங்கி நாட்டைக் கட்டி எழுப்புவதே அரசாங்கத்தின் தலையாய பணி. ■



# இந்தியப் பிரதமர் மோடிக்கு தமிழ்த் தலைவர்களின் கடிதம்

இலங்கை அரசியலில் ஏற்பட்ட பிரச்சினையின் போது ஒருகாலத்தில் பெரியண்ணனாக இந்தியா தலையிட்டு சமரசம் செய்து வைத்தது. பெரியண்ணனுக்குப் பக்கத்தே இருக்கும் குட்டிப் பையனான இலங்கை பெரியண்ணனின் சொல்லை இப்போது கேட்பதில்லை. குட்டிப் பையனின் குழப்படியைக் கண்டும் காணாதது போல் இருக்கும் பெரியண்ணன் தனது அரசவை விழாக்களின் போது குட்டிப் பையனை செங்கம்பளம் விரித்து வரவேற்கத் தவறுவதில்லை. இலங்கை தமிழ் அரசியல் தலைவர்கள் இந்தியாவின் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளனர். இலங்கைத் தமிழரின் பிரச்சினையை என்றைக்காவது ஒருநாள் இந்தியா தீர்த்து வைக்கும் எனும் குருட்டு நம்பிக்கையில் காலத்தைக் கடத்துகின்றனர்.

இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்ப வேண்டும் என்ற கருத்தை முன் வைத்து தமிழ், முஸ்லிம், மலையக அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்து கூடி ஆராய்ந்தனர். கடிதத்தில் என்ன எழுத வேண்டும் என யோசித்தபோது அவர்களுக்கு 13 ஞாபகம் வந்தது. 13 ஆவது திருத்தச் சட்டமானது, இலங்கையில் புரையோடிப்போன இனப்பிரச்சினை, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், 1987 இல் இந்திய - இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்பட்டிருந்தது. அன்றிலிருந்து இன்று வரையிலும் இந்தச் சட்டத்தையே இந்தியா வலியுறுத்தி வருகிறது.

இதற்குக் காரணமும் இருக்கிறது. அது சொந்த நலன் சார்ந்ததுதான். 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்தன, இலங்கையின் ஜனாதிபதியானதன் பின்னர், தாராள பொருளாதாரக் கொள்கையைச் செயற்படுத்தி, அமெரிக்கச் சார்புள்ள அரசியல் கொள்கையை முன்னெடுத்தார். இந்து சமுத்திரப் பிராந்தியம், தனது கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்று எப்போதும் நினைக்கின்ற இந்தியாவுக்கு இது பிடிக்கவில்லை. அதனால் இலங்கையின் இனப்பிரச்சினைக்குள் தலையிட்டது.

இந்தியாவின் தலையீடு, பெரும்பாலும் தமிழ்ப் பிரிவினைவாத இயக்கங்களை ஆதரிப்பதாகவும் வளர்ப்பதாகவும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்கும்படி அழுத்தம் கொடுப்பதாகவும் அமைந்தது.

அதன் தொடர்ச்சியாக, பூட்டானின் திம்புவிலும் இந்தியாவின் புதுடில்லியிலும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழ் இயக்கங்களுக்கும் இடையில் இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆனால், அவை தோல்வியில் தான் முடிந்திருந்தன.

13 ஐ இந்தியப்பிரதமர் மோடிக்கு ஞாபகப்படுத்துவதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் முடிவு செய்தனர். பிரதமர் நரேந்திரமோடிக்கு அனுப்பவுள்ள பொது ஆவணத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், ரெலோ இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் மக்கள் கட்சித் தலைவர் என்.சிறிகாந்தா,தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோர் கையெழுத்திட்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகிய இருவரும் கடைசி நேரத்தில் கையெழுத்திடவில்லை. தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக சமஷ்டியே அமைய வேண்டும் என வலியுறுத்திவந்த மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, இந்த ஆவணத்தில் கையெழுத்திடாமை குறித்து தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் கரிசனை கொண்டுள்ள தரப்பினர் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இது ஏற்கெனவே எதிர்பார்த்த ஒன்றுதான். தமிழ் பேசும் சமூகங்களின் பிரச்சினைகள் ஒரேமாதிரியானவை அல்ல. ஆகையால், அனைவரையும் திருப்திப் படுத்தும் வகையில் ஒரு ஆவணத்தைத் தயாரிக்க முடியாது. இலங்கைப் பிரச்சினை பற்றி மோடிக்கு நன்கு தெரியும் தமிழ்த்தலைவர்கள் அனுப்பும் கடித்தத்தைப் பார்த்தபின் பு எவர் உடனடியாகத் தலையிட்டு பிரச்சினையைத் தீர்த்து வைப்பார் என யாரும் எதிர் பார்க்க மாட்டார்கள். இது இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுக்கும் இராஜதந்திர நகர்வு மாத்திரமே. ஆனால், இந்த சலசலப்புக்கெல்லாம் பனங்காட்டு நரியான இலங்கை அரசாங்கம் அஞ்சப்போவதில்லை. மோடிக்கு அனுப்புவதற்குத் தயாரிக்கப்பட்ட ஆவணமும் ஒரே முறையில் தயாரிக்கப்படவில்லை. ரெலோவால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் பின்னர் இன்னொரு தரப்பால் திருத்தி வடிவமைக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்ட ஆவணம் எனக் கூறப்படுகிறது. மலையகத் தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களுக்குக் கையெழுத்திடவில்லை. கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா, கஜேந்திரகுமார் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அங்கஜனை மறந்துவிட்டார்கள். விஜயகலாவை அரசியல் அரங்கில் காணவில்லை.

இந்தியப் பிரதமருக்கு எதிராக இந்தியாவில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பலைகள், அடுத்து வரபோகும் மாநிலத் தேர்தல்கள் என்பனவற்றால் மோடி கலக்கத்தில் உள்ளார். இந்த ஆவணத்துக்கு இந்தியப் பிரதமர் மோடி பதிலளிப்பாரா? இல்லையா? என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

# மறுக்கப்படும் உரிமைக்காகத் தொடரும் போராட்டம்



செல்வின்

நாங்கள் தொழுதுண்டு வாழ்பவர்களா? அல்லது உழுதுண்டு வாழ்பவர்களா? என்பதை நிலைநிறுத்தும் நேரம் இது. இலங்கைத்தீவு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. உணவும் எரிபொருளும் உற்பத்திக்கான மூலப்பொருட்களும் இல்லாமல்,
கையில் காசிருந்தும் வாங்குவதற்கு இருப்பவற்றை வாங்கும் கொள்வனவு சக்தியற்றும் அல்லல்படப் போகின்றோம்.

மறுபக்கத்தில் அரசு நிலைமையைச் சமாளிப்பதற்காகப் பல ஆயிரம் இலட்சம் ரூபாய்களை இரவோடிரவாக புதிதாக அச்சடித்து வெளிவிடுவதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அதிக பணம் சந்தைக்கு வரும்போது போதியளவு பொருட்கள் கொள்வனவுக்குக் கிடைக்காமல் விட்டால் பொருட்களின் விலைகள் விண்ணைத்தாண்டும். அரசாங்க ஊழியர்களும் நிறுவனங்களில் மாதச்சம்பளம் பெறுபவர்களும் தங்களது வரையறுக்கப்பட்ட வேதனத்திற்குள் தங்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாமல் மிகவும் மோசமான நெருக்கடிக்குள் வீழ்வார்கள். அவர்களைவிட மோசமாக, நாளாந்த, கூலி வேலை செய்யும் பல இலட்சக்கணக்கான அன்றாடங்காச்சிகள் தங்களுக்கான உழைக்கும் வாய்ப்பினையும் இழந்துபோவது மட்டுமன்றி கிடைக்கும் வருமானத்திற்குள் தங்கள் குடும்பங்களின் அடிப்படை உணவுத் தேவையின் ஒரு பகுதியினைக்கூட கொள்வனவு செய்யும் சக்தியை இழந்தவர்களாகப் பட்டினிச்சாவினை நோக்கித் தள்ளப்படுவார்கள்.

அரசாங்கம் ஏதோவொரு வகையில் இந்தியாவிடமிருந்தோ சீனாவிடமிருந்தோ அல்லது சர்வதேச நாணயநிதியத்திடமிருந்தோ நாட்டை ஈடுவைத்தாவது தனது முகத்தைப் பாதுகாப்பதற்கு முயலலாம். கிடைக்கும் கடனில் பெரும்பகுதி ஏற்கெனவே பெற்ற கடனுக்கான வட்டியாகவும் மீள் கொடுப்பனவுத் தொகையாகவும் போய்விடும். மிகுதியில் இறக்குமதி செய்யப்படும் உணவும் எரிபொருளும் மருந்தும் கடுமையான பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் மட்டுமே மக்களுக்குக் கிடைக்கலாம். அதுவும் மிகவும் நேர்மையானதும் வெளிப்படையானதுமான நிர்வாகம் நடந்தால் மட்டுமே சாத்தியம்.

இது வடக்கு வாழ் தமிழ்மக்களுக்கு புதிய அனுபவம் அல்ல. புதிய சவாலும் அல்ல. நாங்கள் எங்களை இந்த மிகப் பெரிய நெருக்கடியினை எதிர்கொள்ளக்கூடிய வல்லமை கொண்ட தரப்பாக மாற்றக்கூடிய சந்தர்ப்பம் இது. நெருக்கடிகள் அதிகமாகும் போதுதான் புதிய வாய்ப்புகள் உருவாகும் அதனைக் கைப்பற்றிக்கொள்பவர்களே வெற்றியாளர்களாக மாறுகின்றனர். “வலியது வாழும்” என்பது அனுபவமொழி.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளை தொடர்ச்சியாக மறுத்துவரும் சிங்கள பௌத்த பேரினவாத தலைவர்கள் கடந்த காலத்தில் தமிழ்மக்களுடன் செய்யப்பட்ட அனைத்து உடன்பாடுகளையும் ஒருதலைப்பட்சமாகக் கிழித்து வீசினர். அதற்குள் 1987 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தமும் அடங்கும். அவ்வாறு அவர்கள் தொடர்ச்சியாகச் செய்வதற்கு மிக முக்கியமான காரணம் தாங்கள் அவ்வாறு ஒருதலைப்பட்சமாக எது செய்தாலும் தங்களுக்கு எந்தவித இழப்புகளும் ஏற்படப்போவதில்லை என்ற அசாத்திய துணிச்சலேயாகும்.

இந்தியா போன்ற வெளிநாடுகளின் அழுத்தங்கள் காரணமாக முடிவுகள் எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டாலும் அது தற்காலிகமான ஒன்றாகவே இருக்கும். பூகோள அரசியல் சமனிலை மாற்றமடையும் போது அத்தகைய நிர்ப்பந்தங்களால் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் ஒப்பந்தங்களையும் மிக இலகுவாக வலுவிழக்கச் செய்யமுடியும் என்பது இலங்கையின் மிகவும் புத்திசாதூரியமும் சூழ்ச்சித்திறனும் மிக்க சிங்களத்தலைவர்களுக்குத் தெரியும்.

இலங்கைத் தமிழர்கள் தற்போது இந்தியாவினைத் தங்களுக்கு பாதுகாவலனாகவும் இலங்கை அரசாங்கத்தை அழுத்தி அரசியல் தீர்வினைப் பெற்றுத் தரும் சக்தியாகவும் கருதுவது ஒரு நிரந்தரமான தீர்வு அல்ல என்பதனை இதுவரை தமிழ் அரசியற்கட்சிகளின் தலைவர்கள் புரிந்து கொள்ளவேயில்லை. இது அவர்களது அறியாமை என்பதனை விட படு முட்டாள்தனமானது என்பது வெளிப்படை.

பல அரசியல் ஆய்வாளர்கள் வாதிப்பதுபோல் தேசிய இனப்பிரச்சினை என்பது பூகோள அரசியலின் ஒரு அங்கமாக இருக்கலாம். முன்பு பூகோள அரசியல் என்பது அமெரிக்காவுக்கும் சோவியத் ரஷ்யாவுக்கும் இடையில் துருவமயப்பட்ட அரசியலாக கட்டியயெழுப்பப்பட்டபோது எதிரணியின் நாடுகளைப் பலவீனப்படுத்தி, தங்கள் பக்கம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அந்த நாடுகளை தமக்குச் சார்பாக இழுத்து எடுப்பதற்கு அந்த துருவமயப்பட்ட அரசியலில் சாத்தியங்கள் அதிகமாக இருந்தன. அத்தகைய நோக்கங்களுக்கு அந்த நாடுகளுக்குள் நிலவிய இனப்பிரச்சினைகள் துரும்புச் சீட்டாக பயன்படுத்தப்பட்டது.

ஆனால் தற்போது அத்தகைய நிலைமைகள் யாவும் மாறிவிட்டன. அத்துடன் இலங்கைத் தீவின் பூகோள அமைவிடமும் அத்தகைய துருவமயப்படுத்தப்பட்ட அரசியலினால் துண்டாடப்படுவதற்கு அத்தீவிற்கு மிக அருகாமையிலிருக்கும் இந்திய வல்லரசும் அதன் நேசசக்திகளும் அனுமதிக்கப்போவதில்லை என்பது உறுதி.

இந்தியா ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக இலங்கையினை துண்டாடினால் சிங்கள பௌத்த தேசியவாதம் சீனாவினை ஆதரவுக்கு அழைப்பது தவிர்க்கமுடியாமல் இருக்கும். அதேவேளையில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்களின் ஒருபகுதியினருக்காக மலையகத் தமிழர்களையும் ஏனைய தமிழ்பேசும் மக்களையும் இந்தியா கவனத்திற்கொள்ளாது எனச்சிந்திப்பதும் அர்த்தமற்றது.

> “எத்தகைய அரசியல் தீர்வு எவரது அழுத்தத்தினாலோ அல்லது நல்லெண்ணத்தினாலோ ஈழத்தமிழருக்குக் கிடைத்தாலும் அதனை தக்கவைத்துக் காப்பாற்றுவதற்கு நாங்கள் தகைமைகொண்டவர்களாக எம்மைக் கட்டமைக்கவேண்டும். இங்கு பலம் என்பது ஆயுதப்படைகளின் பலம் என்பதல்ல. மாற்றாக பொருளாதாரப்பலம். எமது ஆளுமைப் பலம்.”

இந்தியாவின் ஆதரவுடன் துண்ட துண்டாடி ஒரு துண்டு இந்தியாவின் நட்பு நாடாக மாறும்போது மறுபகுதியை இந்தியாவின் எதிரணியான சீனா தன் பக்கம் இழுக்கும் என்பதும் எதிர்வு கூறக்கூடிய வாதமாகவே கொள்ளவேண்டும். ஏனேனில் தற்போது இந்தியாவின் தெற்கு முனையிலிருந்து சுமார் 5000 கிலோ மீற்றருக்கு அப்பால் இருக்கும் சீனாவினை 100கிலோ மீற்றர் தூரத்திற்குள் கொண்டுவரக்கூடிய எத்தகைய வாய்ப்புகளையும் இந்தியா அனுமதிக்கப்போவதில்லை. அதற்காக எத்தகைய விலையை மட்டுமல்ல ஆகக்கூடிய சமரசத்தைக்கூட இலங்கையுடன் இந்தியா மேற்கொள்ளும். அப்போது பலியிடப்படுவது ஈழத்தமிழர்களின் நலன்களாகத்தான் அமையும்.

இந்த உண்மையினை தமிழ் அரசியல் தலைவர்கள் வெளிப்படையாகப் பேசமுன்வரவேண்டும். இருட்டினில் குருட்டாட்டம் ஆடி தமிழ்மக்களின் எதிர்காலத்தை சூனியமாக்கும் முயற்சிகளின் ஈடுபடக்கூடாது. அண்மையில் ஒரு தமிழ் அரசியல்வாதி “உரிய முறையில் அதிகாரப் பகிர்வு கிட்டுவதை இந்தியா உறுதி செய்யுமானால், தமிழர் பகுதிகளில் சீனா உட்பட வேறு எந்த வல்லாதிக்க சக்தியும் காலூன்றாமல் தமிழர்கள் பார்த்துக்கொள்வார்கள்” என்று பேசியதாக பத்திரிகைகள் குறிப்பிட்டிருந்தன. உண்மையில் கேட்கும் போதே உடம்பு புல்லரிக்கின்றது. நிதானமாக சிந்திக்கும் போது அவர் என்னத்தை சொல்ல விளைகின்றார் என்பது புரியவேயில்லை.

அவர் எதிர்பார்ப்பது போல் இந்தியா செய்யாவிட்டால் தங்களிடம் மக்களுக்குச் சொல்லமுடியாத மாற்றுத் தந்திரோபாயங்கள் உண்டு. அதன் மூலம் இந்தியாவினைப் பணிய வைப்போம் என்று சொல்கின்றாரா? அல்லது இந்தியா அல்லாமல் வேறு ஒரு நாடு எங்களுக்கு உரிய முறையில் அதிகாரப் பகிர்வினைப் பெற்றுக் கொடுத்தால் அந்த நாட்டுடன் எங்கள் உறவினைப் பலப்படுத்துவோம். அது சீனாவாகக்கூட இருக்கலாம் என்று சொல்கின்றாரோ தெரியவில்லை. ஊரில் ஒரு பழமொழி உண்டு “தம்பி யோக்கியம்: சால்வை இரவல்” என்று. நாங்கள் எங்கள் பலத்தில் நிற்காமல் இரவல் சால்வையில் எங்கள் யோக்கியத்தைக் கட்டியெழுப்பினால் இரவல் சால்வை இழக்கப்படும் போது எல்லாமே இழக்கப்படும்.

எத்தகைய அரசியல் தீர்வு எவரது அழுத்தத்தினாலோ அல்லது நல்லெண்ணத்தினாலோ ஈழத்தமிழருக்குக் கிடைத்தாலும் அதனை தக்கவைத்து காப்பாற்றுவதற்கு நாங்கள் தகமைகொண்டவர்களாக எம்மைக் கட்டமைக்கவேண்டும். இங்கு பலம் என்பது ஆயுதப்படைகளின் பலம் என்பதல்ல. மாற்றாக பொருளாதாரப்பலம். எமது ஆளுமைப் பலம்.

பொருளாதாரப் பலமும் அறிவியல் தலைமைத்துவமும் ஆளுமைத்திறனும் முதலீட்டுத் திரட்சியும் தொழில்களை உருவாக்கி வழங்கும் தொழிலாண்மைகளும் அந்நிய செலாவணிவருமானத்தின் கணிசமான பகுதியை கட்டுப்படுத்தும் வல்லமையும் கொண்டவர்களாக ஈழத்தமிழர்கள் தங்களை உருவாக்க வேண்டும். ஈழத் தமிழர்கள் இலங்கையின் பொருளாதார மீட்சியிலும் ஆட்சித்திறனிலும் புறந்தள்ள முடியாத சக்திகளாக மாற்றமடையும் போதுதான் அவர்களுக்கான தன்னாட்சி உரிமை சிங்கள பௌத்த தேசியவாதிகளினால் பெருவிருப்புடன் அங்கீகரிக்கப்படும்.

படகு கரைசேர துடுப்பு முக்கியம். அதனை நாங்கள் மறுக்கக்கூடாது. ஆனால் துடுப்பை நாங்கள் தான் எங்கள் பலங்கொண்ட கரங்களினால் வலிக்க வேண்டும். கரையேறிய பின்பு நாங்கள் எங்கள் கால்களை நம்பித்தான் பயணத்தை தொடரவேண்டும்.

(20 ஆம் பக்கம் பார்க்க...)

அவதானி



# புட்டும் தேங்காய்ப் பூவும் என்னவாயிற்று?

“வரதராஜப்பெருமாள் தலைமையில் அமைந்த வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபையில் மூவினத்தவர்களும் அங்கம் வகித்தனர். அதில் ஒருவர் “மக்கத்துச் சால்வை” புகழ் எழுத்தாளர் எஸ். எல். எம். ஹனீபா. மற்றும் ஒருவர் புகழ்பெற்ற பத்திரிகையாளர் தயான் ஜயதிலக்க. ஒரு தமிழர் முதலமைச்சராகவிருந்த வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபையில் சிங்களவரும் இஸ்லாமியரும் அங்கம் வகித்தனர் என்பது மூன்று தசாப்தங்களுக்கு முற்பட்ட நாம் அறிந்த வரலாறு. தற்பொழுது இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதத் தொடங்கியிருப்போரும் , இந்தியப் பிரதமரும் குறிப்பிட்ட முப்பத்தைந்து வருடத்திற்கு முன்னர், என்ன செய்து கொண்டிருந்தார்கள்..? என்பதை வரலாற்றின் ஏடுகளை புரட்டினால் தெரியவரும்.”

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, இந்த ஆண்டுடன்35 ஆண்டுகளாகின்றன.

1987 இற்குப்பின்னர், அதாவது குறிப்பிட்ட ஒப்பந்தம் உருவாகியபின்னர் இலங்கையிலும் இந்தியாவிலும் பல அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன.

ராஜீவ்காந்தி, ஜே.ஆர். ஜெயவர்தனா, பிரேமதாச ஆகியோர் மறைந்துவிட்டனர். இவர்களில் இருவர் தற்கொலைக் குண்டுதாரிகளினால் கொல்லப்பட்டவர்கள். அந்த உடன்படிக்கையில் ஒப்பமிட்ட ஜே.ஆர். இயற்கை மரணமெய்தினார்.

1987 இற்கும் மலர்ந்துள்ள 2022 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் பிரதமர்களும் மாறிவிட்டனர்.

1987 இல் பிறந்த குழந்தைகள், திருமணமாகி பெற்றோர்களுமாகியிருப்பர். 2009 மே மாதத்துடன் முடிவுக்கு வந்த போர்க்காலத்தில் பிறந்த குழந்தைகளும் 13 வயதை நெருங்கிவிட்டனர்.

எனினும் ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு தரும் என்ற நம்பிக்கையை உருவாக்கிய அந்த ஒப்பந்தம் இதுவரையில் சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இன்றளவும் அது ஏட்டுச்சுரக்காய்தான்.

அந்தச்சுரக்காயை வைத்துக்கொண்டு பேசுகிறார்கள்... பேசுகிறார்கள்... முடிவற்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் இலங்கை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவும் இந்தியப் பிரதமர் மோடியும் சில தடவைகள் இலங்கையிலும் இந்தியாவிலும் வேறு சில நாடுகளில் நடந்த உலக மாநாடுகளிலும் சந்தித்து பேசியும் விட்டனர்.

மீண்டும் சந்திப்பார்கள். பரஸ்பரம் கைகுலுக்குவார்கள். சுகநலன் விசாரிப்பார்கள். பருவகாலம் பற்றி பேசுவார்கள்.

அவ்வாறாயின், 35 வருடத்திற்கு முன்னர் உருவான இந்த ஒப்பந்தம் பற்றி ஏதும் பேசமாட்டார்களா..?

இலங்கையில் இன்னமும் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்ற உண்மை இந்தியப்பிரதமருக்கு இதுவரையில் தெரியாதா..? குறிப்பிட்ட, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவான 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மாகாணங்களுக்குரிய அதிகாரப் பரவலாக்கம் நடக்கவில்லை என்பதாவது தெரியாதா..?

அதனால்தானா தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து அவருக்கு ஒரு ஆவணக்கடிதத்தை தயாரிப்பதற்கு மண்டையைப் பிய்த்துக்கொண்டிருக்கிறார்கள்..?!

கொழும்பில் இந்தத் தலைவர்கள் ஒன்றுகூடத்தொடங்கியவுடனே, கிழக்கிலிருந்து “ வடக்கையும் கிழக்கையும் இணைக்க அனுமதியோம். அதற்கு முஸ்லிம் தலைவர்கள் துணைசெல்லக்கூடாது” என்ற குரல் உரத்து எழுந்துவிட்டது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு விரைந்து நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியப்பிரதமர் மோடிக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கத்துடன் தான் அந்த ஆவணம் தயாரிக்கப்படுகிறதாம்.

மோடி அவர்கள் முதலில் 2014 ஆம் ஆண்டும் இரண்டாவது தடவை 2019 ஆம் ஆண்டும் அமோக வெற்றியுடன் இந்தியப் பிரதமரானவர்.

அதற்கு முன்னர் 2001 ஆம் ஆண்டு பாரதீய ஜனதா கட்சியின் சார்பாக குஜராத் மாநிலத்தின் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

அதற்கு முன்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவான காலத்தில் அவர் என்ன செய்துகொண்டிருந்தார்..? என்பதை இந்தப் பத்தியில் ஆய்வு செய்வது அவதானியின் நோக்கமல்ல.

அவர் குஜராத்தில் முதலமைச்சராக இருந்த காலப்பகுதியில்தான் 2002 ஆம் ஆண்டில் கோத்ராவில் ஒரு ரயில் எரிப்பு சம்பவம் நடந்தது .



அதனைத்தொடர்ந்து நடந்த கலவரங்களினால், இந்துக்களும் இஸ்லாமியர்களுமாக ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

எனினும் மோடி, குஜராத்தில் அதன்பின்னர் நடந்த தேர்தலிலும் வெற்றிபெற்று முதல்வரானதுடன், தன்னையும் கட்சியையும் வளர்த்தெடுத்து அடுத்தடுத்து இரண்டு தடவை இந்தியப் பிரதமராகியும்விட்டார்.



இந்தியாவில் இந்து - இஸ்லாமியர் உரசல் என்பது சுதந்திரம் கிடைத்து, பாகிஸ்தான் பிரிந்த காலம் முதல் நீடித்திருப்பது.

ஆனால், இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் டி.எஸ். சேனநாயக்காவின் முதலாவது அமைச்சரவையில் சி. சிற்றம்பலம், சி. சுந்தரலிங்கம் ஆகிய தமிழர்களும் டி.பி. ஜாயா என்ற இஸ்லாமியரும் உட்பட சில சிங்களவர்களும் அங்கம் வகித்தனர்.

டி.எஸ். சேனநாயக்காவினால் தோற்றுவிக்கப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சியிலும் பின்னாளில் பண்டாரநாயக்காவினால் உருவாக்கப்பட்ட ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலும், என். எம். பெரேராவின் லங்கா சமசமாஜக்கட்சியிலும், எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் கம்யூனிஸ்ட் கட்சியிலும் சிங்களவர்களுடன் தமிழர்களும் இஸ்லாமியர்களும் அங்கம் வகித்தனர்.

1971 இற்குப்பின்னர் கிளர்ச்சியுடன் தொடங்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியிலும் மூவினத்தவர்களும் அங்கம் வகித்தனர். ஒரு காலத்தில் தமிழரசுக்கட்சியில் இஸ்லாமிய சகோதரர்களும் அங்கத்துவம் பெற்றிருந்தனர். அவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் மசூர் மௌலானா, எம். எச். எம். அஷ்ரப்.

அக்காலத்தில் இஸ்லாமியர்களும் தமிழர்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்தபோது, அரசியல் தலைவர்களும் ஆய்வாளர்களும் இவர்களின் உறவை, புட்டும் தேங்காய்ப்பூவும் என்றே வர்ணித்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திலும் இஸ்லாமிய சகோதரர்கள் அங்கம் வகித்தார்கள் என்பதற்கும் ஆதாரமாக திகழ்கிறது 1987 ஆம் ஆண்டு இவ்வியக்கத்தின் அரசியல் குழு வெளியிட்ட இஸ்லாமிய தமிழரும் தமிழீழ விடுதலைப்போராட்டமும் என்ற நூல்.

இந்நூல் தமிழீழ விடுதலைப்போரில் முதற்களப் பலியான இஸ்லாமியரான லெப்டினன்ட் ஜூனைதீனுக்குத்தான் காணிக்கையாக்கப்பட்டுள்ளது.

அதன் முன்னுரை இவ்வாறு தொடங்குகிறது: “இலங்கையில் ‘முஸ்லீம்’ என அழைக்கப்படும் மக்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவிய தமிழர்கள். இந்த இஸ்லாமியத் தமிழர்கள் இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு இணைபிரியாத அங்கம் என்பது எமது நிலைப்பாடு”

எனவே, இந்த இணைபிரியாத தொனியின் பின்னணியையும் குறிப்பிட்ட “புட்டும் தேங்காய்ப்பூவும்” என்ற பதத்துடன் ஒப்பிட முடியும்.

குறிப்பிட்ட நூல் 1987 ஆம் ஆண்டு வெளிவந்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தமும் அதே ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. அதன்பின்னர் நடந்த வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர்களும் இஸ்லாமியர்களும் போட்டியிட்டனர்.

வரதராஜப்பெருமாள் தலைமையில் அமைந்த வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபையில் மூவினத்தவர்களும் அங்கம் வகித்தனர். அதில் ஒருவர் “மக்கத்துச்சால்வை” புகழ் எழுத்தாளர் எஸ். எல். எம். ஹனீபா. மற்றும் ஒருவர் புகழ்பெற்ற பத்திரிகையாளர் தயான் ஜயதிலக்க.

ஒரு தமிழர் முதலமைச்சராகவிருந்த வடக்கும் - கிழக்கும் இணைந்த மாகாண சபையில் சிங்களவரும் இஸ்லாமியரும் அங்கம் வகித்தனர் என்பது மூன்று தசாப்தங்களுக்கு முற்பட்ட நாம் அறிந்த வரலாறு.

தற்பொழுது இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதத் தொடங்கியிருப்போரும், இந்தியப் பிரதமரும் குறிப்பிட்ட முப்பத்தைந்து வருடத் திற்கு முன்னர், என்ன செய்துகொண்டிருந்தார்கள்..? என்பதை வரலாற்றின் ஏடுகளை புரட்டினால் தெரியவரும்.

இரண்டு தடவைகள் அடுத்தடுத்து பிரதமராகி யிருக்கும் நரேந்திர மோடி அவர்களுக்கு இலங்கையில் வாழும் தேசிய சிறுபான்மை இனத்தவர்கள் எதிர்நோக் கும் பிரச்சினைகள் ஏதும் தெரியாதா..? அவருக்காக இந்தத் தலைவர்கள் ஒன்று கூடி, கூட்டம்போட்டுத்தான் கடிதத்தின் வரைவை தயாரிக்க வேண்டுமா..?

இதற்கு முன்னர் இந்தத் தலைவர்கள் எத்தனை தடவை அவரைச் சந்தித்திருப்பார்கள்..?

இந்தியப்பிரதமரும் இக்கடிதத்தை படித்துவிட்டு, இலங்கை அரசுக்கும் ஜனாதிபதி தாமதமின்றி அழுத்தம் கொடுத்து இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு - கிழக்கை மீண்டும் இணைத்து அதிகாரப்பகிர்வுடன் கூடிய ஒரு மாகாண சபை வந்துவிடுமோ ? ! என்ற கனவுடன் அல்லது எண்ணத்துடன் கிழக்கிலிருந்து, அதற்கு எதிரான குரல்கள் ஒலிக்கத்தொடங்கிவிட்டன.

தமிழர்களும் இஸ்லாமியர்களும் மீண்டும் புட்டும் தேங்காய்ப்பூவும் போன்று ஒற்றுமைப்பட்டு, மலையகத் தமிழ்மக்களையும் தம்மோடு இணைத்துக்கொண்டு முன்னே செல்வதற்கான பேரியக்கத்தை உருவாக்காத வரையில், இந்தக் கடிதம் அனுப்பும் படலம் தொடரத்தான் செய்யும். இலங்கையில் மற்றும் ஒரு பொதுத் தேர்தல் நடந்து, ஒரு கட்சியோ அல்லது பல கட்சிகள் இணைந்த கூட்டாட்சியோ வந்துவிட்டால், இது போன்ற கடிதங்கள் வெறும் ஏட்டுச்சுரக்காய்களாகத்தான் வரலாற்று ஏடுகளில் வரையப்படும்.

■

# சரிந்துகொண்டிருக்கும் ஒரு சரித்திரம்

# போரும் கல்வியும்

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்விச் சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!

-ஆசிரியர்

அத்தியாயம் - 03

கடந்த அத்தியாயத்தில் பார்த்தது போல தமிழ் பேசும் மாணவர்களின் கல்வித்துறையில் ஏற்படுத்தப்பட்ட வலிந்த அழுத்தமும் பல்வேறு இன ரீதியான பாதிப்புகளும் இளைஞர் குழுக்களாகப் புரட்சி விதைகளை விதைத்திருந்தன.

அதுவே எழுபதுகளின் ஆங்காங்கே நடைபெற்ற சம்பவங்களாக ஆரம்பித்து எண்பதுகளில் இனக்கலவரத்தைத் தொடர்ந்து போர் என்கின்ற அரக்கனை எமது பிரதேசங்களுக்கு வலிந்தே திணித்திருந்தது. அதன் விளைவுகள் பற்றி இந்த அத்தியாயத்தில் சற்று அலசலாம்!!

1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரம் தமிழ் பேசும் மக்கள் அனைவர் மனதிலும் நீங்காமல் பதிந்தது. அதற்கு மாணவர்களும் விதிவிலக்கல்ல.

சிறு வயதில் நடக்கும் பாரதூரமான சம்பவங்கள், ஆழ்மனதில் பதிந்துவிட்டால் அது வாழ்நாள் முழுவதும் வலிதர வல்லது. தவிர எமது ஏனைய செயற்பாடுகளிலும் தாக்கம் செலுத்தும் பண்புகளைக் கொண்டிருக்ககூடியது என்பதைப் பல உளவியலாளர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

1983 கலவரத்தின் பின் வெளியூர்களில் கல்வி கற்ற ஏராளமான தமிழ் சிறுவர்களும் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்குப் பயம் காரணமாகத் திரும்பியிருந்தனர்.

அவர்கள் மனதில் இந்தப் பாதிப்புகளும் மாற்றம் நீங்கா வடுவானது. அந்த வகையில் எண்பதுகளின் மத்தியில் உக்கிரமடைந்த உள்நாட்டுப் போர், தொடர்ந்து இந்திய ராணுவத்தின் வருகை, என வீதி வீதியாக, கிராமம் கிராமமாக உள்நாட்டுப் போர் எம்மை ஆட்கொண்டது.

தினம் தினம் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் சுடுபடகுகளில் (Gun boat) இருந்து சுடப்படும் ஒலிகளும் எங்கள் அன்றாட வாத்தியங்களாக மாறிப்போயின. போரின் உயிரிழப்புகள் அதிகரிக்கத் தொடங்கியது.

எண்பதுகளின் இறுதியில் அடுத்த போரின் அடுத்த பரிணாமத்தை மாணவர்களும் மக்களும் உணர ஆரம்பித்தனர். இடப்பெயர்வு என்ற தொடர்கதை பெருங்கதையாக மாற ஆரம்பித்திருந்தது.

இந்தத் தொடர்கதை 2009 வன்னிப்போர், முள்ளிவாய்க்கால் வரை தொடர்ந்து இன்னும் சில பகுதிகளில் மீள் குடியேற்றம் என்ற பெயரில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

போரின் தாக்கத்தில் பல மாணவர்களின் உயிர் அநியாயமாகப் பறிபோனது உலகம் அறிந்த உண்மை. பலரது கல்வி முளையிலேயே கருகிப்போனது! பல திறமையான மாணவர்கள் வாழ்வு முடங்கிப்போனது. பலர் நாட்டை விட்டே வெளியேறினர். அதைப் பக்கவிளைவு (colateral damage) என்ற ஒற்றை வார்த்தைக்குள் இலகுவாக அடக்கி விட முடியாது.

மாணவர்கள் மட்டுமன்றி பல புகழ் பூத்த பாடசாலைகளின் வாழ்வும் வறண்டு போனது. மக்கள் இடம் பெயர இடம் பெயர பாடசாலைகளும் இடம் பெயர்ந்தன.

1995 வடக்கின் இடப்பெயர்வை மிகப்பெரிய அதிர்வலைகளை மாணவர்கள் வாழ்வில் ஏற்படுத்தி இருந்தது.

அகதி முகாம் வாழ்வியலுக்குள் பல்லாயிரம் மக்களும் மாணவர்களும் தள்ளப்பட்டனர். பொருளாதாரம் சீரழிந்து சின்னாபின்னமாகி இருந்தது. அடுத்த வேளை உணவுக்கே அல்லாடும் சூழலில் கல்வியில் கவனமெடுக்க முடியாமல் பல மாணவர்கள் திணறினர்.


இரண்டு ரூபாய் உணவு முத்திரை ஒரு காலத்தில் பல மாணவர்களின் அன்றாட வாழ்வின் அத்திய அவசியமாகிப் போயிருந்தது. ஓலைக் கொட்டகைகளிலும் உடைந்த கட்டடங்களிலும், பிறபாடசாலைகளில் மாலைப்பாடசாலையாகவும் பல பாடசாலைகள் இயங்கின.

இந்த இடத்தில் மிக முக்கியமான ஒரு உணர்வினை பதிவு செய்தே ஆகவேண்டும். எங்களிடம் இருந்த அத்தனை சொத்துக்களையும் போர் அபகரித்திருந்தாலும் கல்வி மட்டும் இருந்துவிட்டால் அத்தனையையும் என்றோ ஒருநாள் மீட்டுவிடலாம் என்று இருந்த பெரு நம்பிக்கை அது. பிறந்து வளர்ந்த வீட்டை விட்டு, பல உடைமைகளை இழந்து பல்வேறு இடங்களாக இடம் பெயர்ந்து திரிந்த காலங்களில் எனது தந்தை அடிக்கடி கூறும் அறிவுரையின் சாரம் இது.



"உங்களிடம் இருக்கும் அத்தனை சொத்துக்களும் இன்று போல என்றும் பறிபோகலாம். ஆனால் கல்வியைச் சரியாக கற்றுக் கொண்டீர்களானால் அதை என்றும் யாராலும் பறித்து விட முடியாது. கற்ற கல்வி உங்களை மட்டுமல்ல மற்றவர்களையும் மீண்டும் சிறப்பாக வாழவைக்கும்".

இது என் தந்தை மட்டுமல்ல பல போர்க்காலத் தந்தைகள் தங்கள் பிள்ளைகளுக்கு ஊட்டிய அற்புத வார்த்தைகள்! இந்த வைராக்கியம் போர்க்காலத்தில் கடமையிலிருந்த பல அதிபர்கள், ஆசிரியர்கள் ஏன் சமூகத்தில் பல அங்கத்தினருக்கு ஒரு கட்டத்தில் வந்திருந்தது.




பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் பாடசாலை கற்றல் பகுதியாகவேனும் தொடர்ந்துகொண்டுதான் இருந்தது. அதற்கு அன்றைய காலகட்டத்தில் உறுதிப்பாட்டுடன் சமூகம் பொறுப்பு வாய்ந்தவர்களால் கட்டமைக்கப்பட்டிருந்தது கூட ஒரு காரணம்!!

எமது பிராந்தியங்களை போர் விழுங்கியிருந்த காலப் பகுதியிலும் தேசிய ரீதியிலான பல சாதனைகளை இன்று இருப்பதை விட அதிகமாக எமது மாணவர்கள் தொடர்ந்துகொண்டுதான் இருந்தனர். அதற்குப் பெற்றோரும் சமூகமும் கொடுத்த வைராக்கியம் கூட ஒரு காரணமாகி இருக்கலாம். அதே வேளை பொருளாதார நலிவு காரணமாகவும் போதிய வளங்கள் இன்மை காரணமாகவும் பின்தங்கிய பிரதேசத்தில் பல மாணவர்களின் கல்விக் கனவுகள் தகர்ந்தும் போனது அவர்கள் சூழ்நிலைக் கைதிகளாயினர்.

> **உங்களிடம் இருக்கும் அத்தனை சொத்துக்களும் இன்று போல என்றும் பறிபோகலாம். ஆனால் கல்வியைச் சரியாகக் கற்றுக் கொண்டீர்களானால் அதை என்றும் யாராலும் பறித்துவிட முடியாது. கற்ற கல்வி உங்களை மட்டுமல்ல மற்றவர்களையும் மீண்டும் சிறப்பாக வாழவைக்கும்.**

எண்பதுகள் முதல் 2009 வரை இந்தத் தொடர்கதை பல வடிவங்களில் கோரத்தாண்டவம் ஆடி எங்கள் கல்விப் பாரம்பரியத்தை ஆட்டி வைத்திருந்தது. ஆனால் அழித்துவிட முடியவில்லை என்பதுதான் உண்மை! அதன் இருப்புக்கும் நிலைபேறுக்கும் எம்மக்களிடமும் சமூகத்திடமும் இருந்த கல்வியின் மீதான பற்று, "கல்வி மட்டுமே எங்கள் நிரந்தரமான சொத்து" எனும் நம்பிக்கை, ஒழுக்கம் சார்ந்த பண்பாட்டு விழுமியங்களால் பிணைந்த சமூகக் கட்டமைப்பு என்பன காரணமாகின.

போரின் பாதிப்புகள் பலரும் அறிந்த வெளிப்படை உண்மை! ஆனால் போர் முடிவடைந்து கிட்டத்தட்ட 12 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்று நாங்கள் எவ்வாறு இருக்கிறோம்? முன்னர் இருந்த வைராக்கிய மனநிலை இன்றும் இருக்கிறதா? எங்கள் சரித்திரங்கள் ஏன் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பதை தொடர்ந்து வரும் அத்தியாயங்கள் அலசும்.

தவிர மிகப்பெரிய ஒரு உள்நாட்டுப் போரினைக் கடந்து வந்த சமூகத்தில் அமைதிக்கான கல்வியை கட்டியெழுப்புவதில் பல படிநிலைகளை பல்வேறு தளங்களில் இருந்து பலதரப்பும் இணைந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம் என இலங்கையின் கல்வித்துறையில் போரின் பாதிப்புகள் பற்றி ஆய்வு நடாத்திய நெதர்லாந்தைச் சார்ந்த ஆய்வாளர் மிக்கி T.A. லோபஸ் கார்டோசோ தனது ஆய்வறிக்கையில் தெரிவித்திருந்தார்.

சுபீட்சமான, சமாதானமான கல்விக்காக பலதரப்பு அணுகுமுறையை காட்டும் படம் இணைத்துள்ளேன். உண்மையில் கல்வியில் அரசியல் கலக்காமல் சுபீட்சமாக அத்தனை மாணவர்களுக்கும் சமமான கல்வி சென்றடைய வேண்டும். இலவசக்கல்வி என்பது வெறுமனே பெயரில் மட்டும் இருந்துவிடாது, அத்தனை மாணவர்களுக்கும் கற்றலுக்கான வளங்களும், கற்றலுக்கான சூழலும் ஒரே மாதிரியாகக் கொடுக்கப்பட்டாலே உண்மையான சமமான கல்விக் கலாசாரம் உருவாகும். கடந்தகாலத்தில் நிரப்பப்படாமல் இன்னும் தொடரும் பல இடைவெளிகளையும் இனிவரும் கால இடைவெளிகளையும் நிரப்பும்! அதற்கான அணுகுமுறைகளின் ஒவ்வோரு நிலைகளையும் தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் பேசலாம்.

(தொடரும்)

# ஈழத்தின் மூத்த எழுத்தாளர் தெணியானுக்கு அகவை 80!

# அடிநிலை மக்களின் குரலாக ஒலித்த எழுத்துப் போராளி!!

முருகபூபதி

கந்தையா நடேசன் என்ற இயற்பெயர்கொண்டவரும், இலக்கிய உலகிலும் ஊடகத்துறைகளிலும் தெணியான் என அழைக்கப்பட்டவருமான ஈழத்தின் மூத்த இலக்கிய ஆளுமையின் எண்பதாவது பிறந்த தினம் இம்மாதம் 06 ஆம் திகதி

வடமராட்சி பொலிகண்டியில் கந்தையா - சின்னம்மா தம்பதியருக்கு 06-01-1942 இல் பிறந்த நடேசு, இலக்கிய உலகில் பிரவேசித்ததும் தெணியான் என்ற பெயரில் எழுதத்தொடங்கியவர்.

தான் கல்வி கற்ற கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியிலேயே நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள தெணியான், மூத்த எழுத்தாளர் கே. டானியலின் வாரிசு எனவும் வர்ணிக்கப்பட்டவர்.

நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், பல நாவல்கள் உட்பட சில விமர்சனக்கட்டுரைத் தொகுதிகளையும் தமிழ் இலக்கியத்திற்கு வரவாக்கியிருக்கும் தெணியானின் பாதுகாப்பு என்ற சிறுகதை யாழ்ப்பாணம் ஜீவநதியில் வெளிவந்தது. இச்சிறுகதை தற்போது



இலங்கைப் பாடசாலைகளில்11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான தமிழ் பாட நூலிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து முன்னர் வெளியான விவேகி இதழில் 1964 இல் தெணியானின் முதல் சிறுகதை “பிணைப்பு” வெளியாகியது. அதனைத்தொடர்ந்து, மல்லிகை, ஞானம், யாழ். முரசொலி, வீரகேசரி, தினக்குரல், ஜீவநதி உட்பட பல இதழ்களில் அயராமல் தொடர்ந்து எழுதியிருப்பவர்.

இவருடைய கழுகுகள் (நாவல்) சொத்து (சிறுகதைத்தொகுதி) குடிமைகள் (நாவல்) என்பன தமிழ்நாட்டில் பிரபல பிரசுர நிறுவனங்களான நர்மதா பதிப்பகம், என்.சி.பி.எச் மற்றும் கருப்பு பிரதிகள் வெளியீடுகளின் ஊடாக தமிழக வாசகர்களையும் சென்றடைந்துள்ளன.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இயங்கிய காலத்தில் யாழ்ப்பாணக்கிளையின் செயலாளராகவும் ஆக்கபூர்வமாக செயற்பட்ட தெணியான், தமது படைப்புகளுக்காக இலங்கை தேசிய சாகித்திய விருது, வடகிழக்கு மகாண அமைச்சுப்பரிசு, யாழ். இலக்கிய வட்டத்தின் பரிசு, இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவை - தமிழ்நாடு சுபமங்களா இதழ் ஆகியன இணைந்து வழங்கிய பரிசு, மற்றும் தமிழ்நாடு கு. சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது, கொடகே விருது, கலாபூஷணம் விருது ஆகியனவற்றுடன் இலங்கை அரசின் உயர் இலக்கிய கௌரவமான சாகித்திய ரத்னா விருது பெற்றவர்.

இலங்கை வானொலிக்காக முன்னர் பல நாடகங்களும் எழுதியிருக்கும் தெணியான், பேராசிரியர் கா. சிவத்தம்பி, மல்லிகை ஜீவா ஆகியோர் பற்றியும் விரிவான நூல்களை வரவாக்கியிருப்பவர்.

தான் கல்வி கற்ற, ஆசிரியப்பணியாற்றிய தேவரையாளி இந்துக்கல்லூரியின் இரண்டு வெளியீடுகள் மற்றும், மல்லிகை ஜீவாவின் ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக்குரல் நூல் ஆகியவற்றினதும் தொகுப்பாசிரியருமாவார்.

கனடாவில் வதியும் தெணியானின் தம்பி க. நவம் நடத்திய நான்காவது பரிமாணம் இதழின் சார்பில் வெளியான மரக்கொக்கு நாவல் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வடபிரதேசத்தில் அடிநிலை மக்களுக்காக ஓயாது குரல்கொடுப்பதற்காக எழுதிவந்திருக்கும் தெணியான், அம்மக்களின் ஆத்மாவை வெளிப்படுத்தும் அதிகமான சிறுகதைகளையும் எழுதியிருப்பவர். அதேசமயம் ஆலயங்களில் பூசகர்களாக பணியாற்றும் அந்தணர்களின் உரிமைகளுக்காகவும் எழுதியவர். அம்மக்களின் துயரம்தோய்ந்த கதையை “பொற்சிறையில் வாடும் புனிதர்கள்” என்ற தலைப்பில் நாவலாக்கியிருக்கும் தெணியான், “ஏதனம்” என்ற நாவலையும் வித்தியாசமாகப் படைத்திருப்பவர்.

“ஏனம் என்ற சொல் பேச்சுவழக்கில் ஏதனம் என்றே மக்கள் மத்தியில் சொல்லாடலாக இருந்துவருகிறது எனத் தெரிவித்துள்ளதுடன், இல்லங்கள் தோறும் நித்திய பயன்பாட்டுக்குரியதாக புழங்கும் பாத்திரமே ஏதனம். இங்கு பானங்கள் அருந்தக்கொடுக்கும் பாத்திரம் ஏதனம் எனக்குறிப்பிடப்படுகிறது. பேச்சுமொழியில் மாத்திரமன்றி, செம்மொழி வழக்கிலும் தமிழில் இடம்பெற்றுள்ள ஒரு சொல்” என்றும் பதிவுசெய்துள்ளார்.

தமிழ் நாவல் இலக்கியத்தில் தெணியானின் “ஏதனம்” கவனத்திற்குரிய படைப்பாகும். இதனை இலங்கையில் பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியிட்டுள்ளது.

1964 முதல் ஏறக்குறைய ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக அயராமல் இலக்கியப்பிரதிகளை எழுதிவரும் தெணியானுடைய மணிவிழாக்காலத்தில் (2003 ஆம் ஆண்டில்) பல இலக்கிய ஆளுமைகள் இவர் பற்றி எழுதியிருக்கும் மணிவிழா சிறப்பு நூலும் வெளிவந்திருக்கிறது.

இவரது பல்துறை இலக்கிய ஆற்றல்களை மதிப்பீடு செய்யும் “தெணியானின் படைப்புகள் மீதான பார்வை” - “தெணியானின் ஜீவநதிச்சிறுகதைகள்” ஆகியனவற்றை யாழ். ஜீவநதி கடந்த 2013 இல் இவரது பிறந்த தினத்திலேயே விழா எடுத்து வெளியிட்டமை குறிப்பிடத்தகுந்தது.

இலங்கையில் மல்லிகை, ஞானம், கனடா காலம் முதலான கலை, இலக்கிய இதழ்கள் தெணியானை அட்டைப்பட அதிதியாகவும் பாராட்டி கௌரவித்துள்ளன.

எண்பது வயதை அடைந்திருக்கும் எமது இலக்கிய உலகின் மூத்த சகோதரன் தெணியானு அவர்களுக்குக் கடல் கடந்த தொலைவிலிருந்து வாழ்த்துக் கூறுகின்றேன். ■

> **இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இயங்கிய காலத்தில் யாழ்ப்பாணக்கிளையின் செயலாளராகவும் ஆக்கபூர்வமாக செயற்பட்ட தெணியான், தமது படைப்புகளுக்காக இலங்கை தேசிய சாகித்திய விருது, வடகிழக்கு மகாண அமைச்சுப்பரிசு, யாழ். இலக்கிய வட்டத்தின் பரிசு, இலங்கை தேசிய கலை இலக்கியப்பேரவை - தமிழ்நாடு சுபமங்களா இதழ் ஆகியன இணைந்து வழங்கிய பரிசு, மற்றும் தமிழ்நாடு கு. சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது, கொடகே விருது, கலாபூஷணம் விருது ஆகியனவற்றுடன் இலங்கை அரசின் உயர் இலக்கிய கௌரவமான சாகித்திய ரத்னா விருது பெற்றவர்.**















# போக்குவரத்து விதிகளைப் பின்பற்றினால் விபத்துக்களைத் தவிர்க்கலாம்

பானு

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் மனித உயிர்கள் கொல்லப்படுவது போல் இன்று வாகன விபத்துகளால் நாளாந்தம் பல உயிர்கள் இழக்கப்பட்டு வருவது தொடர்கதையாகின்றது. இலங்கை அரசாங்கம் கொரோனா வைரஸை ஊரடங்கு, ஊசிகள் மூலம் உயிரிழப்பையும் அதன் தாக்கத்தையும் கட்டுப்படுத்துவதில் வெற்றி கண்டு வந்தாலும்கூட வீதி விபத்தைக் கட்டுப்படுத்துவதில் இன்னும் முன்னேற்றம் காணவில்லை என்பது மிகவும் சிந்திக்க கூடிய விடயம்.

2021 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் உச்ச நிலையில் இருந்த காலகட்டத்தில் அரசாங்கம் நாட்டில் ஊரடங்கு அமுல் காரணமாக வீதிகளில் போக்குவரத்து நடமாட்டம் இல்லாததால் உயிர் இழப்புக்கள் ஏற்படவில்லை மாறாக ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்பு வீதி விபத்துகள் நாளுக்கு நாள் அதிகரித்துத் தற்போது மணித்தியாலத்திற்கு பல விபத்துக்கள் இடம் பெற்று வருவதனை நாம் ஊடக வாயிலாக அறிய முடிகிறது.

வீதிகளில் செல்லும் வாக னங்கள் ஒன்றுக்கொன்று மோதி அல்லது வீதியின் ஓரங்களில் உள்ள மரம், கட்டிடம், மதில், மின்சாரத் தூண்கள், பாலங்கள் போன்றவற்றில் மோதி பெரும்பாலான விபத்துகள் இடம் பெறுகிறன. நாம் வீதியில் இறங்கி வீடு திரும்பும் வரை ஒரு அச்ச உணர்வுடனே இன்றைய காலத்தில் பயணத்தைத் தொடர வேண்டிய ஓர் துர்பாக்கிய நிலையில் வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. நாம் சரியாகப் பயணித்தாலும் எதிரே வரும் சாரதிகளின் தவறுகளால் கூட விபத்துகள் நிகழ்கின்றன.

பிரதான வீதிகளில் வாகனங்கள் செல்ல வேண்டிய வேகத்தின் அளவு, குறியீடுகள், சமிக்ஞைகள், வளைவுகள் வீதியின் மருங்கிலும் கீறப்பட்டாலோ அல்லது குறியீடுகள் மூலம் காட்டப்பட்டாலோ சாரதிகள் அதனை கடைப்பிடிப்பதில்லை. அதிகளவான வாகன ஓட்டுநர்கள் வீதி ஒழுங்கைப் பின்பற்றாமல் மற்ற வாகன சாரதிகளுக்கு இடம் கொடுக்காமல் விரைந்து செல்ல முயற்சிப்பது, இது பெரும்பாலும் தனியார் மற்றும் அரச பேரூந்துகள் பயணிகளை ஏற்றுவதில் போட்டி போட்டுக் கொண்டு செல்வதனால் எதிரே வரும் வாகனங்களைக்கூட கருத்தில் கொள்ளாமல் செல்வதால் விபத்துகள் தற்காலத்தில் அதிகமாக நடைபெற்று வருகிறது.


சாரதிகளின் சில கவலையீனங்களும் விபத்தை ஏற்படுத்தத் தூண்டுகின்றனவாக உள்ளன. சாரதிகள் கைத் தொலைபேசியில் பேசிக் கொண்டு வாகனத்தைச் செலுத்துதல், இடதுபுறமாக முந்திச் செல்லல், சிக்னல் போடாமல் திரும்புதல், முந்துதல் போன்றவற்றாலும் வீதியில் திரியும் கட்டாக் காலி நாய்கள், மாடுகள், ஆடுகள் போன்றவற்றைக் கவனிக்காது வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஓடும் போது இவற்றில் மோதி விபத்துகள் ஏற்பட வாய்ப்பை உருவாக்குகிறார்கள்.

இன்று அதிகமான விபத்துகள் சரியான தூக்கமின்மை, மது போதையில் வாகனத்தை செலுத்துதல், தலைக்கவசம் அணியாமை, வாகனத்தில் செல்லும் போது இருக்கைப் பட்டி அணியாமல் பொலிஸார் மறித்தால் அதனைப் பொருட்படுத்தாது செல்லும் போது பொலிஸ் இவர்களைத் துரத்துவதால் அதிக வேகத்தில் செல்வதால்க் கூட மரணம் சம்பவிக்கின்ற நிகழ்வுகளும் அரங்கேறியுள்ளன. சாரதியொருவர் வாகனம் செலுத்துவதற்குரிய, அனைத்துத் தகுதியுள்ளவராக இருப்பதுடன் வாகனம் செலுத்தும் போது முழுக் கவ னமும் ஒரு நிலைப்பாட்டில் இருக்க வேண்டும். கவனம் சிதறும் போது விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தொலைபேசியில் பேசிக் கொண்டு வாகனம் செலுத்தும் போது ஒருநிலைப்பாட்டில் இருப்பதில்லை அதே போல் வீதிச் சமிக்ஞைகளையும் முன்னே உள்ள வாகனங்களையும் வெள்ளைக் கோட்டு பகுதியையும் அவதானித்துச் செல்லாததால் ஏற்படும் விபத்துக்கள் சொல்லில் அடங்காதவை.

அண்மையில் கூட கிளிநொச்சியில் பாதசாரி கடவையைக் கடக்க முற்பட்ட கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவி மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி அவ்வாகனங்கள் இவ் மாணவி மேல் மோதிப் பாதசாரி கடவையிலே மாணவி உயிரிழந்தமை அனைவரையும் துயரத்திற்குள்ளாக்கியது. சாரதிகள் போதிய விழிப்புணர்வை பின்பற்றி வாகனங்களைச் செலுத்தாததால் இவ்வாறான பாரதூரமான விபத்துக்கள் ஏற்பட்டன.

புத்தாண்டு போன்ற பண்டிகைக் கொண்டாட்டங்களின் போதும் அதிக விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. 2022 ஆம் ஆண்டு ஆங்கிலப் புத்தாண்டில் முல்லைத்தீவு கோப்பபிலடி பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள்-டிப்பர் விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மோட்டார் சைக்கிள் ஒன்றில் மூன்று இளைஞர்கள் பயணித்த போது எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறான விபத்துக்களால் இளைஞர்களின் உயிரிழக்கும் சம்பவம் நாளாந்தம் அரங்கேறுகிறது.

2021 ஆம் ஆண்டு தை முதல் மார்கழி வரை 1940 பேர் வீதி விபத்துக்களால் உயிரிழந்ததாகவும் கடந்த 10 வருடத்தில் 27000 பேர் இறந்துள்ளனர் எனப் பாராளுமன்றில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியட் அட்மிரல் சரத் வீரசேகர தெரியப்படுத்தினார். இவர்கள் போக்குவரத்து மீறல்கள், குடி போதையில் வாகனம் செலுத்துதல், அதிவேகம், போதைப் பொருளைப் பயன்படுத்தி செலுத்துவதால் விபத்து ஏற்படுகின்றன என்றும் போதைப் பொருளை பரிசோதிக்க உபகரணங்களை கூடுதலாக பயன்படுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டார்.



விபத்து ஏற்பட வீதிகளும் காரணமாகின்றன. பல வீதிகள் குன்றும் குழியாக உள்ளதுடன் மக்கள் சிரமம் இல்லாமல் பயணிக்கக் கூடிய விதத்தில் புனரமைக்கப்படுவதில்லை. கடந்த அரசாங்கத்தில் கூட மருதங்கேணி தொடக்கம் அம்பன் வரை புதிதாக வீதி திருத்தப்பட்டு புனரமைக்கப்பட்டது. ஆனால், அவ் வீதி போடப்பட்டு சில மாதங்களில் குன்றும் குழியுமாக தொடர்ச்சியாகவே உள்ளது ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்ற தரமற்ற வீதிகள் மக்களை ஏமாற்றி அபிவிருத்தி செய்யப்பட்டதா? எனச் சமூக ஆய்வாளர்களின் மனதில் கேள்விகள் எழுகின்றன. முறையாகத் திட்டமிடாமல் மக்களை ஏமாற்றும் வேலையை எந்த அரசு செய்தாலும் அதில் பாதிக்கப்படுவது மக்களே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வீதிகளில் விபத்துகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளானவரை உடனே வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்குக் கூட அச்சப்பட வேண்டிய நிலையில் பலர் உள்ளனர். பொலிஸ் முறைப்பாடு என அலைய வேண்டிய சூழல்வந்தாலும்என யோசித்து பல விபத்துக்களைக் கண்டும் காணாமல் செல்லும் மனிதர்கள் வாழ்வது மிகவும் வேதனையான விடயம்.

விபத்துக்களால் ஏற்படும் மரணங்கள், காயங்களால் அங்கவீனப் பட்டோர் என்பன காரணமாக ஏற்படும் பொருளாதார இழப்பானது தனிக் குடும்பத்தை மட்டுமின்றி முழு நாட்டையும் பாதிக்கின்றது. இவர்களால் அந்த குடும்பம் பல இக்கட்டான சூழலுக்குத் தள்ளப்படுகின்றது. பெரும்பாலும் அதிகமான விபத்துக்கள் இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் ஏற்படுகின்றன. இதனால் குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுடைய பாதசாரிகள், சாரதிகள், பொதுப் போக்குவரத்து சேவையில் ஈடுபடுவோர் பெரும்பாலும் பாதிக்கப்படுகிறார்கள்.

உலக நாடுகள் பலவற்றில் போக்குவரத்து விதிகளை மீறினால் கடுமையான தண்டனைகள் உள்ளதால் அந்த நாடுகளில் விபத்துகளும் குறைவு மக்களும் சட்டங்களை மதித்து செயற்படுகிறார்கள். எமது நாடு யுத்தம் முடிந்த பின் பொருளாதார துறையில் நினைத்த வளர்ச்சியை எட்டவில்லை அரசியல் வாதிகள், வசதி படைத்தவர்கள் சட்டங்களை மதிக்கத் தவறியதனாலும் தாம் சட்டங்களிலிருந்து தப்பிக்கச் செல்வாக்கு மூலம் தப்பித்துக் கொள்கிறார்கள். நீதியான படி செயற்படல் சட்ட நடவடிக்கை எடுக்க நினைக்கும் பொலிஸ் இருந்தால் அவர் உடனே இடம் மாற்றத்துக்குள்ளாகி மன உழைச்சலுக்கு உள்ளாகின்றார்.

தினமும் இடம் பெறும் விபத்தைக் குறைக்க போக்குவரத்துச் சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் அத்துடன் வீதிச் சட்டங்கள் தொடர்பாக கிராமம் கிராமமாக விழிப்புணர்வு நடவடிக்கை மூலமாக தெளிவுபடுத்த வேண்டும். சாரதிகள் பொறுப்புடனும் அவதானத்துடனும் செயற்படுகின்ற போது விபத்துக்கள் தவிர்க்கப்பட்டு உயிர் இழப்புக்கள் குறைவதனால் பெறுமதியான மனித உயிர் பாதுகாக்கப்படுகிறது. அத்துடன் எதிர்கால சமுதாயம் சிறந்த முறையில் நீதி சட்டங்களை மதித்து பயணிக்க ஒரு வாய்ப்பாக இருக்கும் வீதி விபத்தை குறைக்க இன்றே வீதிச் சட்டங்களைப் பின்பற்றுங்கள் அதனால் உமது உயிர் பாதுகாக்கப்பட்டு நாளை ஆரோக்கியமான சிறந்த மனிதனாக இன்னும் பல வருடங்கள் உலகில் வாழ வாய்ப்பாக அமையும். சிந்தித்து செயற்படுங்கள். ■

> “**விபத்து ஏற்பட வீதிகளும் காரணமாகின்றன. பல வீதிகள் குன்றும் குழியுமாக உள்ளதுடன் மக்கள் சிரமம் இல்லாமல் பயணிக்கக் கூடிய விதத்தில் புனரமைக்கப்படுவதில்லை. கடந்த அரசாங்கத்தில் கூட மருதங்கேணி தொடக்கம் அம்பன் வரை புதிதாக வீதி திருத்தப்பட்டு புனரமைக்கப்பட்டது. ஆனால், அவ் வீதி போடப்பட்டு சில மாதங்களில் குன்றும் குழியுமாகவே தொடர்ச்சியாக ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்ற தரமற்ற வீதிகள் மக்களை ஏமாற்றி அபிவிருத்தி செய்யப்பட்டதா என சமூக ஆய்வாளர்களின் மனதில் கேள்விகள் எழுகின்றன.**”

# கல்யாணக்கனவு

யாழ் சத்யா

> விபூதி, சந்தன வாசமும், ஆண்டவனுக்குச் சாத்தப்பட்டிருக்கும் பூக்களின் நறுமணமும், ஊதுவத்தி, சாம்பிராணிப் புகையும் தீபாராதனையின் கற்பூர வாசமும் சேர்ந்து எழும் கோயில்களுக்கே உரித்தான பிரத்யேக நறுமணத்தைச் சுவாசித்த படி, தூணொன்றில் கண்கள் மூடிச் சாய்ந்திருப்பது என்றுமே வைஷாலிக்குப் பிடித்தமான விடயம்.




அன்று வெள்ளிக்கிழமை என்பதால் காலையில் சிறிது நேரத்தோடு எழுந்து நீராடி விட்டுக் கோயிலுக்குச் செல்லத் தயாராகினாள் வைஷாலி. காலையில் விரதம் என்பதால் வெறும் தேநீரை அருந்தி விட்டு, அவள் வீட்டின் அருகிலிருந்த ஸ்ரீ கதிரேசன் கோயிலை அடைந்தாள்.

சிறு முகப்போடு ஆலயத்துக்குரிய அனைத்து அம்சங்களோடும் முருகப்பெருமான் வீற்றிருக்க, அவர் அன்னை அம்பாள், அண்ணன் விநாயகர் முதலானோரும் வீற்றிருந்து தம்மைத் தேடி வரும் அடியவர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருந்தனர்.

ஆலயத்தைச் சுற்றி வழிபட்டுத் தனது குடும்பத்தாரின் பெயரில் அர்ச்சனையும் செய்து கொண்டவளிடம் பூசகர்,

“ஞாயிற்றுக்கிழமை தைப் பூசம் வைஷாலிம்மா... மூணு தேரும் இழுக்கிறோம். வேலையும் இல்லைத் தானே உங்களுக்கு. கண்டிப்பா வந்து அப்பன் முருகனிட அருள் வாங்கிக் கொண்டு போக வேணும். இந்த வருசம் நிச்சயமாக அவன் உங்களுக்கு ஒரு விடிவைத் தருவானம்மா...”

கூறிக் கொண்டே வைஷாலியிடம் பிரசாதத்தைக் கொடுத்தார் அர்ச்சகர். தலவாக்கலைக்கு வந்ததிலிருந்தே தவிர்க்க முடியாத காரணங்கள் ஏதுமில்லாது விட்டால் தவறாது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் செவ்வாய்க் கிழமையும் ஆலயத்துக்கு வருபவளிடம் அந்த வயதான அர்ச்சகருக்குத் தனிப் பரிவு.

சில நேரங்களில் வார இறுதி நாட்களில் கூட கோயிலுக்கு வந்து சுற்றுப் புறங்களைச் சுத்தம் செய்வதற்கு உதவி செய்வாள். இந்தக் காலத்தில் இளைய தலைமுறையினர் கோயிலுக்குச் செல்வதையே பட்டிக்காட்டுத்தனமாயும் பிற்போக்குச் சிந்தனை உள்ளவர்கள் செயலாயும் பார்க்கும் நேரத்தில் இத்தனை ஈடுபாட்டுடன் ஆலயப்பணி செய்பவளிடம் மிகுந்த அன்பு அவருக்கு.

ஓரிரு வருடங்களுக்கு முன்பு ஆலயத்திலிருந்து அழுது கொண்டிருந்தவளின் கதையைக் கேட்டதிலிருந்து அந்த அர்ச்சகர் தினமும் மனதார அந்த முருகனிடமும் அம்பாளிடமும், ‘இவளுக்கொரு நல்ல வழியைக் காட்டி விடு தெய்வமே’ என்று வேண்டாத நாளில்லை.

அர்ச்சகரிடம் ஞாயிற்றுக்கிழமை கண்டிப்பாக வருவதாகக் கூறியவள் மணிக்கட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்தாள். வேலைக்குச் செல்ல இன்னும் நேரம் இருந்தது.

விபூதி, சந்தன வாசமும், ஆண்டவனுக்குச் சாத்தப்பட்டிருக்கும் பூக்களின் நறுமணமும், ஊதுவத்தி, சாம்பிராணிப் புகையும் தீபாராதனையின் கற்பூர வாசமும் சேர்ந்து எழும் கோயில்களுக்கே உரித்தான பிரத்யேக நறுமணத்தைச் சுவாசித்த படி, தூணொன்றில் கண்கள் மூடிச் சாய்ந்திருப்பது என்றுமே வைஷாலிக்குப் பிடித்தமான விடயம்.

பூசைக்குப் பிறகு கோயிலில் நிலவும் நிசப்தத்தில் கண்கள் மூடி எந்த வித சிந்தனைகளுமில்லாது ஒரு மோன நிலையில் நிச்சலனமாய் ஒரு பத்து நிமிடங்களாவது அமர்ந்து விட்டுப் போனால் அது அவளுக்குப் பெரியதொரு பலத்தைக் கொடுப்பது போல் உணர்வாள்.

இவ்வாறு தவறாது கோயிலுக்கு வருவதனால் அவளைத் தீவிர பக்தையாக நினைத்து விடக் கூடாது. காலம் காலமாக சிறு வயதிலிருந்தே போதிக்கப்பட்ட பழக்க வழக்கமாக ஆலயங்களுக்குச் சென்று வணங்கினாலும் அவள் அப்படியொன்றும் தீவிர மதவாதி கிடையாது. அவளுக்குக் கோயிலுக்குச் செல்லும் போது ஒரு நேர்மறை எண்ணம் மனதில் எழுந்து ஒரு புத்துணர்வு தருவதாய் ஒரு உணர்வு. ஞாயிற்றுக்கிழமையில் கிறிஸ்தவ தேவாலயத்திற்கும் பௌர்ணமி தினங்களில் புத்த விகாரைக்கும் போகக் கூடத் தவறுவதில்லை அவள்.

தலவாக்கலை வந்த புதிதில் தனிமையைப் போக்கவென அனைத்து மதக் கடவுள்களையும் துணைக்குச் சேர்த்தவளுக்கு, இப்போது இதுவே வாடிக்கையாகி அவள் வாழ்க்கை நடைமுறையாகி விட்டது.

இப்போதும் வேலைக்கு நேரமிருக்கவே பத்து நிமிடங்கள் உட்கார்ந்து விட்டுச் செல்வோம் என்று எண்ணி, அமர்வதற்கு இடம் தேடியவள் கண்ணில் அவன் பட்டான். கோயிலுக்கு உள்ளே வருவதற்காக கழட்டிய சேர்ட்டை அணிந்து கொண்டு வெளியே சென்றவன், வெளிப்புறப்படியில் ஒதுக்குப் புறமாக அமர்ந்து கொண்டான்.

பின்புறமாகப் பார்த்தாலும் அது அவன்தான் என்பதைப் புரிந்து கொண்டவள், ஏதோ உந்துதலில் அவன் அருகே சென்று அமர்ந்தாள். திரும்பிப் பார்த்தவன் சிறு அதிர்ச்சியை முகத்தில் காட்டினான். அதிலேயே அவன் தன்னை அங்கு எதிர்பார்க்கவில்லை என்று புரிந்து கொண்டவள்,

“ஏன்டா... என்னைத் தெரியாத போலவே நடிக்கிறாய்? பாரன் ஆளை... பெரிய லெவல்தான் உனக்கு என்ன?”

இப்போதும் சிறு பிள்ளை போல் கதைப்பவளை ஆச்சரியத்துடன் பார்த்துப் புன்னகைத்தான்.

“இப்ப என்ன இளிப்பு வேண்டியிருக்கு...? கேட்டதுக்கு முதல்ல பதிலைச் சொல்லு... அன்றைக்கு ஏன் ஃபாங்கில கண்டிட்டுக் காணாதது போல போனனி...?”

“அப்ப நீ வைஷூவே தானா? நீதானோ என்று சந்தேகமாக இருந்துச்சு. அரிசி மூட்டை ஒன்று இப்படி பயித்தங்காயா மாறினால் எப்பிடி அடையாளம் கண்டு பிடிக்கிறதாம்?”

“ஓ...! ஏன் நீ என்னட்டயே கேட்டிருக்கலாமே...”

“ஏன்...? நான் வேற யாரிட்டயும் மாறிக் கேட்க, அவள் நான் கடலை போட ட்ரை பண்ணுறன் என்று நினைச்சு எனக்கு நல்லா நாலு சாத்தவோ?”

“ஹா... ஹா... ஓகே... ஓகே... உன்னை மட்டும் என்ன அடையாளம் கண்டுபிடிக்க முடியுதா என்ன? நான் நீ போன பிறகு உன்ர டீடெய்ல்ஸ் பார்த்துத் தானே கண்டு பிடிச்சன். தலையையும் தாடியையும் பாரன்... தலைக்கு எண்ணெய் வைச்சு எவ்வளவு நாளடா?”

‘ஹி ஹி ஹி’ என்று அதற்கொரு அசட்டு நகைப்பைப் பதிலாக வழங்கினான் சஞ்சயன்.

“இங்கயா இருக்கிறாய் இப்ப? எங்க வேலை செய்யிறாய்?”

“இங்க வந்து மூணு மாசம் தான் ஆகுது. ஆனா கம்பஸ் முடிஞ்சதில இருந்து மலையகத்திலதான் வேலை. முந்தியொரு எஸ்டேட்டில வேலை செய்தனான். அது வேற ஆட்கள் கைக்கு மாறவும் எனக்கு அங்க வேலை செய்யப் பிடிக்கேல்ல. அப்பத்தான் இந்த டீ பக்டரில வேலை கிடைச்சுது. மாறி வந்திட்டன்.”

“ஓ... ஓகேடா. அப்ப அம்மா, அப்பா, அக்கா எல்லாம் எப்பிடியிருக்கினம்? அக்காக்கு எத்தினை பிள்ளையள்?”

“அப்பா போய்ச் சேர்ந்து நாலு வருசமாச்சு. அக்காக்கு மூணு பிள்ளையள். அம்மாவும் அக்காவோட ஜேர்மனியில் செட்டில் ஆகிட்டா.”

“ஓ... சொரிடா... அப்பாட விசயம் எனக்குத் தெரியாது...”

“பரவாயில்லைடி... எல்லாரும் ஒரு நாளைக்குப் போறது தானே... ஹார்ட் அட்டாக்கில பெருசா கஸ்டப்படாமல் உடன போய்ட்டார்...”

“ஹூம்... முடிஞ்சதை விடுடா. அப்ப உன்ர மனுசி, பிள்ளையள் எங்க இருக்கினம்? இங்க உன்னோட தானோ...? இல்லை ஊரிலயோ...?”

“இனித்தான் கண்டு பிடிக்க வேணும்...” சொன்னவனைப் புரியாமல் பார்த்தாள் வைஷாலி.

“இன்னும் கலியாணம் கட்டலடி...” அவளின் குழம்பிய பார்வையைப் பார்த்து விட்டு சிரித்துக் கொண்டே சொன்னான் சஞ்சயன்.

“ஏன்டா...? எங்கட பட்ச்சில எல்லாம் கட்டிட்டுதுகளே... என்ன உனக்கென்று பிறந்தவளை இன்னும் மீட் பண்ணலையோ... அல்லது மீட் பண்ணிச் சரி வராததிலதான் இந்தத் தாடி மீசை தேவதாஸ் கோலமோ...?”

“சீச்சி... அப்படியெதுவும் இல்லையடி... ஒவ்வொரு நாளும் ஷேவ் பண்ணப் பஞ்சி. அதுதான்... இப்ப இது தானே ஃபஷன்... விஜய் சேதுபதியைப் பார்... தாடி மீசை வடிவாய் தானே இருக்கு...”

“அது அவருக்கு நல்லா இருக்கு. உன்னைப் பாக்கவே சகிக்கல. நீ உன்ர மூஞ்சியைக் கண்ணாடில பாக்கிறாய் தானே... நீ இப்பிடி இருந்தால் எவள் உன்னைப் பார்த்து கட்டுறதுக்கு ஓமெண்டுவாள்...”

சொல்லிக் கொண்டே நேரத்தைப் பார்த்தவள்,

“எனக்கு வேலைக்கு நேரம் போகுதுடா சஞ்சு... பிறகு பாப்பம் என்ன... சரி... போய்ட்டு வாறன்...”

அவனின் பதிலுக்குக் காத்திராமல் வெளியே கழட்டி வைத்திருந்த செருப்பைப் போட்டுக் கொண்டு விரைந்தவள் வழியில் சென்ற முச்சக்கர வண்டியை மறித்து ஏறிச் சென்று விட்டாள்.

அவள் செல்வதையே ஏக்கப் பெருமூச்சொன்றோடு பார்த்தவன், தனது கைப்பேசியை எடுத்து அதில் கமெராவை உயிர்ப்பித்து ஷெல்பி மோடில் விட்டுத் தனது முகத்தையே அப்படியும் இப்படியும் திருப்பிப் பார்த்தான்.

**அவள் கனவு நனவாகுமா?**

புலோலியூர் வேல்நந்தன்

# அல்புனைவுப் படைப்பாய் கிராமத்து மனிதர்களின் சில பக்கங்களைப் பேசும் இராஜேஸ்கண்ணன் அவர்களின் “கிராமத்து மனிதர்கள்”

## - ஒரு பார்வை

தீம்புனலின் புதுப்புனலில் இவ்வாரம் அறிமுகம் காண்பது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளரும் வடமராட்சி மண் தந்த பன்முக ஆற்றல் மிகு படைப்பாளியும் விமர்சகருமாகிய இராஜேஸ்கண்ணன் அவர்கள் மிக அண்மையில் வெளியிட்டுள்ள அல் புனைவுகளின் தொகுப்பாகிய “கிராமத்து மனிதர்கள்” என்ற நூலாகும். முதுசமான சிறுகதைத் தொகுதி உட்பட பல காத்திரமான சிறுகதைத் தொகுதிகளினதும் சமூகவியல், இலக்கியக் கட்டுரைத் தொகுதிகளினதும் கவிதைத் தொகுதிகளினதும் சொந்தக்காரர் அண்மையில் தனது பன்னிரு வயது மகனை இழந்த துயரத்தில் மகன் நினைவாக அவர் வெளியிட்ட “வாமனம்” என்ற நினைவு நூல் வழி ஒரு பாசமுள்ள தந்தையின் மன உருக்கத்தை உணர்ந்து கொண்டோம். கிராமத்து மனிதர்கள் என்ற அவரது இந் நூல் “நெஞ்சில் வளர்த்தி மூச்சின் இளஞ்சூட்டின் சுகம் காணும் தவிப்போடு அப்புவுக்கு” என தனது மகன் வாமணனுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

ஆகாயம் பதிப்பக அச்சமைப்பில் மீளுகை 2 வெளியீடாக வந்துள்ள இந்நூலின் அட்டைப் படமானது காங்கேயன், கிருபாகரன் ஆகியோர் வரைந்த ஓவியங்களின் கலவையாய் அமைந்துள்ளது. இந் நூல் இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் தொகுதி “கிராமத்து மனிதர்கள்” என்ற தலைப்பிலும் இரண்டாம் தொகுதி “ஊருக்கை ஒரு கதை” என்ற தலைப்பிலும் அமைந்துள்ளது. இதிலுள்ள முதல் இருபது கட்டுரைகள் உதயன் சஞ்சீவியில் இராகன் என்ற புனைப்பெயரில் எழுதப்பட்டவை. எழுத்தில் வரையப்பட்ட சித்திரங்கள் என்ற தலைப்பில் இந்நூலுக்கான சிறப்பானதொரு அணிந்துரையை ஈழத்து இலக்கியப் பரீட்சயத்துடன் பல்துறைப் படைப்பாளுமை மிக்க தமிழகப் பேராசிரியர் அ.ராமசாமி அவர்கள் வழங்கியுள்ளார். அவர் தமது உரையில் “இவர் இங்கு முழுமையான புனைவாக்கத்தில் ஈடுபடாமல் வாசிப்பவர்கள் வசிக்கும் வெளியில் சந்தித்திருக்கக் கூடிய மனிதர்களின் மாதிரிகளை எழுதிக் காட்டும் புதுவகைப் புனைவைக் கொடுத்துள்ளார். கல்விப் புலப் பார்வையும் புனைவின் கூறுகளையும் செம்பாதியாகக் கலந்து எழுதப்பெற்ற இவ்வகைப் புனைவுகளை இ.ராஜநாராயணனின் கரிசல் காட்டுக் கடுதாசியிலும், ஜெயகாந்தனின் “அவர்கள் உள்ளே இருக்கிறார்கள். இவர்கள் வெளியே இருக்கிறார்கள்” போன்ற புனைவல்லா எழுத்துகள் அப்படியானவை.

யாழ்ப்பாண வட்டாரக் கிராமத்து மனிதர்களின் சித்திரத்தை உயிர்ப்பிக்கும் இ.இராஜேஸ்கண்ணனின் இவ் வகை எழுத்துகள் அந்த வரிசையில் வைக்கப்பட வேண்டியவை எனப் போற்றியுள்ளார். “கற்பனை தேவைப்படாத கிராமத்துக் கதைகள்” என்ற தலைப்பில் நூலாசிரியரான இராஜேஸ்கண்ணன் அவர்கள் வாழ்ந்து விட்டுப் போன மனிதர்களை நினைவு கூர்தலின் வழியே ஒரு கால கட்டத்தின் வாழ்வு முறையை நினைவு கூர்தல் சாத்தியமாகின்றது என்பதுடன் சமூகவியலைக் கல்விசார் துறையாகக் கொண்டவன் என்பதாலும் கதை சொல்வதில் ஆர்வமுள்ளவன் என்பதாலும் கதைகளின் வழியாக கிராமிய மக்களது சமூகவியலை பதிவாக்கும் ஒரு முயற்சியாக இவை என்னுள் பதியமாகியிருக்கலாம் போலும் என்பதுடன் இவை சிறுகதைகள் அல்ல கிராமத்து மனிதர்களின் கதைகள் இவற்றில் புனைவுக்கான பண்புகள் இல்லையெனும் அளவிற்கு மிகச் சொற்பமானவை. உண்மைதான் அதிகம் இவற்றை அல் புனைவுகளின் புனைவு எனலாம் என்கிறார்.

கிராமத்து மனிதர்கள் என்ற பகுதியில் பெண்டுகள் கந்தியான், குத்தகைக்கார தம்புப்பிள்ளை, குத்தூசிக்குமாரு, சீட்டுக்காரச் சிந்தாமணி, பன்னாங்குப் பரமகுரு, கார்காரக் காத்தியண்ணன், ஆரியப்பூமாலை அரிய சிங்கம், கல்வெட்டுக் கந்தப்பு, கள்ள உறுதிக் கனகுவாத்தி.. எனப் பல அல்புனைவுகளும் ஊருக்கை ஒரு கதை என்ற பகுதியில் வீணாய்ப் போன விண்ணாணக் குஞ்சி, யானை திரத்தின கூளைக் கணபதி, கோழிக்கள்ளன், கோவிந்த சாமி என்ற தலைப்புக்களில் பல அல்புனைவுகளும் இடம் பெற்றுள்ளன. இவற்றில் பலருடைய கதைகள் நூலாசிரியர் நேரடியாகக் கண்டு அனுபவித்து எழுதியுள்ள விடயங்களாக அமைகின்றன. ஒவ்வொரு படைப்புக்களும் எம்மை அந்தந்தக் காலங்களுக்கும் அம் மனிதர்கள் குறித்த வாழ்வியல் கோலங்களுக்கும் எம்மை அழைத்துச் செல்கின்றன. பூசி மெழுகிச் சொல்லாமல் உள்ளதை உள்ளவாறு சித்தரிக்கும் தன்மையும் ஒளிவு மறைவற்ற வெளிப்படைத்தன்மையான விபரிப்புகளும் இவ் அல் புனைவுகளை உண்மைக்கு நெருக்கமாக்குகின்றன. இந்தத் தலைப்புகளே அத்தகைய மனிதர்கள் குறித்த விம்பங்களை எம்மிடம் ஏற்படுத்துவதுடன் எமது அயலிலும் ஊர்களிலும் கூட இத்தகைய பல பட்டப் பெயர்களோடு வாழுகின்ற மனிதர்களை நினைவுபடுத்துகின்றன.

பெண்டுகள் கந்தியான் என்ற கந்தவனம் குறித்த முதலாவது அல்புனைவே இந் நூலைத் தொடர்ந்து வாசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை எம்முள் ஏற்படுத்துகிறது. அதில் ஆரம்பத்தில் வயல் வாழ்வோடு இணைத்தும், பின்னர் வெத்திலை போட்டு சமையலில் பெண்கள் செய்யும் வேலையெல்லாம் செய்யும் ஒருவராக அவர் சித்தரிக்கப்படும் முறையும் அதனை கதாசிரியர் சொல்லும் விதமும் மிகச் சுவைமிக்க வாசக அனுபவத்தை எமக்குத் தருகின்றன. மேலும் அதில் வரும் உப்பட்டி, கடமானால், பொலி, குல்லம், தட்டுப் பெட்டி போன்ற வயலோரச் சமூகக் கிளை மொழிப் பயன்பாடுகளும் கந்தவனத்தை ஆண், பெண் என இரு தளங்களில் சித்தரித்து நிறைவில் இன்றைய பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வழிகாட்டியாய் கந்தவனத்தைக் கொள்ள முடியும் என அல்புனைவை முடிப்பதும் சிறப்பு. இவ்வாறுதான் இந் நூலில் உள்ள எல்லாம் அல்புனைவுகளும் சிறப்பான படைப்புக்களாக புதிய தரிசனத்தை எமக்குத் தருகின்றன. ஆட்டுக் கட்டை ஆறுமுகத்தார் என்ற ஆக்கம் கிடாய் ஆடு வளர்த்து வேள்விக்கு விடும் ஆட்டடி பராமரிப்பாளர் அல்லது அதனையே தொழிலாளக் கொண்ட ஆறுமுகத்தார் பற்றிய சித்தரிப்பாக அமைகிறது. ஆடு வளர்ப்பின் பல்வேறுபட்ட நுணுக்கங்களையும் கதாசிரியர் பதிவாக்கி உள்ளமையும் கல்குலேற்றரை-ஆடு விலை மதிக்கும் மிசின் என அவரை ஏமாற்றும் நலினத் வியாபாரிகளும் என நகைச்சுவை அங்கதச் சுவையுடனும் இப் படைப்பு அமைகிறது. குத்தூசிக்குமாரு என்ற படைப்பில் வீட்டுக்குக் கூரை வேயும் தொழில், அதில் பயன்படும் குத்தூசி, அதனை சிறப்புறக் கையாளும் குமார் பற்றிய சித்தரிப்பு என நாம் மறந்து போன பல விடயங்கள் ஞாபகமூட்டப்படுகின்றன. இறுதியில் அவர் இறந்த போது அவரது சொந்த வீடு ஒழுக்குள்ளதாக இருக்க

எத்தனை வீடுளை
மேய்ஞ்ச மனிசன்
ஒழுக்கு வீட்டிலை
வாழ்ந்திட்டு
போகுது - வையகம்
இது தானடா! என

ஊருக்காக, பிறரின் உயர்வுக்காக உழைக்கும் கூலித் தொழிலாளிகளின் வாழ்வியல் யதார்த்தம் பேசப்படுகிறது. கள்ள உறுதிக் கனகு வாத்தி என்பதை ஒரு ஆசிரியராக மனம் ஏற்க மறுத்தாலும் உருளிக்கனகுவாய், புட்டிசக் கனகுவாய், நரிக்கனகனாய் எனப் பல்வேறுபட்ட நிலைகளில் கனகு வாத்தியார் பற்றிய சித்தரிப்பு அமைந்து எம்மை சித்தரிக்க வைக்கிறது. இதில் ஒளிவு மறைவற்ற வெளிப்படைப் புனைவாக்கத்தையும் காண முடிகிறது. இந் நூலின் பிற்பட அமைந்துள்ள ஊருக்கை ஒரு கதை என்ற பகுதியில் வரும் வீணாய்ப் போன விண்ணாணக் குஞ்சி என்ற அல் புனைவில் சட்டயார் கனவு பொய்த்துப்போன குஞ்சியம்மாளின் வாழ்வியல் பேசப்படுகிறது. இந்தக் கதைகள் முதற் தொகுதிக் கதைகளை விட எள்ளலும் ஏளனமும் மிக்கனவாய் அமைந்துள்ளன. இங்கு தலைப்புக்கள் ஒரு எதுகை மோனையாக அமைக்கப்பட்டாலும் படைப்பைப் படித்த பின் அவை வெறும் எதுகை மோனைகள் அல்ல என்பதையும் எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. மொத்தத்தில் அல்புனைவாய் கிராமத்து மனிதர்களின் வாழ்வியல் சமூகவியல் நோக்கில் பதிவு செய்துள்ள இப்படைப்பு இது போன்ற பல படைப்புக்கள் எதிர்காலத்தில் வருவதற்கான வழிகாட்டியாய் அமைகிறது என்பது திண்ணம். இதனை தீம்புனலின் புதுப்புனலில் அறிமுகம் செய்வதில் அக மகிழ்கிறோம்.




## புதுப்புனல் - 25

# நல்லாட்சி தந்ததை அனுபவிக்கும் சுபீட்சத்தின் நோக்கு...!

பிதாமகன்



நல்லாட்சி காலத்தில் நுவரெலியா மாவட்டத்துக்கு மேலதிக பிரதேச செயலகங்களை அமுல்படுத்த 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வர்த்தமானி வெளியானது. இலங்கையின் குறைந்த மக்கள் தொகையினர் வாழ்ந்து வரும் பெரும்பான்மையினப் பிரதேசங்களில் பல பிரதேச செயலகங்கள் இருக்க, நுவரெலியா மாவட்டத்தில் 2இலட்சம் சனத்தொகைக்கும் அதிகமான மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களுக்கு ஒரு பிரதேச செயலகம் என்ற நிலைமையே உள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் சனத்தொகையில் பெரும்பான்மையானோர் தமிழர்கள். ஆனால், இங்கு 5 பிரதேச செயலகங்களே உள்ளன. அதிலும் பெருந்தோட்டப்பகுதி மக்கள் செறிந்து வாழ்ந்து வரும் அம்பகமுவை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களின் தொகை 2இலட்சத்து 56 ஆயிரம் ஆகும். இதில் பெருந்தோட்ட மக்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 83 ஆயிரம் ஆகும். இலங்கையிலேயே அதிக சனத்தொகை கொண்ட கிராம சேவகர் பிரிவும் இந்தப் பிரதேச செயலகத்தின் கீழேயே வருகின்றது. அது பொகவந்தலாவை பகுதியில் அமைந்துள்ள கெர்கஸ்வோல்ட் கிராம அதிகாரிப் பிரிவு. இந்தக் கிராம சேவகர் பிரிவிலுள்ள மக்களின் தொகை 12 ஆயிரத்துக்கும் அதிகமாகும்.

நாட்டின் சில பகுதிகளில் 300 பேருக்குக் கூட ஒரு கிராமசேவகர் பிரிவு உள்ள போது, பெருந்தோட்ட மக்களின் நிலைமை இவ்வாறு உள்ளது. இந்த பிரச்சினையை நிவர்த்தி செய்யவே மேலதிக பிரதேச செயலகங்கள் அமுல்படுத்துவது பற்றி நல்லாட்சி அரசாங்கத்தின் தமிழ் முற்போக்குக் கூட்டணி நடவடிக்கை எடுத்திருந்தது. அவ்வாறு பிரதேச செயலகங்கள் அதிகரிக்கும் போது கிராம சேவகர் பிரிவுகளும் அதிகரிக்கப்படும். மக்கள் தமது சேவைகளை சிக்கலின்றி பெறலாம் என்பது முக்கிய விடயம்.

ஆனால், 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துக்குப்பிறகு நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நிலைமைகள் காரணமாக ஆட்சி மாற்றமும் ஏற்பட்டது. ஜனாதிபதித் தேர்தல் அதன் பிறகு பாராளுமன்றத் தேர்தலும் இடம்பெற்று முடிந்தது. நுவரெலியா மாவட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை பிரதிநிதித்துவப் படுத்திய இரண்டு பேர் மாத்திரமே பாராளுமன்றுக்குத் தெரிவாகினர். ஒருவர் ஜீவன் தொண்டமான், மற்றையவர் மருதுபாண்டி ராமேஷ்வரன். இவர்கள் இருவரும் நுவரெலியா மாவட்டத்துக்கு பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் மூலம் ஏதாவது செய்வார்கள் என்று எதிர்ப்பார்த்தால், நல்லாட்சி அரசாங்கம் பாதியில் விட்டுச்சென்ற அபிவிருத்தித் திட்டங்களையே கண்டு கொள்ளாது இருக்கின்றனர்.

அதில் பிரதானமானது மேலதிக பிரதேச செயலகங்கள் அமுலாக்கம். வர்த்தமானி அறிவித்தலின் படி நுவரெலியாவுக்கு 5 பிரதேச செயலகங்களும் காலி மாவட்டத்துக்கு மேலதிகமாக 3 பிரதேச செயலகங்களும் உருவாக்கப்படல் வேண்டும். காலி மாவட்டத்தில் புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட, நுவரெலியா மாவட்டத்துக்கு உப பிரதேச செயலக காரியாலயங்கள் இரண்டை மாத்திரம் கொடுத்திருக்கின்றது இந்த அரசாங்கம்.

அதையும் சத்தமில்லாது சென்று திறந்து வைத்து விட்டு வந்து தற்போது விமர்சனங்களுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கின்றனர் இ.தொ.கா பிரதிநிதிகள். சிங்கள மக்கள் செறிவாக வாழ்ந்து வரும் தென்மாகாணத்துக்கும் தமிழ் மக்கள் அதிகமாக வாழ்ந்து வரும் நுவரெலியா மாவட்டத்துக்கும் இந்த அரசாங்கம் காட்டி வரும் மாற்றாந்தாய் மனப்பான்மைப் பற்றி எதிரணியினர் மாத்திரமே குரல் கொடுத்து வருகின்றனர். ஆனால் ஆளுந்தரப்பிலிருக்கும் இரண்டு பிரதிநிதிகளின் மௌனத்தைப்பற்றி அவர்களுக்கு வாக்களித்தவர்களே கண்டு கொள்ளவில்லை.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு வாக்களித்தவர்களின் 90 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்கள். அவர்களின் ஆயிரம் ரூபாய் நாட் சம்பள பிரச்சினை இது வரை தீர்க்கப்படவில்லை. நல்லாட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட தனி வீட்டுத்திட்டங்கள் பல முற்றுப்பெறாமலுள்ளன. அதை முழுமையாக்கும் எண்ணம் தற்போதுள்ள அரசாங்கத்திடம் இல்லை. பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் தோட்டத்தொழிலாளர்களுக்கு சலுகை விலையில் கோதுமை மாவை மட்டும் கொடுத்து சமாளித்துள்ளது அரசாங்கம்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வீடமைப்புக்கென 500 கோடி ரூபாய் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அரச நிர்வாக கட்டமைப்பில் இவர்கள் உள்வாங்கப்படுவதற்கான பிரதேச செயலக அதிகரிப்பும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட்ட மேலதிக பிரதேச சபைகளை இன்று அனுபவித்து வருபவர்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸினரே.



மேலதிக பிரதேச சபைகள்

பிரதேச செயலக அதிகரிப்புக்கு முன்பதாக அரசியல் ரீதியான உரிமைகளைப்பெறவும் அதிகரித்துக்கொள்ளவும் நுவரெலியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற திட்டம் தமிழ் முற்போக்குக் கூட்டணியினரிடம் எழுந்தது. அதன் பயனாக 2017 ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்தில் மேலதிகமாக 4 பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. அதிக சனத்தொகை கொண்ட நுவரெலியா பிரதேச சபை இரண்டாக பிரிக்கப்பட்டு அங்கு அக்கரபத்தனை மற்றும் கொட்டகலை பிரதேச சபைகள் என்பன ஸ்தாபிக்கப்பட்டன. அதே போன்று அம்பகமுவ பிரதேச சபையானது நோர்வூட் மற்றும் மஸ்கெலியா பிரதேச சபைகள் என இரண்டு பிரிவாகியது. நல்லாட்சி காலத்தில் பதவிகள் எதுவுமின்றி எதிரணியில் இருந்த அமரர் ஆறுமுகன் தொண்டமான் மற்றும் முத்து சிவலிங்கம் ஆகியோர் இதற்கு அப்போது எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் பின்னர் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் புதிதாக உருவாக்கப்பட்ட நான்கு பிரதேச சபைகளிலும் அதிக உறுப்பினர்களைப் பெற்று இன்று வரை ஆட்சி செலுத்தி வருவோர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களே. ஆக நல்லாட்சி அரசாங்கத்தின் சில அம்சங்களை இவர்கள் அனுபவித்துக்கொண்டு, புதிய அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கில் மலையக மக்களுக்கு ஒன்றையுமே பெற்றுத்தராது, காலத்தை கடத்தி வருகின்றனர்.

தற்போது மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் பகிரங்கமாகவே ஆளுந்தரப்பு பிரதிநிதிகளைப்பற்றி விமர்சனங்கள் கிளம்பியுள்ளன. சமூக ஊடகங்களில் இ.தொ.காவுக்கு ஆதரவு அளித்தோர் கடுமையாக தாக்குதலை தொடுக்கின்றனர். இதை அவதானித்து வரும் இ.தொ.காவினர், இவ்வருட இறுதியில் அல்லது மத்திய பகுதியில் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் இடம்பெற்றால் தனித்து சேவல் சின்னத்தில் களமிறங்கலாமா என யோசித்து வருகின்றனர்.

■

# பதஞ்சலி யோக சூத்திரத் தொடர்

## வாழ்வின் மீதான மோகம் அல்லது இறப்பின் மீதான பயம்



தன்னை உணர்வதற்குச் செய்யக் கூடிய தவங்கள் பற்றிக் கடந்த கட்டுரையில் பார்த்திருந்தோம். பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்தின் இரண்டாவது பகுதியான சாதனை பாதமானது, தடைகள் மற்றும் யோக பயிற்சிகளைப் பற்றிக் கூறுகிறது. 'தவம், சுய அறிதல், செயலின் பயனை இறைவனுக்கு அர்ப்பணித்தல் கிரியா யோகம்' என்ற முதல் சூத்திரம் கிரியா யோகத்தின் வரைவிலக்கணத்தைக் கூறுகிறது. பயிற்சியின் அவசியம் என்ன? துன்பம் தரும் தடைகளைக் குறைத்து, சமாதியைப் பயிற்சி செய்வதற்கே இந்த யோகப் பயிற்சிகள் என்கிறார் தமது அடுத்த சூத்திரத்தில். எண்ணங்கள் நீங்கிய சமாதி எனும் பரமானந்த அனுபவத்தில், தன்னையே எரிக்கும், தூய்மைப்படுத்தும் அந்த தவத்தில், நம்மிடம் விதைகளாக உள்ள வினைப் பதிவுகள் படிப்படியாக விலகுகின்றன. வறுத்தெடுத்த விதைகள் முளைக்காதது போல.

'அறியாமை, நான்-உணர்வு, பற்று, வெறுப்பு, வாழ்வின் மீது மோகம் - இவை துன்பம் தரும் தடைகளாகும்.' யோக சூத்திரம் **2.3**

இந்த சூத்திரத்தில் தன்னை உணர்வதற்குத் தடையாகவுள்ள துன்பங்களைப் பட்டியலிடுகிறார் பதஞ்சலி முனிவர். அறியாமை எனும் மூலகாரணத்தில் இருந்து எழுவதே மற்றைய துன்பங்களான நான்-உணர்வு (அகங்காரம்), பற்று, வெறுப்பு, வாழ்வின் மீது மோகம். எமது வினைப்பதிவுகள் தூங்கும் நிலையிலோ அல்லது மந்தமாகவோ அல்லது துடிப்புடன் செயற்படும் நிலையிலோ இருந்தாலும் எமது அறியாமையினால் நான் உடல், மனம் என்ற பிழையான எண்ணங்களால் துன்பங்களை அனுபவிக்கின்றோம். ஆனால், ஒரு யோகியினால் விழிப்புணர்வுடன் தனது உண்மையான அடையாளத்தை உணர்ந்து ஆன்மார்த்தமாகச் செயற்படுவதன் மூலம் வினைகளில் இருந்து விடுதலை பெற முடியும். நிலையில்லாததை நிலையானது என்று நினைப்பதும், தூய்மையற்றதை தூய்மையானது என்று கருதுவதும், துன்பத்தை இன்பமாகவும், ஆன்மா அல்லாத உடலையும் மனதையும் ஆன்மா என அடையாளப்படுத்துவதும் அறியாமை என்று வரையறுக்கிறார்.

'காண்பவனையும் காண்பதற்கான கருவிகளையும் ஒன்றாக கருதுவது நான் - உணர்வு (அகங்காரம்)' யோக சூத்திரம் - **2.6**

சகலரிலும் பொதுவாக உள்ள அந்த விழிப்புணர்வான ஆன்மாவை (காண்பவன்-Seer), புற உலகை ஆன்மா காண உதவும் கருவிகளான மனத்துடனும், புலன்களுடனும் அடையாளப்படுத்துவதே நான்-உணர்வு அல்லது அகங்காரமாகும். இந்த அறியாமையினால் எதையும் நான் செய்கிறேன், பார்க்கிறேன், எனது வீடு, எனது பெயர், புகழ் என்று தான் அல்லாதவைகளில், நிலையற்றவைகளில், உலகியல் பொருட்களோடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் அறிவீனம் தொடர்கிறது இதன் காரணமாக எழும் போட்டி, பொறாமை, இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு போன்ற வேண்டத்தகாத, அதே நேரம் நம் வாழ்வில் பலருக்கும் பழகிப் போன இவ்வுணர்வுகளோடு மாய வாழ்வு தொடர்கிறது.

அடுத்த தடையாக பதஞ்சலி முனிவர் கூறுவது பற்று. இன்பத்தை நாடுவது பற்று என்கிறார். நான்-உணர்வு அல்லது தன்முனைப்பின் அடுத்த பரிமாணமே பற்று. நாம் எதிர்பார்த்தது(பற்று) கிடைத்தால் இன்பம் என்றும், கிடைக்காத போது துன்பம் என்றும் முதலே வரையறை செய்து விடுகிறோம். உலகியல் பொருட்களோடு எமக்கு என்றுமே நிரந்தரமான இன்பம் கிடைக்கப்போவதில்லை. எமக்கு இருக்க வேண்டிய ஒரே விருப்பு, சகல பற்றுகளில் இருந்தும் பூரண விடுதலை கிடைக்க வேண்டும் என்ற தீராத விருப்பு ஒன்றே. நிலையில்லாதவைகளை இழந்து விடுவோமோ என்ற பயம் எப்பொழுதும் இருக்கும். பிரச்சினை எம்மிடமுள்ள பொருட்கள் அல்ல, அதன் மீதான தீராப் பற்றுத்தான். இவற்றின் பிடியில் இருந்து விடுபட்ட யோகியானவன் என்றும் மாறாத ஆனந்தத்தில் திளைத்திருக்கிறான். இங்கு நாம் செய்ய வேண்டியது விழிப்புணர்வுடன் ஒரு காரியத்தை செய்வதில் கவனம் செலுத்துவது மட்டுமே. அதன் விளைவுகளில் பற்று வைப்பதல்ல. கடமையைச் செய்வதும், பலனை எதிர்பாராதிருப்பதும் துன்பத்தில் இருந்து விடுதலை அளிக்கும்.

பற்று அல்லது விருப்புக்கு எதிரான பதம் வெறுப்பு. பற்றினைத் தொடர்ந்து வரும் ஏமாற்றங்கள், துன்பங்களின் விளைவாகத் தொடர்வது வெறுப்பு எனும் உணர்வாகும். தொடர்வது கோபம், பொறாமை என வேண்டத்தகாத உணர்வுகள். இத்தகைய எதிர்மறை உணர்வுகள் எமது உடலில் பிராணசக்தி இழப்பை ஏற்படுத்தி, உடல் நலத்திற்குத் தீங்காகவும், நீண்ட காலத்தில் உடல் நோய்களையும் ஏற்படுத்தி விடுகின்றன. அன்றாட வாழ்வில் நாம் பலர் மீது வெறுப்புணர்வை வளர்த்துக் கொள்கிறோம். உறவுகள் மீது வெறுப்பு, அயலவர், பிற இனத்தவர் என்று நம் வெறுப்புணர்வு பரந்து விரிந்தது. இலங்கை போன்ற உள்நாட்டுப் போர் நடைபெற்ற, பல்லினங்கள் வாழும் நாடுகளில் இந்த வெறுப்புணர்வு அதிகமாகக் காணப்படுகிறது. இதனை தமிழர்கள் மனதளவில் எவ்வாறு கையாளலாம்? வினைப்பயன் என்பது எமது மனம், வாக்கு, காயத்தினால் செய்யப்படும் செயல்களினால் வருவது.? 'தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்று வினை (கர்மா) கோட்பாடு ஒவ்வொரு மனிதனுக்கும் பொருந்தும். இனப்பிரச்சினைச் சிக்கல்களும், அழிவுகளும் தமிழர் தரப்பில் பல காலங்களாகப் பிழையான கூட்டுச் செயல்களின் விளைவு என்பதை ஏற்றுக் கொள்வதே முதல் படியாக இருக்க முடியும். அதே பிழைகளைத் தொடராது இருப்பது அடுத்தபடி. பல வேளைகளில் நாம் இனப்படுகொலையாளர்களுக்கான தண்டனை என்ன? என்பது பற்றிப் பேசியும் எழுதியும் வருகிறோம். யாவற்றையும் வினைக்கோட்பாட்டு விதிகளிடம் ஒப்படைத்துவிட்டு, நமது அன்றாட, எதிர்கால வாழ்வை யோக வாழ்வாகத் தொடர்வது, மக்களின் ஆரோக்கியத்துக்கும், எதிர்கால விடிவுக்கும் வழிசமைப்பதாக இருக்கும். ஆயுதங்கள் ஏந்தினால் மட்டும் வன்முறை அல்ல, மனதால், சொற்களால் கூட கடுமையாக இருப்பதும் வன்முறையே. தத்துவவியலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தியின் கூற்றுப்படி, மனிதர்கள் தம்மை கிறிஸ்தவன், இந்து, இந்தியன், இலங்கையன், ஐரோப்பியன் என்று மற்றைய மனிதர்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது கூட வன்முறை என்கிறார். மனதில் வெறுப்புணர்வு தோன்றும் போது அதற்கு எதிரான பதங்களான அன்பு, சகோதரத்துவம் போன்ற உணர்வுகளை எண்ணுவதும், வளர்த்துக் கொள்வதும் பலன் அளிக்கும். எமது எண்ணங்களிலும் செயல்களிலும் தூய்மையும் புதுமையும், நிகழ்கால யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு பயணிப்பது, மனக்குவிப்பு, மற்றவர்களுக்கு உதவும் செயல்கள், மாற்றங்களை ஏற்கத் தயாராவது இவை யாவும் விழிப்புணர்வுடன் கூடிய எமது செயல்களாகும்போது இயற்கை நமக்கான தீர்ப்பை / தீர்வை எழுதி வைக்கும்.

இறுதியான தடையாக பதஞ்சலி முனிவர் கூறுவது வாழ்வின் மீது மோகம் அல்லது இறப்பின் மீதான பயம்.

'வாழ்க்கையின் மீது மோகம் என்பது இயல்பாக பிரவாகிப்பது, அறிவாளிகளிடம் கூட காணப்படுவது' யோக சூத்திரம் - **2.9**

தொடர்ந்து வாழ வேண்டும் என்ற ஆசையானது தன்னை உடல், மனத்துடன் அடையாளப்படுத்துவதால் வருவதுடன், இறப்பு பற்றிய பயத்தையும் தோற்றுவிக்கிறது. பல்வேறு இன்ப எண்ணங்களும், துன்ப எண்ணங்களும் புலன்வழியானவை எனவே இறுதியில் யாவும் துன்பம் தருபவை என்பதை உணர்ந்தவர்கள் யோகியர். இன்ப உணர்விலிருந்து எழும் புதுப்புது ஆசைகளும், இன்பத்தை இழந்து விடுவோமோ என்ற பயமும் உலகியலில் சாதாரணமானது. சிலந்தி வலை பின்னி அதன் வழியே வெளியேறுவது போல, புலன் வசப்பட்ட நாம் நரம்பு வலை வழி செயற்பட வேண்டியிருக்கிறது என்கிறார் சுவாமி விவேகானந்தர். ஆனால் யோகியர்கள் தம் யோக வலிமையால் அண்ட ஆற்றலைப் பெற்று, மனவலிமை எனும் மின்சாரத்தை கம்பிகள் இன்றி எங்கும் அனுப்பி செயற்படலாம் என்கிறார். ஒவ்வொரு உயிருக்கும் வாழும் ஆசை உள்ளது. அவை இயல்புணர்ச்சியாக உள்ளது. இவை பழைய அனுபவங்களின் பதிவுகள் தான். இவ்வாறான பதிவுகளை எழும் போது பகுத்தறிவால் ஆராய்ந்து முளையிலேயே அடக்கிவிட்டால், அவை வறுத்தெடுத்த விதைகளாகி முளை விடுவதில்லை. தியானம் இலகுவாகக் கைகூடும் நிலை வரும்போது கோபம், வெறுப்பு எனும் உணர்வுகளை எளிதில் வென்று விடலாம். இதன் மூலம் இதுவரை வராத துன்பத்தைத் தவிர்க்க வேண்டும் என்கிறார் பதஞ்சலி முனிவர்.

'துன்பத்திற்கான காரணம், காணும் பொருளோடு காண்பவன் தன்னை இணைத்துக் கொள்வதே' யோக சூத்திரம் - **2.17**

இங்கு காண்பவன், புருஷன் அல்லது மனிதனின் ஆன்மா. காணப்படும் பொருள் மனம் முதல் சடப் பொருள் வரை இயற்கை முழுவதும். புருஷனும் மனமும் இணைவதால், இயற்கையில் பிரதிபலித்து இன்ப, துன்பங்களை அனுபவிப்பவன் போல தோற்றமளிக்கிறான். காணப்படும் பொருள் (பிரகிருதி) என்ற இயற்கையானது பூதங்களாலும் இந்திரியங்களாலும் ஆக்கப்பட்டது. இவை முக்குணங்களான ஒளியையும் (சாத்வீகம்), செயலையும் (ரஜஸ்), செயலற்ற (தமஸ்) தன்மையையும் இயல்பாகக் கொண்டது. காண்பவனுக்கு இன்ப, துன்ப அனுபவங்களின் மூலம் முத்தியை நோக்கிய பயணத்திற்கு உதவுவதற்கே இயற்கை நம்மோடுள்ளது. ஆனால் இயற்கையோடு சேரும்போது நாம் தூயவன் என்பதை மறந்து விடுகிறோம். புருஷனின் (ஆன்மா) உண்மையான தன்மைகள் இருப்பு அல்லது உண்மை (சத்), அறிவு அல்லது தன்னுணர்வு(சித்), அன்பு (ஆனந்தம்). அவனது வடிவம் சச்சிதானந்தம். அவன் எதையும் அறிவதில்லை, அவனே அறிவு வடிவு. இதனைத் திருமூலர்,

"அறிவு வடிவு என்று அறியாத என்னை
அறிவு வடிவு என்று அருள்செய்தான் நந்தி
அறிவு வடிவு என்று அருளால் அறிந்தே
அறிவு வடிவு என்று அறிந்திருந் தேனே"

நந்தியின் அருளால், பொறிபுலன்களின் சுட்டறிவில் மயங்கி இருந்த நான், சுயஅறிவு (ஞானம்) வடிவானவன் என்பதை அறிந்து கொண்டேன் என்கிறார்.

நாமே நமக்குதவி என்பதை உணரும் வரை புறத் தேடல்கள் தொடரவே செய்யும். நம் அறியாமை நீங்கும் போது மனதிருப்தி ஏற்படுகிறது. அகத்தேடல் ஆரம்பமாகிறது. எதிலும் திருப்தி ஏற்படுவது நாம் சரியான பாதையில் பயணிக்கிறோம் என்பதன் அறிகுறி. எந்தவிதமான அக, புற காரணங்களும் நமக்கு துன்பம் தர முடியாது. விழிப்புணர்வும் புத்திசாலித்தனமும் நம் கடமைகள் என்று எதுவுமில்லாத நிலையை அடைவதற்கு முக்கியமானது. மனதின் சுதந்திரம் வாய்க்கிறது. ஆன்ம நிலையில் நிலைபெறுவது இலகுவாகிறது. ■

**முரளீதரன் நவரத்தினம்**
MSC in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)



01

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

ரமணி

ஒரு முழு நீள சினிமாப்படம் ஒரு வரிக் கதையில் இருந்துதான் உருவாகிறது. அந்த ஒருவரிக் கதைக்குள் பல பாத்திரங்கள், அந்தப் பாத்திரங்களைச் சுற்றி பல கிளைக்கதைகள். கதைக்கு மெருகேற்ற பாட்டுகள், சண்டைகள், நடனங்கள் என நீட்சி பெறும் கற்பனைகள். இவை அனைத்தும் கனகச்சிதமாக இணைவதுதான் சினிமா.

தாய்,சகோதரி, தாலி இவற்றைச் சுற்றிப் பின்னப்படும் கதைகள் சென்ரிமென்ராக இருப்பதால் எந்தக் காலத்திலும் விரும்பிப் பார்க்கப்படுகின்றன. காதல், ஒருதலைக் காதல், முக்கோணக் காதல் கதைகள் ரசிகர்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. நட்புக்கு இலக்கணமான படங்கள் ரசிக்கக் கூடியவையாக இருக்கின்றன. சகோதர பாசக் கதை உள்ள சினிமாக்கள் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றன.

அதிகமான சினிமாக்கள் கற்பனைக் கதைகள். விதிவிலக்காக சரித்திர, புராண, மாயாஜால, துப்பறியும் படங்கள் சக்கைப்போடு போட்டன. வீர பாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், கர்ணன் போன்ற சரித்திர நாயகர்களின் படங்கள் வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வைத்தன.

ஒரு சினிமாப்படம் உருவாகுவதற்காக நூற்றுக் கணக்கானவர்கள் உழைக்கிறார்கள். சினிமாப் படம் தயாராகும் போது பல சம்பவங்கள் நடைபெறுகின்றன. அவை எல்லாமே வெளிச்சத்துக்கு வருவதில்லை. சினிமாத் தயாரிப்புக்குப் பின்னால் மறைந்திருக்கும் சம்பவங்களை வெளிச்சத்துக்கு வரவில்லை.

கண்ணதாசனின் பாடல்களுக்குப் பின்னால் பல உண்மைக் கதைகள் உள்ளன. தனது வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை கண்ணதாசன் சுவாரஸ்யமாகப் பாடல்களில் தந்துள்ளார்.


எம்.ஜி.ஆரின் அரசியல் வெற்றிக்கு வாலியின் பாடல்கள் வலுச்சேர்த்ததாக விமர்சனங்கள் உள்ளன. அன்றைய அரசியல் பின் புலத்தில் எம்.ஜி.ஆருக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்கவில்லை. ஆனால், வாலியின் பாடல்கள் உண்மையாகின. சினிமாப் படக் கதைக்கு ஏற்ப வாலி பாடல்களை எழுதினார். பிற்காலத்தில் அவை நிஜமாகின.

ஆக்கவும் அழிக்கவும் ஒரு சொல் போதும் என்பார்கள். பராசக்தி படத்தில் சிவாஜி கணேசன் முதலில் பேசிய சொல் “வெற்றி”. அடுத்து வந்த பல படங்களில் “வெற்றி” என சிவாஜி சொல்வதே முதலில் படமாக்கப் பட்டன.

தாயின் மீது பாசம் கொண்ட எம்.ஜி.ஆரின் படங்களில் பூஜைக்குப் பின்னர் “அம்மா” என்று முதல் படப்பிடிப்பு நடக்கும் என்பார்கள். “நான் ஒரு ராசியில்லா ராஜா” என பாடிய பின்னரே ரி. எம்.சௌந்தரராஜன் சினிமாப்பயணம் வீழ்ச்சியடைந்தது என்பார்கள். இளையராஜாவின் முதல் பட ஒலிப்பதிவின் போது “டேக்” என்றதும் மின்சாரம் தடைப்பட்டது. அந்தச் சம்பவத்தை அபசகுனம் என இளையராஜாவின் காதுபடச் சொன்னார்கள். விதி விலக்காக இளையராஜாவின் இசைப் பயணம் நாளுக்கு நாள் வீரியம் கொண்டு உயர்கிறது.

திருவிளையாடல் படத்தில் ஒரு பாட்டுக்காக பல நாட்கள் முயற்சி செய்தும் கண்ணதாசனால் பாட்டின் முதல் வரியைக் கூட எழுத முடியவில்லை. அப்போது அங்கு வந்த இசையமைப்பாளர் “என்ன கவிஞரே இன்று ஒரு நாள் போதுமா? இன்னொருநாள் வேண்டுமா” எனக் கேட்டார். அந்த நொடியில் பிறந்த காலத்தால் அழியாத பாடல் “ஒருநாள் போதுமா இன்றொரு நாள் போதுமா”

“நான் அளவோடு ரசிப்பவன் எதையும் அளவின்றி கொடுப்பவன்” என வாலி எழுதிய பாடலைப் பார்ததும், தொலை பேசியில் வாலியை அழைத்த எம்.ஜி.ஆர் உங்கள் கைக்கு முத்தம் தர வேண்டும் என்றார். எதையும் அளவின்றி கொடுப்பவர் என்ற வசனம் கொடை வள்ளல் எம்.ஜி.ஆரை ஞாபகப்படுத்தியது.



மறு முனையில் இருந்த வாலி “கலைஞரின் கைக்கு முத்தம் கொடுங்கள்” என்றார்.

எம்.ஜி.ஆரின் படத்துக்கு பாடல் எழுதி பின்னர் மாலையில் வாலியும், கருணாநிதியும் ஒன்றாக வெளியே செல்வதற்குத் திட்டமிட்டனர். வாலியை அழைத்துச் செல்ல கருணாநிதி வந்து பாடல் முடிந்து விட்டதா என வினவினார். “நான் அளவோடு ரசிப்பவன்” என எழுதியுள்ளேன் அதற்கப்பால் நகரவில்லை என வாலி சொன்னார். “எதையும் அளவின்றி கொடுப்பவர்” என அடுத்த அடியை கருணாநிதி சொன்னார். அதன் பிற்பாடு முழுப்பாடலையும் எழுதி முடித்தார் வாலி.

ஜானகியின் குரல் எது, நாதஸ்வர ஓசை எது என பிரித்தறிய முடியாத அருமையான பாடல் “சிங்கார வேலனே தேவா”. ஜானகியின் சுர வரிசையும் நாதஸ்வரமும் சங்கமித்த காலத்தால் அழியாத பாடல் அது. ஜானகியின் குரலில் அப் பாடலை ஒலிப்பதிவு செய்து விட்டு பல பாடகிகளிடம் கொடுத்தார்கள். அதனைக் கேட்ட பாடகிகள் யாரும் அதனை பாடத்துணியவில்லை. ஹிந்திப் பாடகிகளிடமும் அப் பாடலைக் கொடுத்தார்கள். அவர்களும் பாடுவதற்குப் பின்னடித்தார்கள்.

“சிங்கார வேலனே தேவா” பாடலைக் கேட்ட பாடகி சுசீலா, “ரொம்ப நல்லா இருக்கு ஜானகியே பாடட்டும்” என்றார். அதன் பின்னரே “சிங்கார வேலனே தேவா” பாடல் ஜானகியின் குரலில் வெளியாகியது.

இவை எல்லாம் அதிகமாகப் பகிரப்படாத சின்னச்சின்னச் சங்கதிகள். இப்படியான சுவாரஸ்யமான சங்கதிகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதே இத் தொடரின் நோக்கம்.

(தொடரும்)

# புத்திகெட்டமனிதர் எல்லாம் – திரைவிமர்சனம்

வந்திய தேவன்

இது எங்கட படம் என்ற தொனிப்பொருளில் அண்மையில் வெளியாகி இலங்கையின் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் ராஜ் சிவராஜின் எழுத்து இயக்கத்தில் மதீசனின் இசையில் நம்மவர்கள் நடித்து பலரின் பாராட்டுகளைப் பெற்ற திரைப்படம் புத்திகெட்ட மனிதர் எல்லாம். நாவல், சிறுகதை, கவிதை கட்டுரை என இலக்கியங்களில் எமக்கென ஒரு இடத்தை பிடித்திருக்கும் ஈழத்து படைப்பாளிகளினால் சினிமாவுக்கும் ஒரு இடம் எதிர்காலத்தில் கிடைக்கும் என கட்டியம் கூறுவது போல அண்மைக்கால எம்மவர்களின் திரைப்படத்துறை முயற்சிகள் பாராட்டும் படி இருக்கின்றன.

**கதை**

நண்பர்கள் சிலர் சேர்ந்து திரைப்படம் எடுக்கவிளைகிறார்கள். அவர்கள் தேர்ந்தெடுத்த கதை தற்போது ட்ரெண்டில் உள்ள பேய்க்கதை. கதாநாயகனாக நடிக்க வருபவருக்கோ நடிப்பை விட பந்தாதான் அதிகம் வருகிறது. ஒருநாள் அவரின் உடல்நிலையில் திடீர் மாற்றம் வந்து நன்றாக நடித்துவிட்டார். இன்னொருநாள் உதவி இயக்குனராக இருப்பவருக்கும் இன்னொருவருக்கும் பேய்பிடித்து அவர்களை தன்நிலை மறக்கச் செய்கிறது. அவர்களை எப்படி பேய்பிடிக்கிறது என இயக்குனர் கண்டுபிடித்து தன்மேலையே பேயை பிடிக்கவைக்கிறார். அதன்பின்னர் அந்தப் பேயின் கதை திரையில் விரிகிறது. பல்கலைக் கழக மாணவி ஒருவருக்கும் இளைஞர் ஒருவருக்கும் இடையில் காதல். அந்த மாணவிக்கு பல்கலைக் கழகத்தில் நடக்கும் பகிடிவதை அவருக்கு உதவும் ஒரு விரிவுரையாளர் என கதை முதல்பாதி நகைச்சுவையில் இருந்து படத்தின் அடிநாதமான தற்கால பகிடிவதையும் அதன் பின்னரான சம்பவமும் தான் கதை.

**திரைக்கதை**

முதல்பாதியில் நகைச்சுவையாகவும் இரண்டாம் பாதியில் சீரியசாகவும் எந்தவிதமான தொய்வும் இல்லாமல் ராஜ் சிவராஜ் திரைக்கதையை திறம்படவே எழுதி இருக்கிறார். இறுதி சில நிமிடங்கள் வரை அந்த சம்பவத்துக்கு அவர் காரணமோ, இல்லை இவர் காரணமோ என வில்லனோடு இன்னொருவரையும் சந்தேகப்பட வைக்கும் படி திரைக்கதையை எழுதியது சிறப்பு.

**வசனம்**

அச்சு அசல் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் வசனங்கள் ரசிக்கவைக்கின்றன. பட்ஜெட் என்றால் என்ன என்பதற்க்குக் கொடுக்கும் விளக்கம் அருமை. ப்ரோ என அடிக்கடி அழைப்பதை கொஞ்சம் தவிர்த்திருக்கலாம்.

**நடிகர்கள்**

பக்கத்துவீட்டு பொடியள் போலவும் அன்றாடம் நாம் காணும் நபர்கள் போலவும் நடிகர்கள் தேர்வு அபாரம். அதிலும் வில்லன் மாணவனாக வரும் கோகுலனின் உடல்மொழியும் அந்த நக்கல் நையாண்டிப் பார்வையும் அட்டகாசமாகவே அவருக்கு பொருந்துகிறது. அத்துடன் நண்பர்கள் எடுக்கும் படத்தில் கதாநாயகனாக நடிக்க வந்த பெட்ரோல் ஷெட் யூடுப் புகழ் சபில்ராஜ் நகைச்சுவையில் கலக்கி இருக்கிறார். காதலானக வரும் ஸ்ரீகிருஷ்ணன், மாணவியாக வரும் சிந்துஜா இருவரும் காதலிலும் சரி சோகத்திலும் சரி தங்கள் பங்கை திறம்படவே கொடுத்திருக்கிறார்கள். ஏனைய நடிகர்கள் கூட தங்கள் நடிப்பை மிகச் சிறப்பாகவே வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.



**ஒளிப்பதிவு**

தர்மலிங்கத்தின் ஒளிப்பதிவு சில இடங்களில் பிரமிப்பூட்டுகிறது. குறிப்பாக நண்பர்கள் தங்கி இருக்கும் வீடு, அந்த சுடுகாடு ஆகிய இடங்களை பறவைப் பார்வையில் காட்டியவிதமும் சில காட்சிகளில் அவர் கொடுத்த லைட்டிங்கும் அபாரம். எதிர்காலத்தில் எம்மவர்களின் படைப்புகளில் தர்மலிங்கத்தின் ஒளிப்பதிவுகளை நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

**இசை**

மதீசனின் இசையில் பாடல்கள் ரசிக்கும் படி இருக்கின்றன, பின்னணி இசையில் குறிப்பாக கிளைமாக்ஸ் காட்சியில் நண்பர்கள் வரும் போது அவரின் இசை அற்புதமாகவே இருக்கிறது. பேய்க்கதை சொல்லும் போது இசையால் மிரட்டியும் இருக்கிறார்.

தயாரிப்பாளர் கிரிஷோபனுக்கு இந்தப் படம் வர்த்தக ரீதியாக வெற்றி அளிக்கும் என்பது உறுதி. அவரிடம் இருந்து மென்மேலும் எம்மவர்கள் படைப்புகளை ரசிகர்கள் எதிர்பார்ப்பார்கள்.

புகைத்தல் மது அருந்துதல் போன்றவற்றை தவிர்த்திருந்தது பாராட்டத்தக்கது.

ஒரு பரபரப்பான சம்பவம் நடந்தும் பல்கலைக் கழக நிர்வாகமோ அல்லது காவல்துறையோ அதில் தலையிடாமல் போனது படத்தின் பலவீனமாக காணப்பட்டாலும் எம்மவர் படைப்பு என்பதால் அதைப் பெரிதாக கவனத்தில் எடுக்காமல் தரமான ஒளிப்பதிவு, இசை, திரைக்கதை என்பவற்றிகாக புத்தி கெட்ட மனிதர்களை நாம் புத்திசாலித்தனமாக கொண்டாடலாம். ■

# வெப்ப வலயம்

ச.ஆதவன்



“தண்ணி” “தண்ணி” “தண்ணி” படலையடியில் ஆரோ தீனமான குரலில் கூப்பிடும் சத்தம். அந்த நடுநிசியைக் கிழித்து கொஞ்ச நேரம் கேட்டது. பின்னர் நின்று விட்டது. சத்தம் கேட்டு கண்விழித்த முகிலன் மூலையில் சிணுங்கும் குப்பி விளக்கை இன்னும் மட்டையால் மறைத்து வைத்துவிட்டு திரும்பிப்படுத்தபடி காதை இன்னும் கூர்மையாக்கி அந்தச் சத்தம் இப்போ கேட்கவில்லை என்பதை நிச்சயம் செய்தான்.

அந்த அறையில் இரண்டு மரக்கட்டில்கள் அருகருகே வைத்து கீழே பாய்கள் விரிக்கப் பட்டிருந்தன. முகிலன், அவன் மனைவி, மூன்று பிள்ளைகள் என ஐந்து பேர் வரிசையாக படுத் திருந்தார்கள். பிள்ளைகள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். இடையிடையே நாய்கள் குரைக்கும், ஆட்கள் நடமாடும் சருகு சத்தத்துக்கும் விழித்துக்கொள்வான். இப்போ கொஞ்ச நாட்களாக நடுச்சா மத்தில் அந்தக் குரல் கேட்டது. திடகாத் திரமான ஆளாக இருந்தாலும் உயிர், பிள்ளைகள், குடும்பம் என்ற பயம் எதையும் செய்யவிடவில்லை. மூச்சுக் காற்றையே மெதுவாக விட வேண்டும் என்ற கட்டாயம். சின்னவன் ஒண்டுக்கு போனாலும் கழுவ, துணி மாத்த விடியும் வரை காத்திருப்பார்கள்.

இரவு எட்டு மணிக்குப் பிறகு கூரை ஓட்டு இடை வெளியில் வெளிச்சம் வெளியே தெரியாமல் இருக்க வேண்டும். ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட நேரமது. இராணுவ கட்டுப்பாட்டில் வந்திருந்த பகுதி. அங் கொன்றும் இங்கொன்றுமாக இயக்கம் மறைந்திருந்து இராணுவத்தின் மீது தாக்குதல்கள் நடைபெறும். போராட்டங்கள் முதலில் மறைவில் இருந்துதான் தொடங்கியது. கால மாற்றத்தில் இளைஞர்கள் குழுக்களாக ஆயுதங்களுடன் முளைக்கப் பழைமையும் அனுபவமும் கொஞ்சம் கொஞ்சமாக அஸ்தமிக்கத் தொடங்கியிருந்தது.

*****

பால் நிலவு கிழக்கில் உதித்து அதன் மம்மல் வெளிச்சம், மரங்களின் கிளைகளைத் தாண்டி அந்த ஒடுக்கமான உள்ளூர் வீதியில் பரந்திருந்தது. வீடுகள் எல்லாம் வெறிச் சோடியிருந்தன. மனிதர்கள் அற்ற சூனியப்பிரதேசம். மக்கள் இடம்பெயர்ந்து தூர இடங்களில் தஞ்சமடைந்த காலம். மரங்கள், பறவைகள், சில குட்டை நாய்கள் என்று அச்சம் ஏற்படுத்தும் நிலமை. சந்திக்கடைப் பக்கமாக மதிலின் மேலாக இரண்டு சோடிக் கண்கள் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு இருந்தது. இரண்டு பக் கத்து பாதைகளும் நேராக போகும் பாதையும் என முச்சந்தியை கண்காணித்தன. மதில் ஓரமாக நின்ற நித்திய கல்யாணி மரம் நல்லா சடைச்சு இருந்ததால் இரண்டு சட்டித் தொப்பிகளையும் மறைத்து வைத்திருந்தது. நாளுக்கு நாள் இடம் மாறி நிக்கும் அந்த இரு இராணுவத்தினரும் இன்று அங்கே பதுங்கி இருந்தனர்.

“தூரத்தில் ஒரு நாய் குரைக்கும் சத்தம் மெல்லியதாய் கேட்டது. வலது பக்கப் பாதையில் இருவரின் கவனமும் ஒன்றிக்க காதைக் கூர்மையாக்கி கொண்டார்கள். கையில் இருந்த துப்பாக்கிகள் ஆயத்தமாகின. பல நாட்களுக்குப் பிறகு வேட்டையாடும் ஆவலில். நிலை எடுத்து நின்றால் அடுத்த நாள் காலை வரை நகராமல் இருக்கவேண்டும். ஏனெனில் மற்ற சந்தியில் நிக்கும் சக இராணுவ வீரனே ஆள் தெரியாமல் போட்டு தள்ளிவிடுவான். பயம் மனிதனை கொலையாளி ஆக்கி விடும் நிலமை. மக்கள் வெளியேறி விட்ட நிலையிலும் கொரில்லா பாணியில் தாக்குதல்கள் தொடர்ந்தன.”

தூரத்தில் ஒரு நாய் குரைக்கும் சத்தம் மெல்லியதாய் கேட்டது. வலது பக்கப் பாதையில் இருவரின் கவன மும் ஒன்றிக்க காதைக் கூர்மையாக்கி கொண்டார்கள். கையில் இருந்த துப்பாக்கிகள் ஆயத்தமாகின. பல நாட்களுக்குப் பிறகு வேட்டையாடும் ஆவலில். நிலை எடுத்து நின்றால் அடுத்த நாள் காலை வரை நகராமல் இருக்கவேண்டும். ஏனெனில் மற்ற சந்தியில் நிக்கும் சக இராணுவ வீரனே ஆள் தெரியாமல் போட்டு தள்ளிவிடுவான். பயம் மனிதனை கொலையாளி ஆக்கி விடும் நிலமை. மக்கள் வெளியேறி விட்ட நிலையிலும் கொரில்லா பாணியில் தாக்குதல்கள் தொடர்ந்தன.

*****

இப்ப இரண்டு கிழமைக்கு முன்தான் முகிலன் குடும்பம் அயலட்டையோடு ஊர் திரும்பியிருந்தது.

சில நாட்களுக்கு முன் ஊர் கூடிக் கதைக்கும் போது ஒரு விடயம் புலப்பட்டது. அவனின் வீட்டு முன் காணிப் பற்றைக்குள் சில எலும்புத் துண்டுகள், பாதி எரிந்த மண்டையோடு இருந்ததைக் கண்டிருக்கிறார் கள். முன்னமே வந்த சில அயல் வீட்டுக்காரர்கள் சிதைந்து நாற்றமெடுத்த பிணம் ஒன்றை எரித்து விட்டார்களாம் என்று ஒரு கதை பரவியிருந்தது. பன் னையும் நெருஞ்சியும் மண்டி இருந்த பற்றைக்காணி. முகிலனும் ஆவலுடன் விடுப்புப் பாக்கப் போனான்.

கொஞ்சம் பற்றை செடிகள் எரிந்து கரிக்கட்டியாகக் கிடந்தது. ஓரத்தில் மண்டையோடு அண்ணாந்து பார்த்தது. நெஞ்சில் கிலியுடன் மூன்று தரம் துப்பி விட்டு வேகமாக வீட்டுக்குத் திரும்பினான். பிணங்க ளும் எலும்புகளும் மலிந்து இருந்த நேரம். செய்தி பரவினாலும் ஊரார் யாரும் அதை பெரிது படுத்த வில்லை. பாதை ஓரம் என்ப தால் போய் வருபவர்கள் திரும்பிப் பார்க்க தவறவில்லை. முகிலனும் விதி விலக்கு இல்லை.

“இரவில படலைக்கு முன்னால வாளில தண்ணி வை எண்டு கோயில் ஐயா சொன்னவர்” என்று மனை விக்குச் சொல்ல, அவள் முகிலனை பாத்து “செய்து பாருங்கோ ஏதாவது விஷயம் இருக்கும். சரி வராட்டி களிப்பு இல்லாட்டி பூஜை செய்து பாப்பம். நானும் நினைக்கிறன் அந்த ஆவிதான் திரியுது எண்டு” என் றாள் சற்றுக் கிலியுடன்.

அவளுக்கு இன்னும் இந்த ஆவிகள் மேல் நம் பிக்கை இருந்தது.

“பிள்ளைகளுக்கு இந்த விஷயம் தெரியாமல் பாத்துக்கொள்” என்றான் கொஞ்சம் எச்சரிக்கை யுடன்.

அவனும் இந்த ஆவிக் கதையை மெல்ல மெல்ல நம்பத்தொடங்கி விட்டான். பிள்ளைகளுக்கு அந்த நினைவுகள் இரவில் கெட்ட கனவுடன் திடுக்கிட்டு எழுப்பி அழவைக்கும் எண்ட பயம் வேறு. வெளியில் ரோந்து போற இராணுவம் சந்தேகப்பட்டு வீட்டுக்க இறங்கி விடும் இல்லாட்டி கண்மூடிதனமாச் சுட்டுத் தள்ள வாய்ப்பிருந்தது. அவ்வாறான நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டிருந்த தருணம்.

ஏதாவது தாக்குதல் நடந்தால் அதிகம் சுற்றி வளைப்பு நடக்கும். அந்த நாட்களில் முகிலன் குடும்பம் மற்றும் பக்கத்தில் உள்ள சில குடும்பங்களுடன் சேர்ந்து இர வில் தங்குவார்கள். கூட்டமா இருந்தால் ஆளாளுக்கு உதவியும் கொஞ்சம் துணிவும் இருக்கும்.

அன்றில் இருந்து ஒரு மாதம் பட லைக்கு வெளியே தண்ணி வாளி இரவில் வைக்க கொஞ்சம் கொஞ்ச மாகக் கூப்பிடுவது நின்றது. சில வேளைக ளில் பிரமைக்கும் பிரதியுபகாரம் தேவைப்படுகிறது.

*****

இடுப்பில் சாரத்தில் செருகியிருந்த கைக்குண்டு வயிற்றில் உராய்ந்தது. பலநாட்கள் அதை கொண்டு திரிந்ததால் அவனின் அடி வயிற்றுப்பகுதி சிவந்து கன்றியிருந்தது. அஞ்ஞான வாசம். மறைந்து வாழ்வது தேவைப்பட்டால் வெளிப்பட்டு தாக்குவது. முடிந்த அளவு தாக்கி விட்டு மீண்டும் ஓடி ஒழிந்து கொள் வது அவன் சார்ந்த போராட்டக் குழுவின் தந்திரம்.

இரவு பிந்தினால் ஆமி இறங்கிடுவான். வேகமாச் சைக்கிளை மிதித்துக் கொண்டு போனான் மற்றவர்கள் மறைந்திருந்த இடத்தை நோக்கி. முச்சந்தியை நெருங்க கால் இடறி பெடல் கணைக்காலை பதம் பார்த்தது. வலியில் துடித்தவனுக்கு உள்மனம் ஏதோ உறுத்தியது. இது வளமையான பாதைதான் என்று தனக்கு தானே சமாதானம் செய்து சைக்கிளை வேக மாக உதைத்தான்.

சந்தியைக் கடந்து கொஞ்சம் தூரம் போக “பட” “பட” என்று சத்தம். தோட்டாக்கள் அவன் முதுகை சல்லடையாகத் துளைத்தன. நிலை குலைந்து சைக்கி ளுடன் கீழே விழுந்தவன் இடுப்பில் இருந்த கைக் குண்டை தேடினான். அது தவறி விழுந்து பாதையின் மற்ற பக்கம் போய்விட்டது. வேறு வழியில்லாமல் தவண்டு பக்கத்து காணியில் உள்ள பற்றைக்குள் சென்று விட்டான். இரத்தம் பீறிட்டு கொண்டிருந்தது. தோட் டாக்கள் பாய்ந்த உடல் வெப்பம் தாங்காமல் துவண் டது. வாய் தண்ணி தண்ணி என்று அனுங்கிக் கொண் டிருந்தது. ■



# மின்சாரமும் நாமும்

வேதநாயகம் தபேந்திரன்

கோவிட் - 19 பெருந்தொற்று நோயினால் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார வரட்சி எமது நாட்டையும் எட்டிப் பார்த்துள்ளது.

விலைவாசிகள் நாளுக்கு நாள் பொருளுக்குப் பொருள் புதிய வடிவங்களை எடுக்கின்றது. பொருளாதாரப் பாசையில் சொல்வதானால் குறைந்தளவு பொருட்களைக் கூடியளவு பணம் துரத்திச் செல்கின்றது. இலங்கையில் 99.3 வீதமான குடும்பங்கள் மின்சார வசதி பெற்றுள்ளனர்.

ஆகவே உங்களது வாழ்க்கைச் செலவில் கையை இறுக்கிக் கடிக்கும் ஒன்றாக மின்சாரக் கட்டணம் கட்டாயம் இருக்கும். மின் கட்டணத்தைக் குறைப்பதற்குச் சில வழிமுறைகளைத் தருகிறேன். முயற்சித்துப் பாருங்கள்.

குமிழ் பல்புகள் அதிக மின்சாரத்தை உறிஞ்சும். எனவே அவற்றை முற்றாக நீக்கி விட்டுச் சக்தி சேமிப்பு மின் குமிழுக்கு மாறுங்கள்.

காணிவேலுக்கு லைற் போடுவது போல இரவு வீடு வளவு முழுக்க மின் குமிழ்களை ஒளிர விடாதீர்கள். மிகவும் தேவையானவற்றை மட்டும் ஒளிர விடுங்கள். மனக் கட்டுப்பாடும் செயல்கட்டுப்பாடும் குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவை.

உங்களது வீட்டைப் போல நீங்கள் பணியாற்றும் இடங்களையும் பொது இடங்களையும் நேசியுங்கள். அரச அலுவலகங்களில் தேவையற்று ஒளிரும் மின் குமிழ்கள், சுற்றும் மின் விசிறிகள் மூலமாகப் தேவையற்ற கட்டண உயர்வை எதிர்நோக்கலாம். நாட்டின் மொத்த சனத்தொகையில் 10 வீதம் கூட அரச உத்தியோகத்தர் தொகை இல்லை. எமது வீண் விரயம் சாதாரண பொதுமக்கள் தலையில் வாழ்க்கைச் செலவாக விழும்.

குளிர்சாதனப் பெட்டியை அடிக்கடி திறந்து மூடாதீர்கள். ஒவ்வொரு முறையும் திறந்து மூடும் போது மின் சாரத்தைக் கூடுதலாக குளிர் சாதன உபகரணங்கள் பாவிக்கும். நாளாந்தம் 2 அலகுகள் வீதமாக மாதாந்தம் 60 யூனிட் இதனால் மட்டும் கூடும்.



குளிர்சாதனப் பெட்டியைத் திறக்க முன்னதாக என்னென்ன பொருள்களை அதிலிருந்து எடுக்க வேண்டும். என்னென்ன பொருட்களை உள்ளே வைக்க வேண்டுமெனத் திட்டமிடுங்கள்.

சின்னஞ் சிறுசுகள் அடிக்கடி குளிர் சாதனப் பெட்டியைத் திறப்பார்கள். அதனைப் பூட்டி வைப்பது நன்று.

அனேக வீடுகளில் குளிர்சாதனப் பெட்டிதான் மின்சாரத்தை அதிகம் உறிஞ்சும் . அதனால் அது தொடர்பான கட்டுப்பாடே உங்கள் மின் கட்டணத்தைக் குறைக்கும்.

தேவையில்லாமல் எல்லாவற்றையும் குளிர் சாதனப் பெட்டிக்குள் திணிக்காதீர்கள். உள்ளே இருக்கும் பொருட்கள் கூடக் கூட மின்சாரத்தைப் பாவித்துக் குளிரூட்டும் அளவு கூடும்.

குறைந்த மின்சாரத்தைப் பயன்படுத்தி இயங்கும் நவீன குளிர்சாதனப் பெட்டிகள் வந்து விட்டது. அவற்றைப் பாவியுங்கள்.

மின் அலகு 90 யூனிட்டுக்குக் குறையப் பாவித்தால் சலுகைக் கட்டணம் கிடைக்கும். 90 ஐத் தாண்டினால் கட்டண விகிதம் கூடும். தண்டனைக் கட்டணம் போல மேலதிக தொகை ஒன்று சேரும்.

விவசாயத் தேவைக்கு வீட்டு மின்சாரத்தைப் பயன்படுத்துவதை நிறுத்தித் தனியான ஓர் இணைப்பை எடுங்கள். கட்டணச் சிக்கனம் வரும்.

மின் அடுப்பு அதாவது ஹொட் பிளேற் பாவிக்காதீர்கள். விறகு அல்லது காஸ் அடுப்பு பாவிப்பது சிக்கனம். இயலுமானால் விறகு அடுப்பைக் கூடுதலாகப் பாவியுங்கள்.

கொயில் பாவித்து வெந்நீர் வைக்காதீர்கள். விறகு அல்லது காஸ் அடுப்பு பாவியுங்கள்.

மின்விசிறி fan பாவிக்கும் போது சிக்கனத்தைக் கடைப் பிடியுங்கள். ஒரே நேரத்தில் வீட்டில் பலவற்றைச் சுழல விட வேண்டாம். மனக் கட்டுப்பாடு அவசியம்.

பகலில் கூடுமான வரை மின்குமிழ்களை ஒளிர விட வேண்டாம். ஜன்னல்களைத் திறந்து இயற்கை வெளிச்சத்தை வர விடுங்கள்.

குளிரூட்டிகளை வீடு முழுவதற்கும் பாவித்தால் மின்கட்டணம் அதிகமாகவே இருக்கும்.

அயன்பொக்ஸ்- Iron Box பாவிப்பதில் விசேட கவனம் செலுத்துங்கள். வாரத்தில் ஒரு நாள் ஒரே தடவையில் உங்களது ஆடைகளை அயன் பண்ணுங்கள். இதன் மூலமாக மின் சிக்கனத்தைப் பேணலாம்.

நாளாந்தம் புறப்படும் தருணங்களில் எல்லாம் அயன் செய்பவர்கள் வீட்டில் மின் கட்டணம் உயர்வாக இருக்கும். அதனால் அயன்பொக்ஸ் பாவனையில் அதிக சிக்கனம் தேவை.

சிலர் அயன்பொக்ஸை அயன்பண்ணும் போது அடிக்கடி சுவிச் ஓஃவ் செய்து ஒன் செய்து பாவிப்பார்கள். இது புத்திசாலித்தனமில்லாத ஒரு முறை. ஒவ்வொரு முறையும் அயன் பொக்ஸ் கொயில் சூடாகச் சூடாக மின் கட்டணத்தைக் கூட்டும்.

சலவை இயந்திரப் பாவனைகளும் மின் கட்டணத்தைக் கூட்டும். வாரத்தில் 4 முறை சவர்க்காரம், அல்லது சலவைத்தூள் பாவித்துக் கையால் தோய்க்கப் பழகினால் நன்று. உடற்பயிற்சியும் ஆகிறது.

கேபிள் இணைப்புத் தொலைக்காட்சி பார்ப்பவர்களாயின் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டிக்குப் பக்கத்தில் Ampu எனும் ஒரு உபகரணம் வைக்கப்படுமாயின் அது நாளாந்தம் 2 மின் அலகுகளைச் செலவிடும். மாதத்திற்கு 60 அலகுகள் சராசரியாக மின் அலகுகள் இதனால் மட்டும் கூடும்.

மின் மோட்டர் மூலமாகத் தண்ணீர் இறைப்பவர்களாயின் ஒரு நாளுக்கு ஒரு முறை மட்டும் மோட்டரை இயக்குவது நன்று.

சூரிய சக்தி மின்கலம் அதாவது சோலர் வீட்டின் கூரைகளில் பூட்டி மின் சிக்கனம், வருமானத்தைப் பெறலாம். ஆனால், மின்சாரத் தடை நாட்களில் அதிலிருந்து மின்சாரம் கிடைக்காது.

> **“உங்களது வீட்டைப் போல நீங்கள் பணியாற்றும் இடங்களையும் பொது இடங்களையும் நேசியுங்கள். அரச அலுவலகங்களில் தேவையற்று ஒளிரும் மின் குமிழ்கள், சுற்றும் மின் விசிறிகள் மூலமாக தேவையற்ற கட்டண உயர்வை எதிர்நோக்கலாம். நாட்டின் மொத்த சனத்தொகையில் 10 வீதம் கூட அரச உத்தியோகத்தர் தொகை இல்லை. எமது வீண் விரயம் சாதாரண பொதுமக்கள் தலையில் வாழ்க்கைச் செலவாக விழும்.”**

சூரியபல சங்கிரமய எனும் திட்டத்தின் ஊடாக சூரியசக்தி மூலமான மின்உற்பத்தித் திட்டத்தை இலங்கை மின்சார சபை செயற்படுத்தி வருகின்றது.

உங்களது நிதி வசதிக்கேற்ப திட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்.

“சிக்கனம், சேமிப்பு, முதலீடு, வருமானம், சிக்கனம்... என்ற சுற்றோட்டத்தினுள் பிரவேசியுங்கள். பொறுப்புள்ள இலங்கைப் பிரஜையாக மாறுங்கள். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பண்பு ரீதியாகப் பொருளாதார அபிவிருத்தி ஏற்படும்.

நாட்டையும் முன்னேற்றுவோம். நாமும் முன்னேறுவோம்”

# ஜின்னாவின் பார்வையில் மலையகக் கவிதைகள்

இக்பால் அலி

தென்கிழக்குப் பல்கலைக் கழக தமிழ் மொழித் துறைத் தலைவி கலாநிதி ஸாதியா பௌஸார் எழுதிய 'மலையக் கவிதைகளும் மக்களும்' மற்றும் 'மலையக் கவிதைகளில் சிறுவர்களும் பெண்களும்' என்ற இரு ஆய்வு நூலின் வருகைக்குப் பின்பு மலையக நவீன கவிதை இலக்கியத்தின் நுண் ஆய்வுத் துறை புத்துயிர்ப்புப் பெற்று கணிசமான பார்வையைக் கொண்டுள்ளது என்று குறிப்பிட முடியும்.

இவ்விரு நூல்கள் பற்றி பத்திரிகைளில் வெளிக்கொணரப்பட்ட அறிமுகத்திற்குப் பின்னர் என் முகப்புத்தகத்தில் பின்னூட்டம் ஒன்றைப் பதிவு செய்திருந்தார் மாபெரும் கவிஞர் ஜின்னா ஷரிப்தீன். மகா உன்னதமான கவிஞர் ஜின்னா ஷரிப்தீன். இரு தசாப்தங்களுக்குப் பின்பு முகப்புத்தகத்தின் ஊடாக பழைய நட்புறவை பரிமாறக் கிடைத்தமையிட்டு நான் புளகாகிதம் அடைந்தேன்.

அவர் மாருதம் என்ற புனைப்பெயரில் மறைந்து நின்று மக்களின் அவல நிலைகளையும் சோகங்களையும் முன்வைத்து எழுதிய 'பனிமலையின் பூபாளம்' கவிதைத் தொகுப்பு நூலின் பிரதியினை எனக்கு அனுப்பி வைத்தார். அது 1995 களில் மருதம் என்ற புனைப் பெயரில் மருதமுனை அன்னை வெளியீட்டகத்தின் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளது. விலை 75 ரூபாவாகும். 'காங்கிரஸ் 'பத்திரிகையின் நிருவாக ஆசிரியர் சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் சௌ. தொண்டமான் திறன்கண்டளித்த தகவுரை எனும் தலைப்பில் இ. தொ. கா. வின் உத்தியோகபூர்வ ஏடான ' காங்கிரஸ்' இதழ்களில் கவிஞர் ஜின்னா ஷரிப்புத்தீன் மருதம் என்ற புனைப் பெயரில் வந்த அருமையான கவிதைகளில் சிலவற்றைத் திரட்டி 'பனிமலையின் பூபாளம்' என்ற பெயரில் கவிதை நூலை வெளியிட்டுள்ளார்.

இந்நூலின் முதலாவது கவிதையான 'புத்துலகைக் காண்போம்' என்ற தலைப்பில் அமைந்துள்ள கவிவரிகளை வாசிக்கும் போது உடம்பிலுள்ள நாடி நாள நரம்புகளில் ஓடும் உதிரம் பொங்கி எழுந்து துடிப்பது போலுள்ளது.

நித்தமும் நாம் பட்ட துயர்கள்
நீங்கி யொளி பிறந்ததெனப்
புத்துலகைப் படைப்பதற்குப்
புறப்படுவாய் மலைமகனே
இத்தரையில் ஏனிக்க வேண்டுமோ நாம்
அத்தனையும் பிறரைப் போல்
அனுபவிப்போம் எழுந்து வா

இக்கவிவரிகள் நம் நெஞ்சை உலுக்குகிறது.

இந்தக் கவிதையின் அதிர்வுகள் மலையக மக்களுடைய அவல வாழ்க்கை முறையினை எடுத்துக் காட்டுவதோடு அவர்களது சமூக அந்தஸ்து பறிக்கப்பட்டு, அடக்கி, ஒடுக்கப்பட்டு, துன்புற்று வாழும் நிலையிலிருந்து புரட்சிகரமான மாற்றங்கள் நிகழ வேண்டும் என்பதோடு சமூகங்களுக்கிடையே ஏற்றத் தாழ்வுகள் அவசியமில்லை எல்லோரும் போல சமய நிலையான அளவீட்டையும் மலையகச் சமூகம் பெற வேண்டும் அதிலும் இந்த மண்ணில் யார் யாரெல்லாம் என்ன சலுகைகளை அனுபவிக்கின்றார்களோ அத்தனையும் மலையக மக்கள் அனுபவிக்க வேண்டும் என கவிஞர் ஜின்னா ஷரிப்தீன் காங்கிரஸ் பத்திரிகையில் 15-12-1989 களில் எழுதிய கவிதையின் வரிகளில் ஓங்கி குரலெழுப்பியுள்ளார்.

நொந்தழுவ தாலொன்றும் நடப்பதில்லை.
நிலையான வெற்றிக்கோ முயற்சி வேண்டும்.
சந்ததியோர் கற்றவராய் இருந்தா லின்று
சாதிக்கப் பலவுண்டு அறிவினாலே

இந்தக் கவிவரிகள் 'மலையக மாதருக்கு' என்ற தலைப்பின் கீழ் பாடப்பட்டுள்ளது. இக் கவிவரிகளெல்லாம் கொழுந்து பறிக்கும் மலையகப் பெண்களின் கைவிரல்களில் எழுதுகோல்கள் இருக்க வேண்டும். கடுமையான குளிரிலும் வெயிலிலும் கொழுந்து பறித்துப் பறித்து கை விரல்களையோ உடலையோ வருத்திக் கொள்ளத் தேவையில்லை. படித்த தலைமுறையினரை உருவாக்க வேண்டுமாயின் மலையகப் பெண்கள் கட்டாயம் கல்வி கற்க வேண்டும். கல்வியினைக் கற்றால்தான் எதையும் சாதிக்க முடியும். மலையகத்தில் கல்வியின் மூலம்தான் எழுச்சியைப் பெற முடியும் அதுவும் பெண்கள் மூலம்தான் பெற வேண்டும் என கவிஞர் தம் கவிதைகளில் சித்தரித்துள்ளார். கவிஞர் ஜின்னா ஷரிப்தீன் இக்கவிதையினை மூன்று தசாப்பதங்களுக்கு முன்னர் யாத்த கவிதையாகும். அக்கால கட்டத்திற்குள் மலையகம் பாரிய கல்வி எழுச்சியை கண்டுள்ளது. இருந்த போதிலும் இன்றைய யுகத்தில் கூட மலையப் பெண்களைக் குறைந்தது ஆசிரியைகளாக ஆக்காமல் பெண் பிள்ளைகளை வேலைக்கு அமர்த்திச் சம்பளம் பெறும் தாய்மார்களின் முகத்தில் இக்கவிதை அறைகிறது.

ஆனாலும் மலையகத் தாய்மார்களின் கருவின் மடியில் வளர்ந்த பேராசிரியர் எஸ். சந்திரசேகரன், பேராசிரியர் சந்தானம், பேராசிரியர் மு. சின்னத்தம்பி, பேராசிரியர் மா. செ. மூக்கையா, பேராசிரியர் விஜயச்சந்திரன், பேராசிரியர் ஜோதி மலர், கலாநிதி ரமேஸ், கலாநிதி வி.பி. சிவப்பிரகாரம், கலாநிதி ஏ.எல். சந்திரபோஸ், பி. முத்துலிங்கம், ரா. நித்தியானந்தன், சு. முரளிதரன் லெனின் மதிவாணன், திலகர் ஜெயசீலன், செல்வராஜ் என எத்தனையோ கல்வியாளர்களின் பெயர்களைப் பட்டியல் போட்டுக் காட்டலாம்.


மலையக மக்கள் படும் அவதிகளை இந்த நூல் முழுவதும் வேதனை பொங்கப் பதிவு செய்கிறார் கவிஞர் ஜின்னா ஷரிப்தீன். மேலும் அனைவரும் இலங்கையரே சிந்தமாணி ஞாயிறு பத்திரிகையில் 3-12- 1989 களில் வெளிவந்த கவிதை இது. மலையகப் படைப்பாளிகள் எல்லோரையும் போன்று இக்கவிதையின் முதல் சீரிலே 'இந்தியா வம்சாவழி' என்ற சொல்லாடலைப் பயன்படுத்தி வந்திருக்கிறார். 'இந்தியத் தமிழர்களை பண்பாட்டு ரீதியில் வேறுபடுத்துகையில் மலையக மக்கள் அல்லது மலையகத் தமிழர் என அழைக்கப்படுகின்றனர். ஆரம்பத்தில் கூலி என அழைக்கப்பட்டவர்கள். பின்னர் 'கூலிகள்' எனவும் அழைக்கப்பட்டார்கள். அதற்குப் பின்னர் இந்தியத் தொழிலாளர் எனவும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எனவும் இந்தியத் தமிழர் எனவும் இந்திய வம்சாவழித் தமிழர் எனவும் பல்வேறு இடங்களில் அழைக்கப்பட்டுள்ளதை இந்த மக்களது இலக்கியப் படைப்புக்களில் அறிய முடிகின்றது. கோ. நடேசய்யர், திருமதி மீனாட்சியம்மை எழுத்துக்களில் 'இந்தியத் தமிழர்கள்' எனும் அடையாளம் பெறுவதைக் காணலாம். அதே நேரம் கோ. நடேசய்யர் இவர்கள் இலங்கை நாட்டுக்குரியவர்களாக வேண்டும் எனும் பதிவுகளை நடேசய்யர் தந்துள்ளார் பின்னாளில் சி.வி.வேலுப்பிள்ளை தனது படைப்புக்களில் மலைநாட்டு மக்கள் என இந்த மக்களை விளக்குகின்றார்' என்று மல்லிகைப்பூ சந்தி திலகர் கனடாவில் இருந்து வெளிவரும் குறிஞ்சி மலர் 23 ஆவது தீபாவளிச் சிறப்பு மலரில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

கவிஞர் ஜின்னா ஷரிப்தீன் அந்த சொல்லாடலிருந்து வேறுபட்டு இந்திய வம்சா வழிச் சொல்லாடலை யாரும் பயன்படுத்த வேண்டாம். நாம் எல்லோரும் இந்நாட்டு மக்கள். நாம் எல்லோரும் சமத்துவமாய் வாழ்வோம் என்று கவிஞர் அறைகூவலை விடுக்கின்றார்.

இந்நூலில் மலையகப் பெண்களும் சிறுவர்களும் தொழிலாளர்களும் படும் அவஸ்தைகளையும் அவர்களுடைய தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் அங்கு நடக்கின்ற கர்ணக்கொடூரங்களைப் பல கவிதைகள் பேசுகின்றன. தோட்டம் முழுவதும் மாற்றம் பெற வேண்டும். இ.தொ.கா. தலைவர் சௌ.தொண்டமான் சிறந்த தலைவர். அவர் மூலம் மாற்றத்தைக் காணலாம் எனப் பல்வேறு விதமான எண்ணக்கருக்களைப் பாடு பொருளாக் கொண்டு எழுதியுள்ளார். தான் தந்தையுடன் மலைகத்தில் வாழும் போது தான் கண்ட நேரடி அனுபவத்தை தம் கவிதைகளில் பதிவு செய்துள்ளார் என அறிய முடிகிறது.

தமிழ் நாடு புதுக்கோட்டை கவிஞர் சோம சிவப்பிரகாசம் எம். ஏ. நூல் பற்றி எழுதும் போது 'கவிஞர் காலத்தைப் பிரதிபலிக்கின்றார். எதிர்காலத்தையும் கணிக்கின்றார். அறிவுரைகளை ஆணித்தரமாக எடுத்துக் கூறும் மருதத்தின் கவிதைகள் மலையக மக்களுக்கு மந்திரமாக மாற வேண்டும். திட்டவட்டமான தெளிவான நெஞ்சம் இவர் கவிதைகளில் தெளிவாகப் புரிகிறது. மலையக மக்களை நேசிக்கும் மாண்பு தெரிகிறது. அவர்கள் வாழ்வு வளம்பெற வழிகூறும் பாங்கிலே மனித நேயம் பளிச்சிடுகிறது' எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாடு சென்னை கவிராசயோகி கபிலவாணனின் வாழ்த்துப் பாவும், ஆசிரியரின் எனது சில வார்த்தைகள் என்ற உரையும். 47 தலைப்புக்களில் எழுத்தப்பட்ட கவிதைகளுடன் தேயிலைக் கொழுந்து அழகிய அட்டையுடன் வெளிக்கொணரப் பட்டுள்ளது.



# த.ஜெயசீலன் கவிதைகளில் உவமைநயம்

த.அபிநாத்



சீரிளமைத் திறத்தோடு செகந்தனில் திகழும் நம் தமிழ் மொழிக்கு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனச் சான்றோர் ஐந்திலக்கணம் வகுத்துள்ளனர். அணி இலக்கணத்தின் பொருளணி வகைப் பாட்டின் கீழ் அழகுற அமைந்த அணிகளில் ஒன்றாக உவமை காணப்படுகின்றது.

“பண்பும் தொழிலும் பயனும் என்று இவற்றின்
ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை”

என்று தண்டியலங்காரம் உவமையினை வரையறுத்துள்ளது. ஈழத்தின் கவிப்புலத்தில் குறிப்பிடத்தக்க கவிஞரான த.ஜெயசீலன் நல்லூரைச் சேர்ந்தவர். எங்கள் கல்லூரித் தாயான யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றவர். கனவுகளின் எல்லை (2001) கைகளுக்குள் சிக்காத காற்று (2004) எழுதாத ஒரு கவிதை (2013) புயல் மழைக்குப் பின்னான பொழுது (2014) எனும் நான்கு தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். கையெழுத்துப் பிரதியாக எண்ணாயிரத்திற்கும் அதிகமான கவிதைகளைத் தன்வசம் கொண்டுள்ளார் என்பதும் வியப்பான விடயமாகும். இவரது நான்கு தொகுப்புக்களிலும் உவமை அணி நயம் மிகுந்த வகையிலே காணப்படுகின்றது.

கனவுகளின் எல்லை எனும் தொகுப்பில் அமைவுறும் ஜெயபேரிகை கொட்டடா என்ற கவிதை நயமான உவமைகளோடு காணப்படுகின்றது.

“ஊழியொன் றெழுந்தாடல் போலவும்
ஊதுலைத் தணல் போலவும்
பேயலைப் புயல் பீறல்.. மின்னி ஓர்
பிரளயம் எழல் போலவும்
பேயி ரைச்சலில் வானும் மாறிட
பிய்ந்த நம்மவர் பீடுற
கூடி ஓர் குரல் வைத்துப் பேரிகை
கொட்டும் கூற்றதும்...”

என்றவாறான உவமை அடுக்குகள் குறித்த விடயத்தினை எடுத்துரைக்க உதவும் அழகிய கோபுர அமைப்பாக மேலேழுந்து இறுதி முடிவுக்குக் கலச அந்தஸ்த்தினை வழங்கும் பண்போடு காணப்படுகின்றன.

உரோமில் அடிமைகளையும் விலங்குகளையும் மோதவிட்டு மரணத்தை இரசித்த கொடூர நிகழ்வினை இனப் போருக்கு உவமையாக்கி அவலச் சுவை பயக்கும் வகையிலே கீழ்வருமாறு வெளிப்படுத்துகிறார்.

“கோலோசியத்தை போற்தானே எந்தன் குடி நிலமும்
அவலக் குரலெழுப்பி ரத்தக் குளமாகி
பலர் பார்த்து இரசிக்கப் பலியாகி
பெரிதாக மாறாமல் பிரள்வதனைச் சொல்லுது
(கனவுகளின் எல்லை)

சிவபெருமானின் அருளால் என்றும் பதினாறு வயதுடன் வாழும் பேறு பெற்றவராக மார்க்கண்டேயர், இந்து மதத்திலே குறிப்பிடப்பட்டுள்ளார். அத்தகைய சிரஞ்சீவித் தன்மையோடு நிலவினை த.ஜெயசீலன் ஒப்பிடுகின்றார். அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் என்னும் கவிதையில்

“இந்தக் கிழ நிலவு
சற்றும் நரை மூப்புத் தட்டாமல்
தளதளப்பாய்
மார்க் கண்டேயன் போல
மணியாய்த்தான் சிரிக்கிறது”
(கனவுகளின் எல்லை)

என்று மாறாவயது மணி நிலாவை எங்களது மனம் பூரிக்கும் படியாக உவமிக்கின்றார். மேலும் கவிதை எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கும் கவிஞர் வரம்பு கட்டி உயிர்ப்பா எனும் கவிதையில் வரையறுக்கிறார்.


“எளிமை மிகுந்தது தான் இயற்கை எனினும் அது
ஒளித்து வைத்த வியப்புகள் போல்
அசத்தோணும் கரு நுட்பம்
தோண்டத் தோண்ட ஊற்றாய் சுரக்கும் நிலம் போல
மீண்டும் மீண்டும் துய்க்க
விரியோனும் பொருள் ஆழம்
(கனவுகளின் எல்லை)

கம்பநாடன் குறித்த கவிதையானது அழகிய உவமைகளைக் கொண்டமைந்துள்ளது.

“கம்பன் சொன்ன ஒழுகலாறு நதியைப் போலே
கம்பன் சொன்ன காடு நகர்ச் சிறப்புப் போலே
கம்பன் சொன்ன சோதரரின் அன்பு போலே
கம்பன் சொன்ன உறவுகள் செய் கடமை போலே
கம்பன் கண்ட மனைவியரின் மகிமை போலே
கம்பன் சொன்ன பல்லுயிரும் ஓம்பிச் சொந்தத்
தம்பிகளாய்ப் போற்றுகின்ற கருணை போலே
தகைமை பெற்றால் எங்கள் ஊரும் சொர்க்கம் தானே”
(எழுதாத ஒரு கவிதை)

கம்பநாடனின் காவியச் செழுமையைப் பெற்று எங்கள் ஊரும் அமரருலகிற்கு நிகராகிவிட வேண்டும் என்னும் உள்ளக்கிடக்கையினை நயமிகு உவமையாக்கித் தந்துள்ளார். தங்கமகள் என்ற கவிதையில் தவழ்ந்து அடிவைத்து நடந்து வரும் மகளைக் கண்ட தந்தையுள்ளத்தின் தனிப் பெரும் உணர்வைக் கவிச் சித்திரமாய்த் தீட்டியுள்ளார்.

“தளிரோடு மலரோடு தவழ்ந்த தென்றல்
தலையசைத்து தோள்வருடித் தழுவுமாப் போல்
அழகென்னும் சொல் உயிரும் கொண்டு கண்முன் அசைந்தசைந்து தேர் போல நகருமாப் போல்”
(எழுதாத ஒரு கவிதை)








தேற்றம் என்ற கவிதையில் ஒரு காலத்தின் கொடூரத்தைக் குறிப்பிட்டு, அதிலிருந்து மனதைத் தேற்ற முடியாத அவஸ்தை நிலையை விளம்பரக்காட் சிக்கு உவமிக்கும் பண்பு நயமாகவுள்ளது. மீள மீளக் கரை உரசும் அலையாய் விளம்பரம் அடிக்கடி தோன்றும் தன்மை அவரிடம் வெளிப்படுகின்றது. மனத்திரையில் தோன்றும் மீள் காட்சிக்கு எவ்வளவு சிறப்பான உவமையினைத் தேர்ந்தெடுத்துள்ளார்.




“கதறக் கதறக் குஞ்சுகளை மர நாய்கள்
இழுத்துக் கொண்ட கன்ற
இறுதிக் கணக்காட்சி மட்டும்
அடிக்கடி வரும் ஒரே விளம்பரம் போல்
மனத்திரையை மோதி மோதி
நம்பிக்கை கற்சுவரை
சிறிது சிறிதாகச் சிதைக்கிறது”
(எழுதாத ஒரு கவிதை )




மனதின் நிலையினை உவமையூடாக உணர்த்தும் விதம் புதுமையாக உள்ளது.

“அடுப்பிலிட்ட
தோசைக்கல் போலவே சுட்டு
வரண்டு... காலின்
பித்த வெடிப்பைப் போல்
அடி பொருக்கு வெடித்திருக்கு”
(எழுதாத ஒரு கவிதை)

எனத் தோசைக்கல், பித்த வெடிப்பு முதலியவற்றை மனதின் ரணத்திற்கு உவமையாக்கியுள்ளார்.

கவிஞர் த.ஜெயசீலனின் இரசனை உணர்வுக்கு உரைகல்லாகப் பின்வரும் உவமையினைக் கூறலாம் என நினைக்கிறேன்.

“வெட்டி வைக்கப்பட்ட சர்க்கரைப் பூசணித்
துண்டொன்றாய் மஞ்சள் நிலவு
கீழ்த் திசையின்
தொடுவானத் தருகே ஒளிர்கிறது இப்போது
நேற்று கிழித்த நகம் போல்”
(புயல் மழைக்குப் பின்னான பொழுது)

பிறையானது பூரண நிலவாக மாறியமை பற்றிய கவிஞரின் பதிவினையும் வெட்டிய சாம்பற் பூசணிக்கு நிலவை உவமித்த தன்மையினையும் நோக்கும் போதும் ஆச்சரியம் அதிகரிக்கிறது. இது வரை நிலவு பற்றி எத்தனை ஆயிரம் உவமைகளைக் கேட்டிருப்பினும் இத்தகைய மனங்கவரும் வகையான உவமை அரிதானதே! நிலவைப் பார்க்கும் போதெல்லாம் சாம்பற் பூசணியை நினைக்குமாறு கவிஞர் நம்மை உருவாக்கிவிட்டார்.

பறவை ஒன்றின் இயல்பான பறப்பின் தொழிற்பாட்டினை ஈருருளி மிதிப்போடு ஒப்பிட்டு வியப்பூட்டியுள்ளார்.

“பறவையின் பாரம்
அதை வெளியில் உயர்த்துகிற
விசைகள் சிறகை இயக்கும் பொறிமுறைகள்
தன்பாட்டில் சைக்கிள்தனை உழக்கும்
கால்களைக் போல
தம் பாட்டில் சிந்தனைக்குத்
தொடர் பின்றி அமைந்துள்ளன”
(புயல் மழைக்குப் பின்னான பொழுது)

பிரிவின் துன்பியலை “இல்லாத பொழுது” கவிதையிலே சிறப்பாக எழுதிச் செல்கிறார். அன் பின் அதிர்வலையைப் புதுமையான வகையிலே விளக்கியுள்ளார். காட்சிப்படுத்தும் பண்போடு ஓசைநயம் பொருந்திய சொற்களை இயல்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

“இரயிலோடிப் போனாலும்
தண்டவாளம் அதிர்வது போல்
திரும்பி நீ சென்றாய் தெரியாதவள் போல்
எனது இதயம்
அதிர்ந்து துடிக்கிறது”
(புயல் மழைக்குப் பின்னான பொழுது)

“விரல்களினால் தொடுகின்றாய் விரோதியைப் போல்” “குவிந்திருக்கும் குப்பை கிழறுகிற கோழிகள் போல்” “அமைதிக்காய் தவமிருந்து அழிவு வரம் பெறுவது போல்” என்றவாறாகப் பல்வேறுபட்ட நயம் மிகுந்த உவமைகளைப் புயல் மழைக்குப் பின்னான தொகுப்பிலே இனங்காண முடிகிறது.

“கைகளுக்குள் சிக்காத காற்று” என்ற கவிதைத் தொகுப்பும் பல தரப்பட்ட உவமைகளோடு அமைந்துள்ளதைக் காண முடிகிறது. வேர் என்ற கவிதையிலே சுவை மிகுந்த உவமையினைத் தரிசிக்க முடிகிறது.

“ஆங்கு ஒரு ஆல விதை
தனைத் தகர்ந்து பச்சைத் தளிர்காத்து ஆடிற்று
மனம் போல் வளரவிட்டேன்”

என்றவாறாக ஆல விதையின் வளர்ச்சியை விடுதலை கண்ட மனதின் பயணத்தோடு ஒப்பிட்டுள்ளார். பண்வாசமும் மண்வாசமும் இணைந்து மனங்கமழும் பாடல்களின் சிறப்பினையும் அழகாகக் கவிதையாக்கியுள்ளார். மழை பெய்கின்ற போது நாசியினுள் நுழைகின்ற மண் வாசம் புத்து ணர்வினை ஏற்படுத்துவதுண்டு. இயற்கையை நேசிக்கின்ற கவிஞனுக்கு மண்ணின் வாசம் மனதிற்கு இதமாகவே அமையும்.

“கிராமத்தின் மாரிமழை வாசம் போல்
இயல்பாய் பிரவாகித்து எம்மோடு
பிணைந்தவை நம் பாடல்கள்”
(கைகளுக்குள் சிக்காத காற்று)

“வானம் வெளுத்து விரிகிறது ஒரு பூப் போல்” “மெத்தை விரித்ததென” “குழந்தை போல் உருண்டு புரள்கிறது” என்றெல்லாம் கைகளுக்குள் சிக்காத காற்று என்ற கவிதைத்தொகுப்பிலே பல்வேறு உவமைகளை எழுதியுள்ளார்.

கனவுகளின் எல்லை, கைகளுக்குள் சிக்காத காற்று, எழுதாத ஒரு கவிதை, புயல் மழைக்குப் பின்னான பொழுது ஆகிய த.ஜெயசீலனின் கவிதைத் தொகுப்புகளில் பல்வேறுபட்ட புதுமையான உவமைகளைக் காண முடிகின்றது. கவிதை குறித்து அவர் எழுதிய கவிதையோடு முடிகின்றேன்.

“கவிதை எனக்கு கவச குண்டலம் போல
கவிதை எனக்கு ஒரு கைவாளினைப் போல
கவிதை எனக்கு ஒரு கன்னித்துணை போல
கவிதை எனக்கு ஒரு கருணை மடி போல
கவிதை எனக்கு ஒரு கற்பகத் தரு போல” ■

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
12 - 05 - 1955

உதிர்வு
31 - 12 - 2021

## சரவணமுத்து சிவகுமாரன்



பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளிவிளக்கே
உற்றவர் சுற்றமும்;
கூடிக்கழித்த உறவுகளை
கைவிட்டுச் சென்றதேனோ
பிரிவால் வாடி நிற்கின்ற உள்ளங்கள்
தேற்ற மொழியின்றி
தவிக்கின்றதே- நின் உறவின்
அடி தேடித் துடிக்கின்றதே....



கிளப் ஹவுஸ்
ஐரோப்பிய நேரம் - நண்பர்கள்

# ஜனவரி-4 முதல் இந்த வகையான Blackberry போன்கள் செயல்படாதா?

Blackberry os போன்கள் வரும் ஜனவரி மாதம் 4 ஆம் தேதி முதல் நம்பகத்தன்மையுடன் இயங்காது என அதன் அதிகாரபூர்வமான வலைதளப் பக்கத்தில் அறிவித்துள்ளது.

Blackberry போன்கள் ஏற்கெனவே சந்தையில் அதன் பொலிவை இழந்து விட்டது, இதன் பயனர்கள் பலரும் தற்போது ஐபோன் மற்றும் ஆண்ட்ராய்டு போன்களை பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். இருப்பினும் ஒருசிலர் இன்னும் Blackberry போன்களைப் பயன்படுத்திக்கொண்டு இருக்கின்றனர். இந்நிலையில் கனடிய நிறுவனம் செல்லுலார் (cellular) அல்லது wifi உதவியுடன் இவற்றை அடுத்த வாரத்திலிருந்து பயன்படுத்த முடியாது என்று




கூறியுள்ளது.

இந்நிறுவனம் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலேயே இந்தப் பயன்பாட்டை நிறுத்தப்போவதாக கூறிய நிலையில் ஒருசில பயன்பாட்டாளர்களுக்காக கொஞ்ச நாட்கள் நீட்டிப்பு செய்தது. மேலும் இந்த செயல்முறை ஆண்ட்ராய்டை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் Blackberry போன்களுக்கு பொருந்தாது என்றும் கூறியுள்ளது.

ஜனவரி-4 முதல் BlackBerry 7.1 OS, BlackBerry 10, BlackBerry PlayBook OS 2.1 மற்றும் இதர பழைய வெர்ஷன்கள் இனிமேல் நம்பகத்தன்மையுடன் செயல்படாது அந்நிறுவனம் அதன் அதிகாரபூர்வமான வலைதளப் பக்கத்தில் அறிவித்துள்ளது. அதாவது செல்லுலார் (cellular) அல்லது wifi உதவியுடன் இயங்கும் BlackBerry போன்களில் அழைப்புகள், குறுஞ்செய்தி அனுப்புதல், அவசர அழைப்பு எண்ணான 911 ஆகியவற்றைக் கூட செய்ய முடியாது, அதற்கு உத்தரவாதம் இல்லை.

ஒன்டாரியோவைத் தலைமையிடமாகக் கொண்ட வாட்டர்லூ என்கிற நிறுவனம் மீண்டும் வாடிக்கையாளர்களை கவரும் பொருட்டு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. 2013 ஆம் ஆண்டில் ஆண்ட்ராய்டு மற்றும் iOS பயனர்களைக் கவரும் வகை யில் பழைய மாடலான BlackBerry OSக்குப் பதிலாக BlackBerry 10 ஐ அறிமுகப்படுத்தியது. பின்னர் இறுதியாக இந்த நிறுவனம் ஆண்ட்ராய்டுக்கு மாறி 2015 இல் ஆப்பிள் மற்றும் சாம்சங்கை வெல்லப் புதிய ஸ்லைடர் போனாக BlackBerry Priv ஐ கொண்டு வந்தது. ஆனால் இந்த முயற்சியும் வெற்றி பெறவில்லை.

அடுத்ததாக 2016 இல் BlackBerry உலக சந்தையில் தனது பெயரை நிலை நாட்ட TCL கம்யூனிகேஷன் மற்றும் இந்தியாவில் Optiemus Infracom உள்ளிட்டவைகளுடன் கூட்டணி அமைத்தது. இந்தக் கூட்டணியின் மூலம் Black Berry Key1 மற்றும் Key2 மாடல்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.

இருப்பினும், TCL கடந்த பெப்ரவரி 2020 இல் இனி BlackBerry போன்களை உற்பத்தி செய்யப்போவதில்லை என்று அறிவித்தது. 2020 இல் ஸ்டார்ட்அப் ஆன்வர்ட்மொபிலிட்டி 2021 இல் 5G BlackBerry போனை அறிமுகப்படுத்த நினைத்தது, ஆனால் அந்த மாடல் இன்னும் வெளிவரவில்லை. இது போன்ற சில காரணங்களால் இந் நிறுவனம் முற்றிலுமாக அழிந்து விடவில்லை, அதன் பிராண்டை உலக சந்தையில் நிலைநிறுத்த பல் வேறு புதுமைகளை புகுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ■

# whatsapp இல் உங்கள் பெயரை மறைப்பது எப்படி?




உங்களுக்குத் தெரியாத, அறிமுகம் இல்லாத நபர்களிடம் இருந்து உங்களுடைய வாட்ஸ்அப் கணக்கின் பெயரை மறைப்பதற்காக, வாட்ஸ்அப் கணக்கின் பெயர் இருக்கும் இடத்தை வெற்றிடமாக மாற்றக்கூடிய ஆப்ஷனை வாட்ஸ்அப் அறிமுகப்படுத்தியுள்ளது.

பேஸ்புக் என்று அறியப்பட்டிருந்த, தற்போது மெட்டா என்று பெயர் மாற்றம் பெற்றிருக்கும் தலைமை நிறுவனத்தின் உப நிறுவனங்களுள் ஒன்று தான் வாட்ஸ்அப். கோடிக்கணக்கானவர்கள், உலகம் முழுவதும் பயன்படுத்தி வரும் இந்த மெசேஜிங் ஆப்பில், மிகப் பெரிய அளவுக்கு பண மோசடிகள் நடந்து வருகிறது. அவ்வப்போது செயலியின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கு, பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு பல்வேறு அப்டேட்கள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வாட்ஸ்அப் செய்திகள், உங்கள் சாட் என்று அனைத்துமே என்க்ரிப்ட் செய்யப்பட்டு பாதுகாப்பாக இருக்கின்றன என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் தற்போது வாட்ஸ் அப் செயலியில் யூசர்கள் பயன்படுத்தும் புரொஃபைல் போட்டோ, ஸ்டேட்டஸ், லாஸ்ட் ஸீன் ஸ்டேட்டஸ் மறைப்பது, மற்றும் இதர விவரங்களை அவர்களுக்கு முன்பின் தெரியாத நபர்கள் பார்க்க முடியாதபடி பாதுகாப்பாக மாற்றுவதற்காக சில அப்டேட்களை செய்யப் போவதாக வாட்ஸ்அப் செயலியின் தலைமை நிறுவனமான மெட்டா அறிவித்தது. மேலும், ஒரு சில பாதுகாப்பு அம்சங்களைப் பயன்படுத்த வேண்டிய அளவுக்கு ஆன்லைன் ஹேக்கிங் மற்றும் அச்சுறுத்தல் இருக்கின்றன. உங்களுக்குத் தெரியாத, அறிமுகம் இல்லாத நபர்களிடம் இருந்து உங்களுடைய வாட்ஸ்அப் கணக்கின் பெயரை மறைப்பதற்காக, வாட்ஸ்அப் கணக்கின் பெயர் இருக்கும் இடத்தை வெற்றிடமாக மாற்றக்கூடிய ஆப்ஷனை வாட்ஸ்அப் அறிமுகப்படுத்தியுள்ளது.

குறிப்பிட்ட நபர்களிடம் இருந்து உங்கள் வாட்ஸ்அப் கணக்கின் பெயரை மறைப்பது எப்படி என்று இங்கே பார்க்கலாம்.

உங்கள் வாட்ஸ்அப் கணக்கைத் திறந்து, திரையின் வலது மேல்பக்கத்தில் இருக்கும் மூன்று புள்ளிகள் மீது டாப் செய்து செட்டிங்ஸ் (settings) பகுதிக்குச் செல்லவும். அடுத்ததாக, (⇨) சின்னத்தை நகல் எடுக்கவும்.


வாட்ஸ்அப் கணக்கில் உங்கள் பெயருக்கு முன்னே இருக்கும் பென்சில் (pencil) சின்னத்தின் மீது டாப் செய்து, நகல் எடுத்த அம்புக்குறி சின்னத்தை உங்களின் தற்போதைய பெயர் இருக்கும் இடத்தில் 'paste' செய்யுங்கள்.

குறிப்பிட்ட நபர்களிடம் இருந்து உங்கள் வாட்ஸ்அப் கணக்கின் பெயரை மறைப்பது எப்படி என்று இங்கே பார்க்கலாம்.

உங்கள் வாட்ஸ்அப் கணக்கைத் திறந்து, திரையின் வலது மேல்பக்கத்தில் இருக்கும் மூன்று புள்ளிகள் மீது டாப் செய்து செட்டிங்ஸ் (settings) பகுதிக்குச் செல்லவும். அடுத்ததாக, (⇨) சின்னத்தை நகல் எடுக்கவும்.

வாட்ஸ்அப் கணக்கில் உங்கள் பெயருக்கு முன்னே இருக்கும் பென்சில் (pencil) சின்னத்தின் மீது டாப் செய்து, நகல் எடுத்த அம்புக்குறி சின்னத்தை உங்களின் தற்போதைய பெயர் இருக்கும் இடத்தில் 'paste' செய்யுங்கள். ■

# ஐபோன் பற்றரி ஆயுளை நீடிப்பது எப்படி?



போன்களில் பற்றரி சார்ஜ் அதிக நேரம் நீடிப்பதில்லை என்று கூறும் வாடிக்கையாளர்கள், பற்றரி பிரச்சினையை சமாளிக்க சில வழிமுறைகள் உள்ளன.

பெரும்பாலும் ஐபோன் என்றாலே பற்றரி நீண்ட நேரம் நீடிக்காது என்ற கருத்து மக்கள் மத்தியில் பரவலாக உள்ளது.

கடந்த ஆண்டு வெளியான ஐபோன் 13 மாடல்களில் பற்றரி திறன் முந்தைய மாடல்களைக் காட்டிலும் சற்று அதிகமாகவே கூட்டப்பட்டுள்ளது. ஆனாலும் வாடிக்கையாளர்கள் பற்றரி சார்ஜ் அதிக நேரம் நீடிப்பதில்லை என்றே கூறுகின்றனர்.

இந்தப் பிரச்சினையை சமாளிக்க தற்போது சில வழிமுறைகளை நாம் காண்போம்:

முதலில் செட்டிங்ஸ் சென்று, அதில் ஜெனரல் கிளிக் செய்து, பேக்ரவுண்ட் ஆப் ரெப்ரெஷ், ஆஃப் செய்யவும்.

Settings > General > Background App Refresh

இரண்டாவதாக மீண்டும் செட்டிங்ஸ் சென்று பற்றரி ஹெல்த் , ஆப்டி மைஸ்டு பற்றரி சார்ஜிங் டாக்கில் செய்யவும்.

Settings > Battery > Battery Health > Toggle on Optimised Battery Charging

மூன்றாவதாக மீண்டும் செட்டிங்ஸ் சென்று, அக்செசபிலிட்டி, மோஷன், ஆட்டோ பிளே மெசேஜ் எபக்ட்ஸ் மற்றும் ஆட்டோ பிளே வீடியோ ப்ரிவியூஸ் டாக்கில் செய்யவும்

Settings > Accessibility > Motion > Toggle off Auto-Play Message Effects and Auto-Play Video Previews

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்தையும் செய்தால் உங்கள் ஐபோனின் பற்றரி சார்ஜ் நீண்ட நேரம் நீடிக்கும். இந்த வழிமுறை புதிய மற்றும் பழைய என அனைத்து ஐபோன்களுக்கும் பொருந்தும். ■

தீம்புனல் THEEMPUNAL

# மறுக்கப்படும்.....



(04 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அதற்கு எங்கள் பலமும் நாங்கள் கொண்டிருக்கக்கூடிய வளமும் நாங்கள் கட்டியெழுப்பியிருக்கக்கூடிய உறவுப்பாலங்களும் முதன்மையானது.

நாங்கள் எங்கள் உணவுக்காக இரப்பவர்களாகவும் தொழிலுக்காக அரசாங்கத்தையும் அந்நியனையும் நம்பி வாழ்பவர்களாகவும் இருக்கும் நிலையிலிருந்து விடுபடவேண்டும். உற்பத்திக் கைத்தொழில்கள், உழவும் உணவு உற்பத்தியும், பதனிடல். பொதியிடல், கருவிகளும் இயந்திரங்களும் செய்தல், அறிவியலிலும் ஆராய்ச்சியிலும் எங்களை முதன்மைப்படுத்தல் என பல்வேறு தளங்களிலும் உடனடியாக நாம் இறங்க வேண்டும்.

மக்ஸ் வெபர் என்னும் சமுகவியலாளர் தனது “The Protestant Ethic and the Spirit of Capitalism” என்ற நூலில் கல்வினிசம் என்ற சமயக்கொள்கையினால் வழிநடத்தப்பட்ட மக்களின் கடுமையான உழைப்பும் சிக்கனமான வாழ்க்கையும் ஐரோப்பாவில் பாரிய மூலதனத் திரட்சி உருவாகக்காரணமாகியது என்று குறிப்பிட்டார்.

அதுபோன்ற ஒரு வாழ்க்கை நெறிக்கு ஈழத்தமிழர்கள் தங்களைத் தகவமைக்கவேண்டும். தங்கள் வாழ்க்கை முறை, கல்வி, உழைப்பு, சேமிப்பு என்பன மட்டுமன்றி அவை மூலதனவாக்கமாகவும் தொழில்களின் பெருக்கமாகவும் புத்தாக்கத் திறன்களின் வரவேற்புக் களங்களாகவும் மாற்றப்படவேண்டும்.

இதன்பொருட்டு சமூக நிறுவனங்கள் யாவும் மீண்டும் விழித்தெழ வேண்டும். எங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் சனசமூக நிலையங்களும் மாதர் அபிவிருத்திக் குழுக்களும் விவசாய குழுக்களும் மீளவும் விரைந்து புனரமைக்கப்பட வேண்டும். கூட்டுறவுச்சங்கங்கள் தங்களைப் பீடித்துள்ள சகல பிணிகள், செய் வினைகள், சூனியங்கள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு சமூகத்தின் கூட்டுப்பொருளாதாரத்தின் உயிர் நாடியாகத் தங்களை நிலைநிறுத்த வேண்டும். இளையோரும் செயல் விளைப்போரும் கூட்டுறவிற்குள் தங்களை இணைக்கவேண்டும்.

அதற்கான துவக்கமாக தற்போது இலங்கைத் தீவு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியை எங்களுக்கான வாய்ப்பாக மாற்றுவோம். உடனடியாக விரைந்து உணவு உற்பத்திகளிலும் ஏனைய அத்தியாவசியப் பண்டங்களின் உற்பத்திகளிலும் எங்கள் நிலங்களையும் வளங்களையும் அர்ப்பணிப்போம்.

வெளிநாடுகளிலிருந்து வரும் உயர் இன பயிரினங்களுக்காகவும் மரபு மாற்றம் செய்யப்பட்ட விதைகளுக்காகவும் காத்திராமல் எங்கள் பாரம்பரிய பயிரினங்களைத் தேடி விதைப்போம்.

இயற்கை விவசாயம் மூலம் பாதுகாப்பானதும் ஆரோக்கியமானதுமான உணவினை எமது பிள்ளைகளுக்குக் கொடுப்போம்.

எங்கள் தண்ணீரை நாங்களே நஞ்சூட்டி விட்டு குடுவையில் அடைக்கப்பட்ட தண்ணிக்காக காத்திராமல் நஞ்சற்ற உள்ளீடுகளை விவசாயத்திற்கு பயன்படுத்தி எங்கள் நீர் மூலங்களை மீட்டெடுக்க அர்ப்பணிப்போம்.

எங்கள் தொழில்களுக்கும் வாழ்வுக்கும் தேவையான கருவிகளையும் உபகரணங்களையும் தயாரிக்கும் ஆலைகளையும் உலைக்களங்களையும் நிறுவுவோம்.

எமது இளையோரின் ஆற்றல்களை தொழில்சார் துறையில் நெறிப்படுத்தும் பயிற்சிக்கூடங்களையும் தொழில்நுட்ப கல்லூரிகளையும் தனியார் முயற்சிகளாக எங்களுக்கு தேவையான முறையில் நிறுவுவோம்.

தொழில்வழிகாட்டலுக்கும் தொழிலாண்மைப் பெருக்கத்திற்கும் வேண்டிய ஆலோசனைகளையும் சேவைகளையும் வழங்கக்கூடிய நிபுணத்துவ நிறுவனங்களை ஆயிரமாய்ப் பெருக்குவோம்.

வித்துவத்தனத்தின் தந்தக் கோபுரத்தில் இருந்து கனவு காணாமல் மண்ணில் கால்பதித்து எங்கள் கற்றறிவினை உரைகல்லில் தேய்த்து உறுதிசெய்வோம்

அறிவியலும் தொழின்நுட்பமும் எங்கள் இளையோரின் விரல் நுனிகளில் நர்த்தனமாடும் அதிசயத்தை நிகழ்த்துவோம்.

இவையாவும் சாத்தியமற்றதல்ல. ஒரு தசாப்தத்திற்கு முன்பு நிதர்சனமாகியவை.

அன்று சாம்பல், துணிகளை அழுக்குநீக்கும் சவர்க்காரமாகியது. பனங்களி தலைகழுவும் திரவமாகியது. பழைய இரும்புகளும் உலோகங்களும் மீண்டும் பாத்திரங்களாகவும் கருவிகளாகவும் மாறியது.

குப்பிவிளக்கில் எமது பிள்ளைகள் உலகை வென்றனர். உழைப்பே கௌரவமாகியது. உணவினை உற்பத்தி செய்தவனுக்கே முதலிடம் கிடைத்தது.

“இனியொரு விதி செய்வோம்: அதை என்னாளும் காப்போம்”

■

# கடனில் மூழ்கிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதுமே ஏற்பட்டுள்ளன. இலங்கையின் நிலை ஏனைய நாடுகளை விட, சற்று வித்தியாசமாக உள்ளது. வட்டி கட்டுவதற்கு கடன் வாங்க வேண்டிய நிலையில் இலங்கை உள்ளது.



வேலை இழப்பு, வருவாய் இழப்பு, பணவீக்கம், உணவுப் பணவீக்கம் உள்ளிட்ட காரணங்களால் இலங்கை கடும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. இதை உறுதி செய்யும் வகையில் உலக வங்கி சில தரவுகளை வெளியிட்டிருக்கிறது. கடந்த டிசம்பர் மாத நிலவரப்படி, 12.1 சதவிகிதமாக இலங்கையின் பணவீக்கம் உயர்ந்திருக்கிறது. அதே டிசம்பர் நிலவரப்படி, இலங்கையின் உணவுப் பணவீக்கம் 22.1 சதவிகிதமாக உயர்ந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இலங்கை முழுவதும் 5 லட்சத்துக்கும் அதிகமானோர் வறுமைக் கோட்டுக்குக்கீழ் தள்ளப்பட்டிருப்பதாக உலக வங்கியின் தரவுகள் சொல்கின்றன.

இலங்கையின் பணவீக்கம் வரலாறு காணாத அளவுக்கு உச்சம் தொட்டிருப்பதால், கொரோனாத் தொற்றின் காரணமாக பல்வேறு துறைகளும் பாதிப்புகளைச் சந்தித்திருக்கின்றன. அதிலும், இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவிகித பங்களிப்பைக் கொண்டிருக்கும் சுற்றுலாத்துறை கொரோனாவால் முழுவதுமாக முடங்கியிருக்கிறது.

2022 ஆம் ஆண்டுக்குள்ளாக சுமார் 7.3 பில்லியன் அமெரிக்க டொலர் அளவிலான உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களை இலங்கை அரசு திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கிறது. அதிலும் குறிப்பாக, ஜனவரி மாதத்துக்குள்ளாக 500 மில்லியன் டொலர் கடனை திருப்பிச் செலுத்த வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் இலங்கை இருப்பதாகத் தெரிகிறது.

ஜனவரியில் ஒரு வாரம் முடிந்து விட்டது. 500 மில்லியன் டொலரை இலங்கை எப்படி செலுத்தப் போகிறது. எங்கிருந்து இலங்கை கடன் வாங்கப் போகிறது போன்ற மில்லியன் டொலர் கேள்விகளுக்கு பதில் கிடைக்கவில்லை.

சீனாவிடம் அதிக அளவில் கடன்பெற்ற காரணத்தாலும் தவித்துவருகிறது இலங்கை. பல்லாயிரக்கணக்கில் இலங்கை அரசுக்கு கடனளித்திருக்கிறது சீனா. அது போல சில சர்வதேச வங்கிகளிடமும் கடன்பெற்றிருக்கிறது இலங்கை. நாட்டின் பொருளாதாரம் ஆட்டம் கண்டுவரும் நிலையில், கடனை எப்படி அடைப்பது என்று தெரியாமல் திக்குமுக்காடி வருகிறது இலங்கை.

இயற்கை வளங்கள் அதிகம்கொண்ட இலங்கையில், உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதற்கு அதீத கடன் பிரச்சினை தவிர போதிய திட்டமிடல் இல்லாமல் இயற்கை விவசாய முறையைக் கொண்டுவந்ததும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதற்கு ஒரு காரணம் என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். இயற்கை விவசாய முறையைக் கையிலெடுத்த இலங்கை அரசு, இரசாயன உரங்கள் இறக்குமதி செய்வதற்குத் தடை விதித்தது. இதன் காரணமாக உரத் தட்டுப்பாடு ஏற்பட்டு, விளைச்சல்கள் குறைந்தன. எனவே, உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டதற்கு, இலங்கை அரசு முறையாக திட்டமிடாமல், இயற்கை விவசாயத் திட்டத்தை அமுல் படுத்தியதும் ஒரு காரணம் என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள்.

சீனாவுடன் மிக நெருக்காமாகக் கைகோர்த்ததுதான் இந்த நெருக்கடிக்குக் காரணம் எனவும் அரசியல் நோக்கர்கள் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். சீனாவுடன் கைகோர்த்து நெருக்கமாக இருந்ததனால் அமெரிக்க, இந்திய, ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றிடம் இருந்து தேவையான பெருமளவான நிதியைப் பெற முடியவில்லை. சீனாவின் கடன் வலை, பணவீக்கம் ஆகியவற்றிலிருந்து தப்பிக்க ஏனைய நாடுகளின் உதவி இலங்கைக்கு அவசியமாகிறது. அதை நோக்கிப் பயணித்தால் பொருளாதார நெருக்கடியிலிருந்து சற்று வெளிவரலாம் என்கிறார்கள் வல்லுநர்கள்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான ஆலோசனைகளை மூத்த அரசியல்வாதிகள் தெரிவிக்கின்றனர். அவர்களின் ஆலோசனைகள் எவற்றையும் காது கொடுத்துக் கேட்கும் நிலையில் அரசாங்கம் இல்லை. அமைச்சர்கள் வெளியேறப் போவதாகக் கூறுகின்றனர். அமைச்சுப் பதவி பறிக்கப்படுகிறது. அரசாங்கத்தில் இருந்து வெளியேறப் போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மிரட்டுகிறது. அரசாங்கத்துக்குள் இருந்து விமர்சிக்க வேண்டாம் போக விரும்புபவர்கள் போகலாம் என சவால் விடப்படுகிறது. சலூன் கதவு ஞாபகம் அரசியல்வாதிகள் சிலருக்கு வந்து போவதைத் தவிர்க்க முடியவில்லை.

வாங்கிய கடனை திரும்பச் செலுத்த முடியாது இலங்கை திக்குமுக்காடுகிறது. இது போன்றே கடந்த பத்து வருடங்களில் பல நாடுகள் தவித்தன. இன்று அவை ஓரளவு தன்னிறைவு பெற்றுள்ளன. கிரீஸ், ஜமைக்கா, ஈகுவடோர், பாகிஸ்தான், ஆர்ஜென்ரீனா, சைப்ரஸ் ஆகிய நாடுகள் அதிகளவு கடன் வாங்கி அதனைத் திரும்பச் செலுத்த முடியாததால் வங்குரோத்து நிலைக்குச் சென்றன. இப்போது அந்தப் பிரச்சினைகளில் இருந்து விடுபட்டுள்ளன.

நாட்டின் எதிர்காலத்தையும் மக்களின் சுபீட்சத்தையும் கருத்தில்கொண்டு வீண் பிடிவாதத்தை கை விட வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

■

# ஏமாற்றிய ரிஷப் பண்டுக்கு எதிராகப் புகார்


இந்தியா, தென் ஆபிரிக்கா அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் 2 ஆவது டெஸ்ட் போட்டியின் போது நிலத்தில் விழுந்த பந்தை ரிஷப் பண்ட் பிடித்ததால் அவருக்கு எதிராக புகாரளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியின் போது இந்திய அணியின் விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் செய்த தவறு ஒன்று தற்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. தென்னாபிரிக்க வீரர் வேண்டர்டுசைன் ஆட்டமிழந்த விதம் தற்போது சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளது. ஏனெனில் பந்து தரையில் பட்டு பிடித்த பின்னரும் பண்ட் அம்பயரிடம் அவுட் கேட்டார். அம்பயரும் அவுட் என்று முடிவை அறிவித்து விட்டார். துடுப்பாட்ட வீரர் ரிவியூ கேட்காமல் சென்று விட்டார். பின்னர் விக்கெட் விழுந்த உடனே போட்டி உணவு இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. அப்போது அந்த இடைவேளையில் விக்கெட் ரீபிளேவை பார்க்கும்போது பந்து கீழே பட்டு பிடிக்கப்பட்டது தெளிவாகத் தெரிந்தது. இதன் காரணமாக ஆட்டமிழந்த வேண்டர்டுசைன் மீண்டும் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், பந்து பிடிக்கப்பட்டு மிக நீண்ட நேரம் எந்தவித அப்பீலும் செய்யாததால் அவர் ஆட்டமிழந்ததாகவே இறுதியில் கூறப்பட்டது. இதன் காரணமாக போட்டி முடிந்ததும் தென்ஆபிரிக்க அணிக் கப்டன் டீன் எல்கர் இந்த விக்கெட் குறித்து நிர்வாகத்திடம் புகார் அளித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஆபிரிக்க கிண்ண ரிக்கெற்கள் விற்பனை ஆரம்பம்



கமரூனில் 2022 ஆம் ஆண்டு நடைபெறும் ஆபிரிக்க கிண்ணப் போட்டிக்கான டிக்கெட்டுகள் அதிகாரப் பூர்வமாக செவ்வாய்க் கிழமை விற்பனைக்கு வந்தன. போட்டியின் ஏற்பாட்டுக் குழுவின் தலைவரான கமரூனின் விளையாட்டு மற்றும் உடற்கல்வி அமைச்சர் நர்சிஸ் மௌல்லே கோம்பி, டிக்கெட்டுகள் ஆன்லைனிலும் நாடு முழுவதும் நிறுவப்பட்ட கியோஸ்க்களிலும் விற்கப்படும் என்றார்.

“ஆட்கடத்தலைத் தவிர்ப்பதற்கு நாங்கள் போதுமான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். எங்கள் மைதானங்கள் குறைந்த திறன் கொண்டவை என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். நாங்கள் செய்யக்கூடியது எல்லாம், முதலில் வருவோருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் டிக்கெட்டுகள் வழங்கப்படும் என்று கமரூனியர்களுக்கு உறுதியளிக்க வேண்டும்” என்று எரிக் பின்ஃபோன் செய்தியாளர்களிடம் கூறினார்.

போட்டியின் வகை மற்றும் கட்டத்தைப் பொறுத்து டிக்கெட்டுகளின் 3,000 XAF, 20,000 XAF (5 USD, 35 USD)வரை இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

24 அணிகள் பங்கேற்கும் இந்தப் போட்டி ஞாயிற்றுக்கிழமை தலைநகர் யாவுண்டேவில் உள்ள 60,000 இருக்கைகள் கொண்ட ஒலெம்பே மைதானத்தில் நடைபெறும் முதல் போட்டியில் கமரூனை எதிர்த்து புர்கினா பாசோ மோதுகிறது.




# மகிழ்ச்சியில் பங்களாதேஷ்; அதிர்ச்சியில் நியூசிலாந்து

டெஸ்ட் சம்பியனான நியூசிலாந்தை அதன் சொந்த மண்ணில் சாய்த்து வரலாற்று வெற்றியைப் பதிவு செய்துள்ளது பங்களாதேஷ். நியூசிலாந்தில் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நான்கு முறை 400 ஓட்டங்களுக்கு மேல் அடித்து பலம் வாய்ந்த அணிகளைத் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. இந்த டெஸ்ட் போட்டியின் மூலம் பங்களாதேஷ் சில சாதனைகளைப் படைத்துள்ளது.

2010 முதல் நியூசிலாந்துக்குப் பயணம் மேற்கொண்ட அணிகளில் அவுஸ்திரேலியா 4 டெஸ்ட்களில் 4 முறை 400க்கும் அதிகமான ஓட்டங்களை எடுத்துள்ளது. அடுத்த இடத்தில் பங்களாதேஷ் அணி 6 முறை டெஸ்ட்டில் நியூசிலாந்து மண்ணில் ஆடியதில் 4 முறை 400+ ஓட்டங்களை எடுத்துள்ளது. இங்கிலாந்து 7 டெஸ்ட் போட்டிகளில் 3 முறையும், தென் ஆபிரிக்கா 6 முறை டெஸ்ட் ஆடியதில் 2 முறையும் நியூசிலாந்தில் 400+ ஓட்டங்களை குவித்துள்ளது .

முதல் டெஸ்ட் முதல் இன்னிங்சில் பங்களாதேஷ் 176.2 ஓவர்கள் விளையாடி 458 ஓட்டங்கள் எடுத்தது. டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் அதிக ஓவர்களை பங்களாதேஷ் ஆடுவது இது 2 ஆம் முறை. 2013 இல் காலியில் இலங்கைக்கு எதிராக பங்களாதேஷ் 196








ஓவர்கள் விளையாடியது. ஆசியாவுக்கு வெளியே 150 ஓவர்களுக்கும் மேல் விளையாடுவது பங்களாதேஷுக்கு இது 2 ஆம் முறை, முதல் முறை நியூசிலாந்துக்கு எதிராக வெலிங்டனில் 2017 இல் 152 ஓவர்கள் விளையாடியபோது ஷாகிப் அல் ஹசன், முஷ்பிகுர் ரஹிம் ஆகியோர் அதிரடி காட்டினார்கள்

நியூசிலாந்தில் கடைசியாக 175 ஓவர்களுக்கும் மேல் விளையாடிய அணி பாகிஸ்தான், 2009 இல் மெக்லீன் பார்க்கில் 193 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி டெஸ்ட்டை சமப்படுத்தியது. 2017க்குப் பிறகு உள்நாட்டு டெஸ்ட்டில் நியூசிலாந்து கொடுத்த அதிக முன்னிலை 130 ஓட்டங்கள்.

வெளிநாட்டு டெஸ்ட்டில் இதற்கு முன்பாக பங்களாதேஷ் அதிகம் எடுத்த முன்னிலை ஜிம்பாப்வேயில் ஹராரேயில் கடந்த ஆண்டு 192 ஓட்டங்கள்.

பங்களாதேஷின் டாப் 8 வீரர்கள் முதல் இன்னிங்சில் 50க்கும் அதிகமான பந்துகளைச் சந்தித்தனர். பங்களாதேஷ் டெஸ்ட் வரலாற்றில் முதல் முறை.

முதல் இன்னிங்சில் நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர்கள் 890 பந்துகளை வீசினர். 10 விக்கெட்டுகளையும் வேகப்பந்து வீச்சாளர்கள் கைப்பற்றிக் கொடுத்த அதிகபட்ச ஓட்டங்களாகும் இது. 2007-க்குப் பிறகு டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் வேகப்பந்து வீச்சாளர்கள் அதிக பந்துகளை வீசியதும் இந்த டெஸ்ட் போட்டியில்தான்.



# பதுங்கித் தாக்கும் கடலடி 'ட்ரோன்!'

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டால், எதிரி நாட்டினரிடம் விமானிகள் சிக்கிக்கொள்ளும் அபாயம் உண்டு. இதைத் தவிர்க்கவே ஆளில்லாமல் பறந்து தாக்கும் 'ட்ரோன்'கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதற்கென பல ஆயிரம் கோடி டொலர்களை அமெரிக்காவின் பாதுகாப்பு அமைப்பான 'தார்ப்பா' செலவளித்திருக்கிறது. அதற்கு ஏற்ற நல்ல பலன்களையும் கடந்த இருபது ஆண்டுகளில் அது அறுவடை செய்துள்ளது.

தற்போது, நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு மாற்றாக, கடலடி ட்ரோன்களை உருவாக்க நினைக்கிறது தார்ப்பா. அதற்கான முதற்கட்ட விண்ணப்பங்களைச் சரிபார்த்து, இரண்டாம் கட்டமாக, இரண்டு தனியார் பாதுகாப்பு தொழில்நிறுவனங்களுக்கு ஆணை வழங்கியுள்ளது.

கடலுக்கடியில் மனிதர்கள் இன்றி தானாகவே பயணிக்கும் திறன் கடலடி தாவரங்கள், பெரிய மீன்களிடம் சிக்காமல் செல்லுதல், பாறைகளின் இண்டு இடுக்குகளில் மாட்டிக் கொள்லாமல் வேகமாகப் பயணித்தல். தேவைப்பட்டால் தரைதொட்டு பதுங்கியிருத்தல். குண்டுகளைச் சுமந்து சென்று இலக்கை நெருங்கித் தாக்குதல். இப்படிப் பல போர்ச் செயல்களை, மனித உதவியின்றி செய்து முடிக்கும் திறன் அந்த ட்ரோன்களுக்கு இருக்க வேண்டும்.

மேலும், கடலடி நீரோட்டங்களை வைத்தே அவை மின்கலன்களுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்ளவேண்டும். மின்சாரத்தில் இயங்கும் நீர்மூழ்கி ட்ரோன் என்பதால், அது தனது பராமரிப்பைத் தானே பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும், எதிரிகளின் ரேடார் போன்றவற்றில் சிக்காமல், பதுங்கித் தாக்கும் திறமையும் அதற்கு இருக்க வேண்டும்.

இத்தனையையும் செய்து காட்டும் கடலடி ட்ரோனுக்குப் பல பில்லியன் டாலர்கள் ஒப்பந்தம் கிடைக்கும் என தார்ப்பா அறிவித்திருக்கிறது.




# ஒற்றுமை



முன்னொரு காலத்தில் வெங்கடேஸ்வரன் என்ற குறுநில மன்னன் "அரிமாதேசம்" என்ற நாட்டினை ஆண்டு வந்தான். அவனது மனைவி இராஜேஸ்வரி மிகவும் நற்பண்புள்ளவள். அவர்களுக்கு அமுதா, கவிதா என்னும் இரு பிள்ளைகள் இருந்தனர். இருவரும் வில்வித்தை, குதிரை ஏற்றம் உட்படப் பல கலைகளில் சிறந்து விளங்கினார்கள். மூத்தவளான அமுதாவிற்குப் பெற்றோர் தன்னைவிடக் கவிதாவின் மீது அதிக அன்பாக இருப்பதைப் போலத்தோன்றியது. எனவே, கவிதா மீது அமுதா வெறுப்புக் கொண்டாள். கவிதாவோ சகோதரியை உயிரை விட மேலாக நேசித்தாள். பெற்றோரும் கவிதாவிற்குப் பல புத்திமதிகளைக்கூறினார்கள். இருவரையும் ஒரே மாதிரியே நடத்துவதையும் அன்பு செலுத்துவதையும் தெளிவுபடுத்தினர்கள். எனினும் அமுதா எவற்றையும் காதிலே வாங்கவில்லை.

ஒருநாள் அமுதாவும் கவிதாவும் காட்டு வழியே பயணித்தனர். தாகமெடுத்தபோது நீர் அருந்த ஆற்றங்கரையை அடைந்தனர். நீர் அருந்திவிட்டுத் திரும்பிய கவிதா தனது சகோ தரிக்குப் பின்னால் பாம்பு ஒன்று கொத்துவதற்குத் தயாராக இருப்ப தைக் கண்டாள். வேகமாகச் சென்று தனது உயிரைப் பற்றிக் கவலை கொள்ளாமல். பாம்பைப் பிடித்துத் தூர வீசினாள். நல்ல வேளையாகத் தலையிலே பிடித்ததால் பாம்பு கவிதாவைக் கடிக்கவில்லை. கவிதாவின் செயலைக்கண்டு அமுதா அதிர்ச்சி அடைந்தாள். தனது தவறை உணர்ந்தாள். அன்றிலிருந்து இருவரும் ஒற்றுமையாகவும் மகிழ்வாகவும் வாழ்ந்து வந்தனர்.


V.டனுசியா
தரம் - 09
யா/வடமராட்சி
மத்திய மகளிர் கல்லூரி

## விடுகதைகள்

01. மூவராய் சேர்வார்கள் வண்ணம் தீட்டுவார்கள்?
**வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு**
02. பட்டுப்பை நிறைய பவுண் காசு அது என்ன?
**மிளகாய்**
03. தலையைச் சீவினால் தாளிலே மேய்வான் அவன் யார்?
**பென்சில்**
04. வெள்ளை மாளிகையில் மஞ்சள் புதையல் அது என்ன?
**முட்டை**
05. செய்தி வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே. அது என்ன?
**தொலைபேசி**




# அன்புத் தம்பி



எந்தன் அன்புத் தம்பி
எந்தன் உயிர் தம்பி
அழகான தம்பி
அன்பு உள்ள தம்பி
எந்தன் சொல் கேட்பான்
என்னை நன்கு மதிப்பான்
அவனுக்காக வாழ்வேன்
அன்பை அள்ளிக் கொடுப்பேன்

நிக்ஷித்

சிறுவர் பகுதிக்கான
உங்கள் சொந்த ஆக்கங்களை
எங்களுக்கு உடனே
அனுப்பி வையுங்கள்



தீம்புனல்
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542

# உதவும் காந்தப்புலம்!



கடலுக்கடியில் நிகழும் நில நடுக்கமே 'சுனாமி' எனப்படும் ஆழிப் பேரலைக்குக் காரணம். ஆழிப் பேரலை ஏற்படும் பகுதியில், அதற்கு முன்பாக, பூமியின் காந்தப்புலத்தில் மாறுதல்கள் ஏற்படும். இது விஞ்ஞானிகளுக்குத் தெரியும். ஆனால், காந்தப்புல மாறுதலுக்கும், கடல் அலைகள் மட்டம் உயர்வதற்கும் உள்ள தொடர்பை விஞ்ஞானிகளால் இதுவரை கண்டறிய முடியவில்லை.

அண்மையில், ஜப்பானிலுள்ள கியோட்டோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள், 2009 இல் சமோவாவிலும், 2010 இல் சிலியிலும் நிகழ்ந்த ஆழிப் பேரலைகளின் தரவுகளை வைத்து ஆராய்ந்தனர். அதன்படி, சுனாமிக்கு சில நிமிடங்கள் முன்பாக அந்தக் கடலடி நிலப்பரப்பில் புவிகாந்தப்புலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் நேர்ந்ததை அவர்கள் கண்டறிந்தனர்.

அந்த மாற்றத்தின் அளவை வைத்து, கடலலைகள் எந்த அளவுக்கு உயர்ந்து கரை நோக்கிச் செல்லும் என்பதையும் கணிக்க முடியும் என்று அவர்கள் நிறுவியுள்ளனர்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 08.01.2022 அன்று வெளியிடப்பட்டது.